# மீள்பார்வை


இலங்கை முஸ்லிம்களின் தனித்துவக் குரல்

இதழ் - 231 ★ 07 ஒக்டோபர் 2011 ★ வெள்ளிக்கிழமை ★ துல் கஃதா 1432 ★ விலை 30.00









03

எங்களுக்காகப் பேசுகின்ற மாற்று இன சகோதரர்களை நாம் உருவாக்க வேண்டும்


என்.எம். அமீன் - பிரதம ஆசிரியர் நவமணி



இலங்கை முஸ்லிம்களின் முதல் மொழி/தாய்மொழி எது?

ஒபாமா: சியோனிஸத்தின் புதிய தலைவர்!!

11



# முஸ்லிம் தனியார் சட்டத்தில் விரைவில் திருத்தம்

முஸ்லிம் தனியார் சட்டத்தில் விரைவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக நீதியமைச்சர் றவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். குறிப்பாக முஸ்லிம் விவாகம், விவாகரத்துச் சட்டங்களில் பல்வேறு வகையான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து நீண்ட காலமாகப் பேசப்பட்டு வந்தது. இது தொடர்பாக பலரும் அவ்வப்போது வேண்டுகோள் விடுத்து வந்துள்ளனர்.




முஸ்லிம் தனியார் சட்டம் மிகவும் பழமை வாய்ந்ததாக உள்ளது. புதிய கால சூழலுக்கு ஏற்ப அதன் உள்ளடக்கத்தில் பல முக்கியமான மாற்றங்கள் அவசியப்படுவதை உணர்ந்து நீதிபதிகள், சட்டத்தரணிகள், உலமாக்கள், புத்திஜீவிகள் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது. அமைச்சர் ஹக்கீம் நீதியமைச்சைப் பொறுப்பேற்க முன்பே இக்குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக்குழுவின் பரிந்துரைகள் கையளிக்கப்பட்டதும் இது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இன்னும் சில தினங்களில் இந்தப் பரிந்துரைகள் தன்னிடம் கையளிக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். தனது அமைச்சின் கேட்போர் கூடத்தில் உலமாக்களையும் கதீப்மார்களையும் சந்தித்தபோதே அமைச்சர் இக்கருத்துகளை வெளியிட்டார்.


தற்போது நாட்டில் 65 காழி நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இவற்றுக்கான நீதிபதி நியமனங்கள் நீதிச் சேவை ஆணைக் குழுவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. ஏனைய நீதிமன்றங்களைப் போன்று ஒழுக்காற்று நடவடிக்கைகளும் ஆணைக் குழுவினாலேயே முன்னெடுக்கப்படுகின்றன.■

## ஹரீஸ், பைஸல் காஸிம் இடையே கருத்து முரண்பாடு



கல்முனை மாநகர சபைத் தேர்தல் களத்தில் மு.கா. வேட்பாளர்களிடையே நிலவிய உள்முரண்பாடுகளை ஊடகங்கள் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்தன. கட்சி வேட்பாளர்கள் வெவ்வேறு குழுக்களாக நின்று தேர்தலை எதிர்கொள்வதாக களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்போது மு.கா. பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரீஸுக்கும் பைஸல் காஸிமுக்கும் இடையில் முரண்பாடுகள் வெடித்துள்ளன. (பக்.19)

## ஹஜ் கோட்டா 3800 மட்டுமே



இலங்கைக்கான ஹஜ் கோட்டா 4800 அல்ல, 3800 மட்டுமே என முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் வை.எல்.எம். நவவி தெரிவித்துள்ளார். அறப் நியூஸ் செய்தியை அடிப்படையாகக் கொண்டு கடந்த மீள்பார்வையில் இடம்பெற்ற 4800 என்ற செய்தி தவறானது. இதற்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

## ஜே.வி.பி. அரசியலில் இனி ஒரு பொருட்டல்ல



ஜே.வி.பி. இனி அரசியலில் ஒரு பொருட்டல்ல என சிறிலங்கா சுதந்திரக் கட்சி நம்புகிறது. கட்சியில் தற்போது ஏற்பட்டிருக்கும் உள்முரண்பாட்டின் முடிவு எவ்வாறு அமைந்தாலும், இதில் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படப் போவதில்லை.

''அதன் தலைவர்கள் பெரிதாகப் பேசினாலும் ஜே.வி.பி. அரசியல் ரீதியாக முற்றுப் பெற்று விட்டது'' என ஆளுந் தரப்பு எம்.பி. மஹிந்த அமரவீர கூறியுள்ளார். இனிமேல் கூட்டணி அமைக்கப் போவதில்லை என ஜேவிபி வெளியிட்டிருந்த தீர்மானம் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இன்றைய அரசியல் சூழலில் தாம் எங்கு இருக்கிறோம் என்பதைக்கூட அவர்கள் வசதியாக மறந்துவிட்டனர் எனவும் அவர் கூறியுள்ளார்.




''ஜே.வி.பி.யிலுள்ள பிரிவினைவாதிகள் வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் வீசப்படுவர். இந்தப் பிரச்சினையை கட்சி இன்னும் சில வாரங்களினுள் கடந்து விடும்.''

-பிமல் ரத்நாயக்க

(பத்திரிகை நேர்காணல் ஒன்றில்)

## விவசாய இரசாயனங்களால் குடிநீர் மாசடைகிறது



நாட்டிலுள்ள ஆறு, கிணறுகளிலிருந்து பெறப்படும் குடிநீர் கட்டுப்பாடற்ற நச்சு விவசாய இரசாயனப் பாவனையால் மாசுபடுத்தப்படுகிறது என பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

உச்சபட்ச இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. கிராம மக்கள் சுத்தமான குடிநீரைப் பெறுவதில் பலருக்கும் அக்கறை குறைவாகவே உள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.




# மறக்க முடியாத மனிதரும் மறுமலர்ச்சியில் அவரின் அரசியல் மைல் கற்களும்

''என்னை சிறைபிடித்ததும் சித்திரவதைப்படுத்தியதும் நியாயம்தான், அது அல்லாஹ்வின் நாட்டம்தான் என்றால் நான் சஞ்சலப்படவில்லை. என்னை சிறைபிடித்ததும் சித்திரவதைப்படுத்தியதும் ஜாஹிலிய்யத்துத்தான் என்றால் நான் அல்லாஹ்வின் எதிரிகளிடம் மன்னிப்புக் கேட்கத் தயாராக இல்லை. கல்வித் துறையை முழுமையாக இஸ்லாமிய மயமாக்கும் இலட்சிய ஆட்சியின் கீழ் மட்டுமே அமைச்சர் பதவிகளைப் பற்றி சிந்தித்திட இயலும்''.

மெய் சிலிர்க்க வைக்கும் இந்த வார்த்தைகளின் சொந்தக்காரர் ஷஹீத் ஸெய்யித் குத்ப் அவர்களே. வரலாற்றில் களங்கப்படுத்த முடியாத சிறப்பான ஒரு சிந்தனையாளரான இவரது வாழ்வு, பணி, மரணம் என்பன எமக்கு முன்னுதாரணமாகக் காணப்படுகின்றன.

1966ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25ம் திகதி அதிகாலையில் பிர்அவ்னின் வாரிசுகள் தூக்குமேடையிலேற்றி இவரின் வாழ்வுக்கு முற்றுப்புள்ளியிட நினைத்தாலும், இவர் தூவிய புரட்சி வித்துக்கள் வீழ்த்த முடியாத வைர விருட்ஷங்களாய் இஸ்லாத்தின் எதிரிகளை, அவர்களின் கொள்கைகளை உடைத்தெழுந்து கொண்டே இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அந்த வகையில் சிந்தனைகளால் இறவாத ஒரு மனிதர்தான் ஷஹீத் ஸெய்யித் குத்ப்.

ஆயிரம் துண்டுப்பிரசுரங்களும் நூறு மேடைப் பேச்சுக்களும் சாதிக்காததை ஒரு துப்பாக்கித் தோட்டா சாதித்துவிடும் என்ற கருத்துடைய லெனினியவாதிகளின் பிரதிநிதிகளாக எகிப்தில் தொழிற்பட்ட மிக மோசமான மனித வடிவங்களுக்கு இவரது பேச்சும் பேனாமுனையும் அணுவாயுதங்களை விடவும் அச்சப்பட வைத்தன. ஏனெனில், முட்டாள் தனத்தின் முகத்திரையை கிழிக்கும் இவரது பேச்சும் எழுத்தும் இஸ்லாத்திற்கு எதிரானவர்களை சவாலுக்கு அழைத்தன.

எகிப்திய சிறையிலிருந்து ஷஹீத் ஸெய்யித் குத்ப் (றஹ்) அவர்கள் எழுதிய 'மைல் கற்கள்' என்ற நூல்தான் அவர்கள் தூக்கிலிடப்படுவதற்குக் காரணமாகியது. பன்னிரண்டு அத்தியாயங்கள் கொண்ட இந்த நூலின் இறுதி அத்தியாயமான 'இதுதான் பாதை, இதுதான் பயணம்' எனும் தலைப்பில் அல்குர்ஆனின் ஒரு வரலாற்று சம்பவத்தை ஆதாரப்படுத்துகின்றார்கள். உண்மையான விசுவாசிகள் பற்றிய செய்தியே அது. அசத்தியத்தை எதிர்த்து நின்ற அந்த வீரபுருஷர்களை காலத்தால் அழித்துவிட முடியாது என்பதை அல்லாஹ் ஸூறா அல்-புரூஜில் குறிப்பிடுகிறான்.

அந்தவகையில் இறை நம்பிக்கையில் நிலைத்துநின்று அந்தக் கொள்கைக்காக தம் உயிரையும் கொடுக்கும் மனிதர்களுக்கு மரணம் என்பது அல்லாஹ் அளிக்கும் வாழ்வு. ''விசுவாசிகளே! அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர்களை இறந்தவர்கள் என்று நீங்கள் கருத வேண்டாம். அவர்கள் நிச்சயமாக உயிரோடு இருக்கிறார்கள்''. (அல்குர்ஆன் 3 : 169)

ஷஹீத் ஸெய்யித் குத்ப் (றஹ்) குப்ரியத்தின் பிரதிநிதிகளால் மட்டும் எதிர்க்கப்படவில்லை. மாற்றமாக தங்கள் அதிகாரத்தையும் பதவியையும் தக்க வைக்க முஸ்லிம் பெயர் சுமந்தவர்களும் எதிர்க்க முற்பட்டனர். எனினும், அவர் பேசிய சத்தியம், அவரது மரணம் தாண்டியும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஏனெனில் சத்தியத்தை யாராலும் அழிக்க முடியாது என்பது நாம் அறிந்ததே.

எம்.யூ. அப்துர் ரஹீம்,
மள்வானை.

கருத்துக்களம்

சொல்வதை தெளிவாகச் சொல்லுங்கள்

கருத்துக் களத்தில் எழுதப்படுவன வாசகர்களின் கருத்துக்களே. மீள்பார்வையின் உத்தியோகபூர்வ கருத்தாக அவை இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை (ஆ-ர்)

மீள்பார்வைக்கு SMS மூலமாக வாசகரின் கருத்தைப் பெறும் முயற்சிக்கு நீங்கள் அளித்துவரும் ஆதரவுக்கு ஜஸாகுமுல்லாஹ். எனினும், வெறுமனே மீள்பார்வையை வாழ்த்துவதோடு மட்டும் நின்றுவிடாது வெளிவரும் செய்திகள், ஆக்கங்கள் தொடர்பான உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை எதிர்பார்க்கிறோம். (ஆ-ர்)




''இப்படியும் வரும்: அவதானம் தேவை'' என்ற தஃவா பார்வையில் வெளியான ஆக்கம்,மிகவும் பொருத்தமானதாக இருந்தது.

மஹ்ரூப் மௌஜூத்-மூதூர்

இதழ் 229இல் வெளியான யாகூத் நளீம் அவர்களுடனான நேர்காணலில் ஜாமிஆ நளீமிய்யா பற்றி ஒரு கேள்வியேனும் கேட்காதது ஏன்?

அபூ உமர்

தயவுசெய்து மீள்பார்வையின் முதலாம் மற்றும் இறுதிப் பக்கங்களில் சிங்கள அடிப்படைவாதிகளதும் கடும்போக்குவாதிகளதும் புகைப் படங்களையும் செய்திகளையும் பிரசுரித்து அப்பக்கங்களை வீணடிக்க வேண்டாம். அது எமக்கு அவசியமற்றது என நினைக்கிறேன். யாரைத் திருப்திப்படுத்துவதற்காக இவ்வாறு செய்கிறீர்கள்?

ஷிபா - கெலிஓயா

மீள்பார்வை தந்த 'பிரோஸ் கரைவலை இழுத்துக் கொண்டிருக்கின்றான்' என்ற குருங்கதை வாழ்வியலின் வலியைச் சொல்லி நின்றது.

எம். அலி

இதழ் 230ல் பிரசுரமான களுத்துறை வாசகரின் கருத்தில் எமக்கு உடன்பாடில்லை. ஏனெனில், இதழ் 229ல் வெளியான குறித்த கவிதையிலோ புகைப்படத்திலோ எந்தவித குறையும் சொல்ல முடியாது. அவரின் புரிதலில்தான் பிழை இருப்பதாக நினைக்கிறேன்.

ஜே. பிரோஸ்கான் - கிண்ணியா

மீள்பார்வையை ஒவ்வொரு பாடசாலையிலும் விற்பனை செய்வதற்கு முயற்சிக்கவும். இது நிச்சயம் செயற்திறன் கொண்ட எதிர்கால சந்ததியினரை கட்டியெழுப்ப உறுதுணையாக இருக்கும்.

வஸீர் - பொலன்னறுவை

ராவய பத்திரிகையின் ஆசிரியர் தலைய்ங்கத்தை மீள்பார்வையில் பிரசுரித்தது இன்றைய காலத்தின் தேவை.

மும்தாஜ் - இறக்காமம்

நான் மீள்பார்வையைத் தொடர்ந்து படிப்பவன். மீள்பார்வை -இஸ்லாமிய பத்திரிகைகளுக்கு முன்மாதிரி, ஒழுக்கம் போதிக்கும் ஆசான், தாஈக்களுக்கு பயிற்சிப் பாசறை, அன்பளிப்பு செய்ய நல்ல பரிசுப் பொருள்.

பர்ஸான் - கொழும்பு 12

நான் மீள்பார்வையின் தொடர் வாசகன். Students @ மீள்பார்வை பகுதியில் பிரசுரமான தோல்விகளால் துவண்டு விட வேண்டாம் என்ற ஆக்கம் என்னுள் தன்னம்பிக்கையை உண்டுபண்ணியது. மென்மேலும் இது போன்ற ஆக்கங்கள் வெளிவர வேண்டும் என்பதே எனது விருப்பம்.

ஆதிப் ரியாஸ் - பேருவளை

வரலாற்று நாயகர் எம்.எச்.எம். அஷ்ரப்' என்ற கட்டுரை என் மனதை மிகவும் கவர்ந்தது. மேலும் மர்ஹூம் அஷ்ரப் அவர்களைப் பற்றிய தகவல்களை எதிர்பார்க்கிறேன். பிரசவ அறையில் கின்ற சத்தங்கள் என்ற கவிதையை விமர்சித்த வாசகரின் கருத்தை நான் மறுக்கிறேன்.

மீள்பார்வை வாசகி - காலி

# ஒவ்வொரு முஸ்லிம் கிராமத்திலும் ஒவ்வொரு நூல் நிலையம் அமைப்பதன் அவசியம்

இன்று முஸ்லிம் சமூகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கெல்லாம் மூல காரணமாக இருப்பது அறிவின்மை -கல்வி வளர்ச்சியின்மை ஆகும். அறிவின்றி எவ்வளவுதான் வணக்கம் புரிந்தாலும் அவ்வணக்கத்தினால் பூரண பலன் கிடைக்கப் போவதில்லை. சமூகத்தில் மாற்றம் நிகழப் போவதில்லை.

எனவே, இன்றைய முஸ்லிம்கள் இஸ்லாத்தைப் பற்றிய பூரண அறிவு பெற ஒரே வழி இஸ்லாமிய அறிவு நூல்களை வாசிப்பதே. ஆனால், ஒவ்வொரு வீட்டிலும் எல்லா இஸ்லாமிய நூல்களையும் வாங்கி வாசிக்க வைப்பது பொருளாதார ரீதியில் மிகவும் கஷ்டமானது. அதற்கு ஒரே வழி ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிவாசல் கட்டப்படுவது போன்று ஒரு நூல் நிலையமும் கட்டப்பட வேண்டும். இதற்காக ஊர் மக்களும், நிதியுதவி வழங்கும் ஏனைய ஸ்தாபனங்களும் உதவ முன்வர வேண்டும்.

இந்த மாற்றம் ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுமாயின் மக்கள் அறிவு மட்டத்தில் உயர்ந்து விடுவர். இவ்வாறு நிறுவப்படும் கிராம நூல் நிலையத்தில் அல்குர்ஆன் மொழிபெயர்ப்பு, ஹதீஸ் விளக்கம், இஸ்லாத்தின் அடிப்படைகள் பற்றிய ஆய்வு நூல்கள், டொக்டர் ஸாகிர் நாயிக் போன்ற அறிஞர்களின் இறுவட்டுகள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமாக இருப்பின் சமூகத்தில் அறிவியல் ரீதியான மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இஸ்லாமிய உலகத்தைப் பற்றிய நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஒவ்வொரு கிராம நூல் நிலையத்திலும் இளைஞர், முதியோர் அனைவருக்கும் வாசிக்க வைத்திருப்பின் பெரும் பயன் கிடைக்கும்.

இஸ்லாமிய அறிவு எனும் போது உலக அறிவும் சேர்ந்தே வருகின்றது. வெறுமனே மார்க்க அறிவு மட்டும் போதியதன்று. நடைமுறை வாழ்க்கை பற்றிய பொது அறிவு கட்டாயம் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் இருப்பது அத்தியவசியமாகும்.

எனவே, ஒவ்வொரு முஸ்லிம் கிராமம் தோறும் ஒவ்வொரு இஸ்லாமிய நூல் நிலையம் உருவாக்க முஸ்லிம் சமூகம் முன்வர வேண்டும். முஸ்லிம் தலைவர்கள் இதற்காகத் திட்டம் வகுக்க வேண்டும்.

கலாபூஷனம்
எம்.வை.எம். மீஆத்

## சில்மியாபுரவில் கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு விழா

பதுளை, சில்மியாபுர பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபையின் ஏற்பாட்டில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா கடந்த மாதம் 23ம் திகதி சில்மியாபுர பள்ளிவாசல் தலைவர் ஏ.சி.எம் றாஸிக்கின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் பைஸல் காஸிம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். மேலும் இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் தாமிந்த புத்ததாஸ, மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். புத்ததாஸ மற்றும் வெலிமடை பிரதேச சபை உறுப்பினர் ஏ.எம். இல்யாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதில் எம்.எப்.சி.டி. மற்றும் ஜமாஅத்தே இஸ்லாமி நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பில்
அறை வாடகைக்கு




Al Haj S. Husain
192/29 C, Bandaranayake Mawatha, Colombo 12.
Mobile: 071 6311608

# இலங்கை முஸ்லிம்களின் முதல் மொழி/தாய்மொழி எது?

## நமது சமூகத்தின் மொழிப் பிரச்சினைகள் குறித்த ஒரு கவனக் குவிப்பு

சிராஜ் மஷ்ஹூர்

ஒரு நபர் பிறப்பிலிருந்து கற்றுக்கொள்ளும் மொழியை முதல் மொழி (First Language) என மொழியியலாளர் அழைப்பர். பொது வழக்கில் இதனை தாய் மொழி (Mother Tongue) எனக் குறிப்பிடுவதுண்டு. இந்த வகையில் இலங்கை முஸ்லிம்களின் முதல் மொழி எது என்ற விடயம் குறித்து ஆராய்வது காலப் பொருத்தமானது.

இலங்கை முஸ்லிம்களிடையே தமிழ் நீண்டகாலமாக செல்வாக்கு மிக்க மொழியாக இருந்து வருகிறது. இன்றுவரையில் மிகக் கணிசமான முஸ்லிம்களது தாய் மொழியாக இதுவே இருந்து வருகிறது. பிறப்பிலிருந்து- குறிப்பாக வீட்டுச் சூழலில்- ஒரு குழந்தை பெறும் மொழியாக நீண்ட காலமாக தமிழே இருந்து வந்தது என்பது இதன் அர்த்தமாகும்.

ஆனால், அண்மைக் காலமாக இலங்கை முஸ்லிம்களுள் ஒரு குறிப்பிட்ட தொகையினர் தமிழை தமது முதல் மொழியாகக் கொள்ளாத நிலை காணப்படுகிறது. குறிப்பாக, ஆங்கிலத்தை முதல் மொழியாகக் கொண்ட ஒரு தலைமுறை உருவாகி வருகிறது. இவர்கள் நகர்ப்புற மத்திய தர வர்க்கத்தை அல்லது உயர் மத்திய தர வர்க்கத்தைச் சார்ந்தவர்கள்.


கல்வி, அறிவு, புதிய உலகப் போக்கு, சமூக அங்கீகாரம் போன்ற காரணிகள் இதற்கு பின்னூக்கியாக நின்று தொழிற்படுகின்றன. அத்தோடு தாம் வாழும் சமூக சூழலில் தமிழைப் பேசியாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இவர்களுக்குக் கிடையாது.

மொழி வாழும் சூழலுடன் மிகவும் பின்னிப் பிணைந்த ஒன்று. அத்தோடு சமூக, பொருளாதார, அரசியல் காரணிகளும் இதற்கு பங்களிக்கின்றன. இந்த வகையில்தான், சிங்கள மொழி இதேபோன்ற நகர்ப்புற மத்திய தர வர்க்கத்தினரிடையே படிப்படியாக செல்வாக்குப் பெற்று வருகிறது. அதற்கான பலமான நியாயங்களும் காணப்படுகின்றன.


நாட்டின் வடக்கு கிழக்கிற்கு வெளியே குறிப்பாக மத்திய, மேற்கு, தெற்கு, வடமேற்கு மாகாணங்களில் தமிழ் மொழி மூல பாடசாலைகளின் தரம் குறித்து பெற்றோர் தீவிரமாக சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர். இதன் காரணமாக ஏறத்தாழ 20 வீதமான முஸ்லிம் மாணவர்கள் சிங்கள மொழி மூலம் கல்வி கற்கின்றனர். இத்துறையில் சரியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுமாயின், இது பற்றிய துல்லியமான தகவல்களைப் பெறலாம்.

நகர்ப் புற மத்திய தர வர்க்க முஸ்லிம்களிடையே இரு மொழிப் பண்பு அதிகரித்து வருகிறது. தந்தை அல்லது தாய் இரு மொழிகளைப் பேசும்போது குழந்தையும் அவ்விரு மொழிகளையும் ஏக காலத்தில் பெறுகிறது. இவ்வாறான சூழலில் இரண்டு முதல் மொழிகள் என்ற நிலை தோன்றுகிறது.

பரவலாக அவதானிக்கப்படும் இந்த மொழி தொடர்பான யதார்த்தம் முஸ்லிம் சமூகத்தில் அவ்வப்போது பேசப்படத்தான் செய்கிறது. எனினும், இதுபற்றிய கருத்தூன்றிய கவனிப்போ, சீரியஸான ஆய்வு முயற்சிகளோ போதியளவு முன்னெடுக்கப்படவில்லை.




தமிழ் பேசும் முஸ்லிம்கள், சிங்களம் பேசும் முஸ்லிம்கள் என்று நிரந்தரமாகப் பிரிந்துவிடும் நிலை எதிர்காலத்தில் தோன்றும் என ஏ.எம்.ஏ. அஸீஸ் ஆருடம் கூறினார். முஸ்லிம்கள் தமிழையே தாய்மொழியாகப் பின்பற்ற வேண்டும் என்பது அவரது கருத்தாக இருந்தது. ஆனால் கால மாற்றம் இதனைத் தெளிவாக மீளாய்வுக்கு உட்படுத்த எம்மை நிர்ப்பந்தித்திருக்கிறது.



தமிழ் பேசும் முஸ்லிம்கள், சிங்களம் பேசும் முஸ்லிம்கள் என்று நிரந்தரமாகப் பிரிந்துவிடும் நிலை எதிர்காலத்தில் தோன்றும் என ஏ.எம்.ஏ. அஸீஸ் ஆருடம் கூறினார். முஸ்லிம்கள் தமிழையே தாய்மொழியாகப் பின்பற்ற வேண்டும் என்பது அவரது கருத்தாக இருந்தது. ஆனால் கால மாற்றம் இதனைத் தெளிவாக மீளாய்வுக்கு உட்படுத்த எம்மை நிர்ப்பந்தித்திருக்கிறது.

1956ல் தனிச் சிங்கள சட்டம் அமுல்படுத்தப்பட்டபோது தென்னிலங்கை முஸ்லிம் அரசியல் தலைமைகள் சிங்கள அரசியல் தலைமைகளைச் சார்ந்திருந்தன. வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் தமிழின் மீது அதீத ஆர்வம் கொண்டிருந்தனர். இதனை அரசியல் பின்புலத்தில் மட்டும் நின்றே பலரும் விமர்சித்து வந்திருக்கின்றனர்.

ஆனால், இதற்குப் பின்னாலுள்ள சமூக சூழல், இடஅமைவு காரணமான மொழிச் செல்வாக்கு என்பன பற்றிய சமூகவியல் பார்வை இதுவரை வெளிவராத வேறு பல நியாயங்களை வெளிச்சம் போட்டுக் காட்டக்கூடும். இன்னொரு புறம் முஸ்லிம்களை தமிழர்களாக அடையாளம் காட்டும் தமிழ் மேலாதிக்கப் பார்வையை தகர்த்தெறிய வேண்டிய அரசியல் தேவை முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது.

இந்தப் பின்னணியில் நாம் தமிழர் அல்ல என்ற வாதத்தை முஸ்லிம்கள் பலமான சான்றுகளினூடாக நிறுவினர். எனினும், தமது தனித்துவத்தைப் பேணுவதற்கு மொழி அடையாளம் தொடர்ந்தும் ஒரு தடையாக இருப்பதை முஸ்லிம்கள் விரும்பவில்லை.

இந்நிலையில், அறபுமொழியை நோக்கித் திரும்ப வேண்டும் என்ற வாதம் அவ்வப்போது முன்வைக்கப்பட்டு வருகிறது. முஸ்லிம்கள் அல்குர்ஆனை ஓதுவதற்காக அறபு மொழியை வாசிக்கக் கற்பதை மார்க்கக் கடமையாகப் பேணி வருகின்றனர். இப்போது பொதுவாக ஏற்பட்டுள்ள இஸ்லாமிய விழிப்புணர்ச்சி காரணமாக அறபு மொழியை பொருளுணர்ந்து கற்கவும் பேசவும் வேண்டும் என்ற ஆவல் அதிகரித்துள்ளது.

சிலர் இப்போது சோனக மொழி என்று பேசி வருகின்றனர். இந்த சோனக மொழி என்ற வாதம் தமிழின் திரிபுபட்ட ஒரு வடிவத்தைச் சொல்கிறதே அன்றி வேறல்ல. அதில் தமிழர்களால் புரிந்துகொள்ள முடியாத பல தனித்துவக் கூறுகள், குறிப்பான அறபுச் சொற் பாவனை போன்றன கலந்திருப்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழியியல் அளவுகோல்களின்படி அதனை தனியொரு மொழியாக் கொள்ள முடியாது.

முஸ்லிம் சமூகத்தில் சிறுபான்மையாக உள்ள மேமன் சமூகத்தவர் கச்சி மொழியை தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். மலே முஸ்லிம்கள் மலாய் மொழியைப் பேசி வருகின்றனர். எனினும், இவர்களுள் கணிசமானோர் தமிழையும் சிங்களத்தையும் அறிந்து வைத்துள்ளனர். அதிலும் குறிப்பாக மலே சமூகத்தவர் சிங்களத்தில் அதிக ஈடுபாடு காட்டுகின்றனர். சிலர் தமது தாய்மொழியான மலாய் மொழி (அதிலும் இலங்கையில் பேசப்படும் மலாய் கிளைமொழி) அழிந்து விடுமோ என்று அஞ்சுகின்றனர்.

இலங்கை முஸ்லிம்களின் பல்வேறு உப பிரிவுகளை இணைக்கும் இணைப்பு மொழியாக (Link Language) தமிழ் இருந்து வந்தது; இன்னும் இருக்கிறது. தென்னிலங்கையிலுள்ள சிறிய கிராமமான கிரிந்தயில் வாழும் மலே முஸ்லிம்கள் தமிழில் பேசும் ஆற்றலைப் பெற்றுள்ளனர். அவர்களது தாய்மொழி மலாய் என்பதும் அவர்கள் வாழும் சூழல் சிங்கள மொழிச் செல்வாக்கு மிக்கது என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை முஸ்லிம்களது தாய்மொழியாக தமிழ் எவ்வாறு அமைந்தது என்ற விடயம் இன்னொரு சுவாரசியமான ஆய்வுத் தலைப்பாகும். தென்னிந்திய கடல் வணிகத்தில் தமிழ் முக்கியமான வணிக மொழியாக இருந்து வந்ததை சிலர் இதற்குச் சான்றாக முன்வைக்கின்றனர். அறபு வியாபாரிகள் தமிழைப் பயன்படுத்தியிருக்கக் கூடும் என்ற எடுகோளின் அடிப்படையில் இந்த வாதம் முன்வைக்கப்படுகிறது. இதற்கு வேறு பல காரணிகளும் இருக்கக் கூடும். இது விரிவாக ஆராயப்பட வேண்டிய ஒன்று.

எது எவ்வாறாயினும், முஸ்லிம்களிடையே தமது மார்க்கத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கான மொழியாக தமிழே மிக நீண்டகாலம் இருந்து வந்திருக்கிறது. இதனால்தான் ஆங்கிலம் கற்பது ஹராம் என்று முன்பொரு காலத்தில் கருதப்பட்டது. பள்ளிவாசல்களில் சிங்களம் பேசுவது ஹராம் என்ற மனநிலை கூட முன்னர் இருந்தது.

உண்மையில் மொழிகளின் பின்னால் பலமான கலாச்சாரச் செல்வாக்கு இருக்கிறது. அதன் எதிர்வினையாகவே இந்தக் கருத்துக்களை நோக்க வேண்டும். இலங்கை முஸ்லிம்களது மார்க்கம் தொடர்பான எழுத்தும் பேச்சும் பெருமளவு தமிழிலேயே இருந்து வந்தது. சிங்களத்திலோ ஆங்கிலத்திலோ அங்காலத்தில் ஒப்பீட்டளவில் மிகக் குறைந்த முயற்சிகளே காணப்பட்டன. முஸ்லிம்களை இஸ்லாத்தை விட்டும் தூரமாக்காமல் பாதுகாக்கும் உத்தியாகவே இந்த சிந்தனைகள் அக்காலத்தில் கொள்ளப்பட்டிருப்பதை இன்று ஊகிக்க முடிகிறது.

இந்நிலை எவ்வாறு மாறியது? இன்றிருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் சூழல் முற்றிலும் வேறுபட்டதாகும். இந்நிலையில் முஸ்லிம்களுள் கணிசமானோர் தமிழ் மொழியை விட்டும் அந்நியமாகிச் செல்கின்றனர். ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும் சர்வதேசப் பாடசாலைகள் மீதான மோகம் நமது சமூகத்தில்

(பக்.19)

மீள்பார்வை
ஆசிரிய பீடத்திலிருந்து...

Meelparvai Media Centre (MMC)
2 A, Hill Castle Place, Bandaranayake Mawatha,Colombo 12. Tel/Fax: 0112 336272
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# தேர்தல் கூத்தும் கும்மாளமும்: எதை நோக்கி...?

எஞ்சியிருக்கும் இறுதித் தொகுதி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலையொட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும் கூத்தும் கும்மாளமும் நமது அரசியல் கலாச்சாரம் குறித்து தீவிரமாக சிந்திக்க எம்மை நிர்ப்பந்திக்கிறது. நாம் வீழ்ச்சியடைந்து கொண்டே செல்கிறோம் என்பதற்கான அடையாளங்களாய் இவை அமைந்துள்ளன.

தனிநபர்களைச் சுற்றி ஒளிவட்டங்களை உருவாக்குவதே தேர்தல் பிரச்சாரங்களில் முனைப்புப் பெற்றுள்ளது. வேட்பாளர் ஆவதற்கு முன்னர் முகவரி தெரியாதோர் கூட தம்மைச் சுற்றி புதிய பிம்பங்களை உருவாக்குகின்றனர். இதை யாரிடம் சொல்லி அழுவது?

தேர்தல் பிரச்சாரங்களுக்காக செலவிடப்படும் கோடிக் கணக்கான பணத்தை அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கினால், அதுவே பெருந்தொகையாக அமைந்து விடவும் கூடும். இத்தனைக்கும் நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி சபைகளால் பாரிய மாற்றங்களையோ அபிவிருத்தியையோ ஏற்படுத்த முடியாது என்று அனைவருக்கும் தெரிந்துதான் இருக்கிறது. இந்த நிலையில் அதனைச் சூழ எழுப்பப்படும் ஆர்ப்பரிப்புகள்தான் வேடிக்கையாக உள்ளன.

இசைக் கருவிகளை இசைத்து, பட்டாசு கொளுத்தி வேட்பாளர்களை அறிமுகம் செய்ய வேண்டிய நிலையில்தான் பல வேட்பாளர்கள் உள்ளனர். முன்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் வண்ணமயமான போஸ்டர்களையோ பதாதைகளையோ காண முடியாது. இப்போது பொதுத் தேர்தலைப்போல புழுதி பறக்கும் பெரும் ஆரவாரம் செயற்கையாக உருவாக்கப்படுகிறது.

மக்களது அடிப்படைத் தேவைகள், நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பான குறைந்தபட்ச அறிவில்லாதவர்கள் கூட, திரைக்குப் பின்னால் உள்ள சக்திகளால் வேட்பாளர்களாக களமிறக்கப்படுகின்றனர்.


ஆளுக்கொரு சுயேச்சைக் குழு என்றளவுக்கு சுயேச்சைக் குழுவின் அரசியல் பெறுமானம் மிக மோசமாக மலினப்படுத்தப்பட்டுள்ளது. கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தாமல் சுயாதீனமாக அரசியலை முன்னெடுக்கும் நிலையிலிருந்து அவை கீழிறங்கியுள்ளன. வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்கு எண்ணும் நிலையங்களிலும் வேட்பாளர்கள் தமக்குச் சார்பான ஆட்களை இருக்கச் செய்வதற்கான அரசியல் குறுக்கு வழித் தந்திரமாக அவை மாறியுள்ளன.

மக்களது அபிலாசைகளைப் பிரதிபலிக்க முடியாமல் சொந்த விருப்பு வெறுப்புகளை முன்னிறுத்தும் வேட்பாளர்கள் தேர்தலை கேலிக்கூத்தாக மாற்றியுள்ளனர். சிலருக்கு இது பருவ கால வியாபாரமாக அமைகிறது. ஏதேனும் ஒரு தரப்பினரிடமிருந்து ஒரு தொகைப் பணத்தைப் பெற்று, அதில் சிறு தொகைக்கு போஸ்டர்களை அடித்து விட்டு மிகுதியை சுருட்டிக் கொண்டு செல்லும் அவலத்தையும் காண்கிறோம்.

வேட்பாளர்கள்தான் இப்படியென்றால், அவர்களைச் சூழவுள்ள கூட்டம் களிப்பூட்டும் பொழுதுபோக்காக இதை எடுத்துக் கொண்டிருக்கிறது. தீக் கோழிகளைப்போல் தேர்தல் முடியும் வரைக்குமான தற்காலிக சந்தோசத்திற்குள் இவர்கள் தமது தலைகளைப் புதைத்திருக்கின்றனர்.

இத்தனைக்கும் மத்தியில் மக்கள் நலன் சார்ந்த அரசியலை முன்னெடுப்பது அத்துணை இலகுவான காரியமல்ல. கட்சிகளுக்கு நிலையான, வரையறுத்த, தெளிவான கொள்கைகள் இல்லாத நிலையே காணப்படுகிறது. வேட்பாளர்களுக்கோ நேற்று எந்தப் பக்கம் இருந்தோம் என்ற ஞாபகம்கூட இல்லை. நாளை எங்கே தாவுவோம் என்பதிலும் அவர்களுக்குத் தெளிவு கிடையாது.

இந்நிலையில் கட்சிகளை ஒருபுறம் ஓரந்தள்ளி விட்டு, தனிப்பட்ட வேட்பாளர்களின் பண்புகளையும் நேர்மறை-எதிர்மறை விடயங்களையும் அலசி ஆராய்ந்தே இவ்வுள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் வாக்காளர்கள் உள்ளனர்.



# தேர்தல் செலவுக்கு எங்கிருந்து பணம் கிடைக்கிறது?

**சுமணசிறி லியனகே**

உள்ளூராட்சி முறையின் அடிப்படை விடயம் ஒன்று தொடர்பாக எழுதுவதே எனது நோக்கம். உள்ளூராட்சி சபைகள் தொடர்பான சட்டம் பரந்த ஜன நாயக வெளிகளைக் கொண்டமைவது வழக்கம். உள்ளூராட்சி சபையைப் பிரதிநிதித்துவப்படுத்துவோர் மற்றும் அவர்களது தீர்மானங்களை மக்கள் அவதானிக்க இது வழிவகுக்கிறது. எவ்வாறாயினும், பதில் சொல்லுதல் மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகிய விடயங்கள் இன்று குறைந்தபட்சம் கொள்கை அளவிலாவது உள்ளன.

இந்த சட்டங்கள் மிக நீண்ட காலத்திற்கு முன்னர் உருவாக்கப்பட்டு அமுலில் உள்ளன. ஆனால், உள்ளூராட்சி சபைகள் அரசாங்கத்தின் இணைப்புகளாக தற்போது மாறிவிட்டன. 1978 அரசியலமைப்பின் பிரதான வெளிப்பாடுகளுள் இதுவும் ஒன்று.

உள்ளூராட்சி சபைத் தேர்தல், உள்ளூர் விவகாரங்களில் மையம் கொள்வதில்லை. தேசிய விடயங்களிலேயே அது கூடுதல் கவனம் செலுத்துகிறது. குறிப்பாக கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் கொழும்பு நகரம் தொடர்பான விடயங்கள் கூட, தேசியக் கொள்கையுடன் நேரடியாகத் தொடர்புபடுத்தப்படுகின்றது. அரசாங்கத்துடன் இணைந்துள்ள கட்சியொன்று வெற்றியடையாவிட்டால் கொழும்பு மாநகர சபையின் பணிகளை போதியளவு செய்ய முடியாமல் இருக்கும். இது உள்ளூர் மட்ட ஜனநாயகத்தைப் பாதிக்கும் ஒரு விடயமாகும்.

இதன் அர்த்தம் என்ன? உள்ளூராட்சி சபைகளால் சுயாதீனமாக இயங்க முடியாது என்பதே இதன் பொருள். 1978க்குப் பின்னர் இடம்பெற்ற மூன்று முக்கியமான விடயங்களே இதற்கு முக்கிய காரணிகளாகும்.

முதலாவது விடயம், விகிதாசாரத் தேர்தல் முறை அமுல்படுத்தப்பட்டதாகும். இது கட்சி முறையைப் பலப்படுத்தும் என்பதே அப்போது இதற்கு முன்வைக்கப்பட்ட நியாயம். இந்த வாதத்தைப் பலப்படுத்துவதற்கு இன ரீதியான பரிமாணத்தையும் அப்போது அதனோடு இணைத்துப் பேசினர்.

விகிதாசார முறையில் நன்மைகள் உள்ளனதான். எனினும், இலங்கையில் பல்வேறு எதிர்மறையான விளைவுகளை அது உருவாக்கி விட்டுள்ளது. குறிப்பாக, தெரிவுசெய்யப்படுவோரிலிருந்து வாக்காளர்களை அது தூரமாக்கியுள்ளது.

உள்ளூர் மட்டங்களில் திறமையாக இயங்கக் கூடியவர்களை விட்டு விட்டு, தேர்தல் பிரச்சாரங்களுக்கு பாரியளவில் செலவளிக்கக்கூடிய சக்தி வாய்ந்தோர் முக்கிய இடத்தைப் பிடிக்கத் தொடங்கினர். பெப்ரலின் கணிப்பின்படி கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் ஒரு சராசரி வேட்பாளர் நாளொன்றுக்கு ஒரு மில்லியன் ரூபாவை செலவிடுகிறார்.

இந்த சராசரிக் கணிப்பு சரியான குறிகாட்டியல்ல என்பதை நாம் அறிவோம். உதாரணமாக திம்பிரிகஸ்யாய காசப்பவத்த ஐ.ம.சு.மு வேட்பாளர் நிமல் ரொட்ரிகோவிடம் செலவளிப்பதற்கு போதியளவு பணம் இல்லை. கடந்த 40 வருடங்களாக செயற்திறனுள்ள பிரதேச மட்டத் தலைவராக அவர் இருந்து வருகிறார்.

> **கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும்போது சக்தி வாய்ந்த, வசதி படைத்த ஆண்களுக்கே முதலிடம் வழங்குகின்றனர். செயல்திறனுள்ள உள்ளூர் தலைவர்களுக்கோ பெண்களுக்கோ அங்கு இடமில்லாமல் போய் விடுகிறது.**



1983 கலவரத்தில் தமிழ் மக்களைப் பாதுகாக்கும் குழுக்களை அவர் அந்தப் பிரதேசத்தில் ஏற்படுத்தினார். உள்ளூர் விவகாரங்களை பேசுபொருளாக மாற்றுவதில் அவர் எப்போதும் முன்னணியில் நின்று செயற்பட்டார்.

ஆனால், தற்போதுள்ள விகிதாசார முறையில் இவ்வாறான செயற்திறன்மிக்க உள்ளூர் தலைவர்களுக்கு, குறைந்த செலவில் கடுமையான பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தேர்தல் முறை பாரியளவு பக்கச் சார்பானதாக உள்ளது. உள்ளூர் மட்டத் தலைவர்களை விட தேசிய மட்டத் தலைவர்களுக்கு, அருகில் இருப்போரை விட தொலைவில் இருப்போருக்கே இது வாய்ப்பை வழங்குகிறது.

இரண்டாவதாக, விகிதாசார முறையில் நடைபெறும் இந்த உள்ளூராட்சித் தேர்தல்கள், பிரதான அரசியல் கட்சிகளின் பலத்தைப் பரீட்சிக்கும் களமாக மாற்றம் பெற்றுள்ளன. கொல்வின் ஆர். டீ சில்வா பாராளுமன்றத்தில் உள்ள சுயேச்சை அங்கத்தவர்களை மூன்று தலைக் கழுதைகள் என்று கூறி, அவர்களது பங்களிப்பை மறுதலித்தது தவறாக இருக்கக் கூடும். ஆனால், உள்ளூர் மட்டத்தில் சுயேச்சை அங்கத்தவர்கள் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விவகாரங்களில் பக்கச்சார்பற்றவர்களாகத் தொழிற்பட்டதை மறுக்க முடியாது.

இப்போதெல்லாம் பிரதான அரசியல் கட்சிகள் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் உட்பட எல்லாத் தேர்தல்களையும் வென்று விடத் துடிக்கின்றன. இது மக்களது அரசியல் தேர்வை பெருமளவுக்குக் குறைத்துள்ளது. அதனால்தான் எல்லாப் பிரதிநிதித்துவ சபைகளிலும் புளித்துப்போன ஒரே மாதிரியான வாதத்தையும் ஒரே மாதிரியான கருத்துக்களையுமே திரும்பத் திரும்பக் கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. விரிந்த பல பக்கப் பார்வைக்கு அங்கு இடமில்லை.

மறுதலையாக, கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும்போது சக்தி வாய்ந்த, வசதி படைத்த ஆண்களுக்கே முதலிடம் வழங்குகின்றனர். செயல்திறனுள்ள உள்ளூர் தலைவர்களுக்கோ பெண்களுக்கோ அங்கு இடமில்லாமல் போய் விடுகிறது.

இதனால் வாக்காளர்களும் உளவியல் ரீதியாக இந்த முறைக்குப் பழக்கப்பட்டு விட்டனர். கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இந்த முறை அமுலில் இருப்பதால், அவர்களும் வசதி படைத்த சக்தி வாய்ந்த ஆண்களையே தெரிவுசெய்கின்றனர். இலங்கையின் பெண் பிரதிநிதித்துவம் தெற்காசியப் பிராந்தியத்திலேயே மிகவும் குறைவாக உள்ளதற்கு இது முக்கிய காரணி எனலாம்.

கட்சித் தெரிவுக் குழுக்களே வேட்பாளர்களை நியமிப்பதற்கு லஞ்சம் கேட்கின்றன என்று சமீ

(பக்.19)

# எங்களுக்காகப் பேசுகின்ற மாற்று இன சகோதரர்களை நாம் உருவாக்க வேண்டும்

## என்.எம். அமீன் - பிரதம ஆசிரியர் நவமணி



என்.எம். அமீன் அவர்கள் மாவனல்லை தல்கஸ்பிடியைச் சேர்ந்தவர். களனிப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வெளியாகியதைத் தொடர்ந்து லேக் ஹவுஸ் நிறுவனத்தின் பயிற்சிப் பத்திரிகையாளராக இணைந்தார். பயிற்சிப் பத்திரிகையாளராக இருந்து முகாமைத்துவ ஆசிரியர் வரை சுமார் 33 வருடங்கள் பணியாற்றியிருக்கிறார். தினகரனின் பாராளுமன்ற செய்தியாளராக தொடர்ச்சியாக 23 வருடங்கள் பணிபுரிந்தார்.

முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவராக இருந்து வரும் என்.எம். அமீன் அவர்கள் ஊடகத் துறையோடு நீண்டகால அனுபவம் பெற்றவர். South Asia Free Media Association (SAFMA) இன் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளராகச் செயற்படும் இவர், தற்போது நவமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றி வருகிறார். அவருடன் மீள்பார்வை மேற்கொண்ட நேர்காணலை வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

சந்திப்பு: இன்ஸாப் ஸலாஹுதீன்

**★ இலங்கை முஸ்லிம்களுக்கான தனியான ஊடகம் மற்றும் நாளிதழுக்கான தேவை நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டு வருகின்றது. அதனை சாத்தியப்படுத்துவதிலுள்ள தடைகள் என்ன?**

இலங்கை முஸ்லிம்களின் ஊடக வரலாற்றிலே எமக்கான ஒரு ஊடகமென்பது 1882ம் ஆண்டு அறிஞர் சித்திலெப்பை ஆரம்பித்ததிலிருந்து தொடங்குகின்றது. அன்றிலிருந்து முஸ்லிம்களுக்கான ஊடகமாக பல பத்திரிகைகள் வெளிவந்திருக்கின்றன. ஆனால் அனைத்தும் நின்று நிலைத்ததாக இல்லை. இதுதான் முஸ்லிம்களுக்கு இன்று இருக்கின்ற சவாலும் கூட.

ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது முஸ்லிம் சமூகம் மிகவுமே பின் நிற்கின்றது. எமக்கான ஒரு நாளிதழைக் கொண்டு வருவதற்கான காத்திரமான முயற்சிகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. வெளிவருகின்ற வாரப் பத்திரிகைகளும் மிகுந்த பொருளாதாரச் சிக்கல்களுடனே வெளிவருகின்றன.

எமது சமூகத்தைப் பொறுத்தவரை ஒன்றல்ல, பல நாளிதழ்கள் தேவைப்படுகின்ற ஒரு சூழலிலே நாம் வாழ்கிறோம். குறிப்பாக எங்களுக்கெதிரான சவால்களுக்குப் பதில்சொல்ல, எங்களைப் பற்றிய தப்பபிப்பிராயங்களுக்குப் பதில்சொல்ல, எங்கள் சமூகத்தின் உண்மை நிலையை தெளிவுபடுத்த எங்களால் முடியாமல் இருக்கின்றது.

உண்மையில் இத்தேவையை நிறைவுசெய்ய, இதனை முஸ்லிம் சமூகம் ஒரு வர்த்தக முயற்சியாக ஆரம்பித்தால்தான் வெற்றி பெறும். மற்றது ஏனைய சமூகங்கள் இத்துறையில் காட்டும் ஆர்வம் முஸ்லிம் தனவந்தர்களிடம் இல்லாமல் இருக்கின்றது. இது மிகவுமே கவலையான ஒரு விடயம். தமிழ் சமூகத்தை எடுத்துக் கொண்டால் கொழும்பில் அவர்களுக்கு நான்கு நாளிதழ்களும் யாழ்ப்பாணத்தில் மேலதிகமாக நான்கு இதழ்களும் வெளிவருகின்றன.

எங்களுக்கு ஒரு நாளிதழுமே இல்லை. நாளிதழை விட வாரப் பத்திரிகையைக் கூட செய்து கொள்ள முடியாமல் இருக்கின்றோம். அந்தவகையில், மீள்பார்வையும் எங்கள் தேசமும் நின்று பிடிப்பது பாராட்டுக்குரியது. இந்தக் களத்தில் அவர்கள் தொடர்ச்சியாக இருக்கிறார்கள்.

ஆனால், முஸ்லிம் சமூகத்திற்கு ஏதும் நடந்தால் அதனைச் சொல்ல ஒரு வாரத்தின் பின் நவமணியோ, விடிவெள்ளியோ அல்லது இரண்டு வாரங்களின் பின் மீள்பார்வையோ, எங்கள் தேசமோ வெளிவர வேண்டும். அதுவரை நாம் காத்திருக்க வேண்டும்.

அத்தோடு எமது எல்லா ஊடகங்களும் தமிழில் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதனால் எமது சமூகத்தில் என்ன நடக்கின்றது என்பது ஏனைய சமூகங்களுக்குத் தெரியாது. அண்மையில் அனுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வு, அதனை விடப் பெரிய ஒரு நிகழ்வு நடந்திருந்தாலும் அதனை மறைக்க முடியும் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம்.

முஸ்லிம் தனவந்தர்கள் இதில் கூடிய கவனமெடுத்தால் மட்டுமே எமக்கான நாளிதழைக் கொண்டு வர முடியும், ஊடக நிறுவனத்தை உருவாக்க முடியும். முஸ்லிம் சமூகம் பற்றிய நிறைய தப்பபிப்பிராயங்கள் வளர்க்கப்பட்டிருக்கின்றன. சுமார் 20 இணையத் தளங்களூடாக இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான பிரச்சாரங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

**★ எமக்கான இலத்திரனியல் ஊடகத்தைப் பற்றிச் சொல்வதாயின்...**

எமது நாட்டில் கிட்டத்தட்ட 44 FM வானொலிகள் இருக்கின்றன. 16 தொலைக்காட்சி சேவைகள் இருக்கின்றன. ஆனால் எமது கட்டுப்பாட்டில் எதுவுமில்லை. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவை மாத்திரம்தான் எமக்கிருக்கின்றது. முஸ்லிம் சமூகத்தின் நிதி அங்கு செலவிடப்படுகின்றது. இருந்தும் அதன் மூலம் சமூகத்திற்கு எத்தகைய பயன்கள் கிடைக்கின்றன என நாம் ஆய்வுசெய்திருக்கிறோமோ தெரியாது.

சமூகத்திற்குத் தேவையான விடயங்களை வழங்குவதற்கான ஆளணி முஸ்லிம் சேவையில் இருக்கின்றதா என நாம் பார்க்க வேண்டும். ஏனெனில், ஊடகம் என்பது உணவு சமைப்பது போன்ற ஒரு விடயமல்ல. இந்த வருட ரமழான் காலத்தில் மட்டும் முஸ்லிம்களின் அனுசரணையினூடாக சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது.

இருந்தாலும் சமூகத்திற்குத் தேவையான நிகழ்ச்சிகளை நாம் கேட்க முடியாமல் இருக்கின்றது. திணிக்கப்படுகின்ற நிகழ்ச்சிகளையே முஸ்லிம் சமூகம் கேட்க வேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கின்றது. இப்படியொரு சூழல்தான் முஸ்லிம் ஊடகத்தைப் பொறுத்தவரையில் இருக்கின்றது. நாங்கள் மற்றவர்களை நம்பியிருக்க வேண்டிய தேவை இருக்கின்றது. இது ஆரோக்கியமான ஒரு நிலை அல்ல. எனவே, எமக்கான ஓர் ஊடகத்தை உருவாக்குவதுதான் இன்றைய காலத்தின் எமது மிகப் பெரிய ஜிஹாதாக இருக்கின்றது. ஆகவே முஸ்லிம் சமூகத்தின் நிகழ்ச்சி நிரலிலே ஊடகம் முன்னுரிமை பெற வேண்டிய ஓர் அம்சமாக இருக்கின்றது.

இனிவரும் காலங்களில் அலைவரிசை ஒன்றைப் பெறுவது பெரும் சிரமமான ஒரு விடயமாக இருக்கும். மர்ஹூம் அஷ்ரப் அவர்கள் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தையும் ஒலுவில் துறைமுகத்தையும் ஆரம்பிப்பதை விட எமக்கான அலைவரிசை ஒன்றைப் பெறுவதில் கூடிய கவனம் செலுத்தியிருக்க வேண்டும் என அவரிடம் சொன்னது இப்போது நினைவுக்கு வருகின்றது. எதிர்காலத்தில் பலமான அரசியல் தலைமைத்துவம் அரசுக்கு அழுத்தம் கொடுத்தால்தான் இதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**★ Muslim Council of Sri Lanka பற்றிச் சொல்ல முடியுமா? அது தற்பொழுதும் செயற்படுகின்றதா?**

சுனாமி அனர்த்தத்தைத் தொடர்ந்து முஸ்லிம்கள் இருக்கின்ற பகுதிகளுக்கு நிவாரணங்கள் செல்வதில் தாமதம் ஏற்பட்டது. முஸ்லிம் மீடியா போரமும் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் சம்மேளனமும் இணைந்து முஸ்லிம் இயக்கங்களை ஒன்று கூட்டி உடனடியாக இயங்குகின்ற ஓர் அமைப்பை CCRR என்ற பெயரில் ஆரம்பித்தோம். அதனடிப்படையில் நிவாரணங்களை முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் பெற்றுக்கொடுக்கும் ஓர் இணைப்புப் பாலமாக நாம் செயற்பட்டோம்.

பின்னர் முஸ்லிம்களுக்கான கூட்டமைப்பு ஒன்றின் அவசியம் கருதி 2005ம் ஆண்டு Muslim Council of Sri Lanka உருவாக்கப்பட்டது. இன்றும் அது இயங்கிக் கொண்டிருக்கின்றது. சமூகத்தில் செயற்திட்டங்களைச் செய்கின்ற ஓர் அமைப்பாக அல்லாமல் சமூகத்தின் தேவைகளுக்குக் குரல் கொடுக்கின்ற ஓர் அமைப்பாக இது இயங்கி வருகின்றது.

அண்மையில் ஏற்பட்ட மர்ம மனிதர்களின் பிரச்சினை ஒரு இனக்கலவரமாக மாறுமோ என்ற நிலையை அடைந்தது. அந்தக் கட்டத்தில் நாம் உடனடியாகத் தலையிட்டு அரசாங்கத்துடனும் பாதுகாப்புச் செயலாளருடனும் பேசி, எமது தரப்பு நியாயங்களைத் தெளிவுபடுத்தினோம். இது போல சமூகத்தில் எழுகின்ற பிரச்சினைகளை அரசுக்கும் வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கும் எடுத்துச் சொல்கின்ற பணி இந்த அமைப்பினூடாக நடைபெற்று வருகின்றது.

**★ குறிப்பாக இன்றைய சூழலில் எமது சமூகத்திற்கு நீங்கள் சொல்ல நினைக்கும் விடயம்...**

போருக்குப் பின்னரான சூழலை நாம் பார்க்கின்றபோது எங்களை தூண்டிவிட வேண்டும் என்று பின்புலத்தில் யாரோ வேலை செய்வதாகத் தெரிகிறது. நாங்கள் இந்த சவாலை வென்றெடுக்க வேண்டும். இது எங்கள் இருப்போடு சம்பந்தப்பட்டது. நாம் இந்த நாட்டிலே பரந்து, சிதறி வாழ்கிறோம். வாய் வீராப்புடன் பேசிப் போராடலாம் என நாம் நினைப்பது தவறாகும்.

இந்த நாட்டின் பெரும்பான்மை இனத்தின் நல்லெண்ணத்தை நாம் வென்றெடுக்க வேண்டும். அதாவது எங்களுக்காகப் பேசுகின்ற மாற்று இன சகோதரர்களை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். அது எமது செயற்பாடுகளால்தான் முடியும். எல்லா தரப்புகளாலும் எமது சமூகத்திற்கு புறக்கணிப்பு இருக்கின்றது. எனவே எமக்கெதிரான சவால்களை நாம் இனங்காண வேண்டும். எமக்குள் ஒற்றுமை வேண்டும். சமூகத்திற்குத் தலைமை தாங்க அறிவுஜீவிகள் முன் வர வேண்டும்.

எமது சமூகத்தை இலக்கு வைத்து இன்னும் சில வருடங்களில் ஏதும் நடக்கப் போகின்றதோ என்ற அச்சம் உருவாகிக் கொண்டு வருகின்றது. இதிலிருந்து நாம் எமது சமூகத்தைப் பாதுகாக்கின்ற தேவை இருக்கின்றது.

# பல தடவைகள் ஹஜ் செய்பவர்களால் முதல் முறை ஹஜ் செய்ய முயற்சிப்பவர்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது



**அஷ்ஷெய்க் வை.எல்.எம். நவவி (நளீமி)**
**முஸ்லிம் சமய பண்பாட்டு அலு வல்கள் திணைக்களப் பணிப்பாளர்**

**★ இலங்கையிலிருந்து ஹஜ்ஜுக்குச் செல்பவர்களுக் கான ஏற்பாடு எந்த அமைச்சி னூடாக நடைபெறுகின்றது?.**

இலங்கையிலிருந்து ஹஜ் கட மைக்கு செல்பவர்களுக்கு வசதி களைச் செய்து கொடுப்பதற்கான பொறுப்பு இலங்கை அரசாங்கத் தின் சார்பில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தைச் சார்கின்றது. இது இலங்கையில் புத்த சாசன மற் றும் மத விவகார அமைச்சின் கீழ் இருப்பதன் காரணமாக முஸ்லிம் அல்லாத ஒரு அமைச்சர் இதற்குப் பொறுப்பாக இருக்க முடியாது என்பதன் காரணமாக இலங்கை அரசாங்கம் முஸ்லிம் அமைச்சர் களை காலத்திற்குக் காலம் இதற் குப் பொறுப்பாக நியமித்து இதற் கான ஏற்பாடுகளைச் செய்கின்றது.

**★ ஹஜ்ஜுக்கான கோட்டா பிரிப்பு முறை பற்றிச் சொல்ல முடியுமா?**

சவூதி அரேபியா அரசு ஒவ் வொரு நாடுகளிலும் வாழ்கின்ற முஸ்லிம்களில் ஆயிரம் பேருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் ஹஜ்ஜுக்கு அனுமதி வழங்கு கின்றது. எனவே ஒவ்வொரு நாட்டினதும் முஸ்லிம் சனத் தொகை அளவிற்கேற்ப அது மாறுகின்றது.

இலங்கையைப் பொறுத்த வரையில் 2.8 மில்லியன் முஸ் லிம்களில் 2800 பேருக்கு ஒரு வருடத்தில் ஹஜ் கடமையை நிறைவேற்ற சந்தர்ப்பம் வழங்கப் படுகின்றது. இதுதான் இலங் கைக்குக் கிடைக்கின்ற கோட்டா வாகும்.

ஹஜ்ஜுக்கான முன்னேற்பாடு கள் குறித்து கலந்துரையாடுவதற் காக ஒரு தூதுக்குழு வருடா வரு டம் சவூதி அரேபியாவுக்குச் செல் கின்றது. அந்தச் சந்திப்பில் மேல திக கோட்டாவுக்கான கோரிக்கை முன்வைக்கப்படும். அதனடிப் படையில் கடந்த வருடம் மேல திகமாக 3000 பேருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

அதேபோல இவ்வருடமும் முன்வைக்கப்பட்ட கோரிக்கை க்கு அமைய மேலதிகமாக ஆயி ரம் பேருக்கு சந்தர்ப்பம் வழங்கப் படுகின்றது. அதன்படி இவ்வரு டம் மொத்தம் 3800 பேருக்கு இலங்கையிலிருந்து ஹஜ் கடமை யை நிறைவேற்றுவதற்காகச் செல்ல முடிகின்றது.

**★ இந்தக் கோட்டா ஹஜ் முகவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றபோது எவ்வளவு கட்டணம் அறவிடப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்படுகின்றது?**

ஹஜ்ஜுக்குப் பொறுப்பாக இருக்கின்ற அமைச்சர்கள் ஹஜ் முகவர்களை அழைத்து கலந்து ரையாடல் மேற்கொண்டு குறிப் பிட்ட தொகைக் கட்டணத்தைத் தீர்மானிப்பார்கள். அந்தவகை யில் இவ்வருடம் 3,40,000.00 ரூபாய்தான் தீர்மானிக்கப்பட்டி ருக்கின்றது. அதற்குமேல் அற விடக்கூடாது என ஹஜ் முகவர் கள் பணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**★ ஆனால், இத்தொகையை விட மேலதிமாக அதிக கட்ட ணம் அறவிடப்படுகிறதே?**

உண்மையில் 3,40,000 ரூபா வில் ஹஜ் முகவர்களுக்கான இலாபத் தொகையும் உள்ளடக் கப்பட்டிருக்கின்றது. என்பதனை இங்கு கூற வேண்டும். சில ஹஜ் ஜாஜிகள் எமக்கு மேலதிக வசதி களைச் செய்து தருமாறு ஹஜ் முகவர்களை வேண்டுவார்கள். அப்படி மேலதிகமாக செலவிட விரும்புபவர்களிடம் மேலதிக தொகையைப் பெறுவது பிழை யில்லை. ஆனால், எல்லோரிடமி ருந்தும் 4 இலட்சம், 5 இலட்சம் என அறவிடுவதனை ஒரு கொள் ளையாகத்தான் நான் கருதுகின் றேன். கூடுதலான பணத்தை அறவிடுகின்றார்கள் என்பதனை எழுத்து மூலமாகத் முறைப்பாடு செய்தால் அதற்குரிய நடவடிக் கைகளை மேற்கொள்வதற்கும் திணைக்களம் தயாராக இருக் கின்றது.

**★ இலங்கையில் எத்தனை ஹஜ் ம்ுகவர் நிலையங்கள் இயங்குகின்றன?**

இம்முறை எமது திணைக் களத்திற்கு சுமார் 137 விண்ணப் பங்கள் முன்வைக்கப்பட்டன. அதிலே சுமார் 120 முகவர் நிலை யங்களை தெரிவு செய்திருக்கின் றோம். இந்த 120 முகவர் நிலை யங்களினூடாக ஹஜ் செல்வதற் கான ஏற்பாடுகளை செய்து கொள்ள முடியும்.

**★ முதல் முறை ஹஜ்ஜுக்குச் செல்பவர்களுக்கான வாய்ப்பு ஏன் குறைவாகக் காணப்படு கின்றது?**

இலங்கையைப் பொறுத்த வரை ஹஜ் கடமையை நெறிப் படுத்துவது தொடர்பாக பாராளு மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது முஸ்லிம் விவகாரங்க ளுக்கான அமைச்சினால் வரை யறுக்கப்பட்ட விதிமுறைகள் கிடையாது.

சவூதி அரேபியாவில் வசிக் கின்றவர்கள் ஹஜ்ஜுக்குச் செல்வ தாயின் 5 வருடங்களுக்கு ஒரு முறைதான் செல்ல முடியும். மலேசியா, சிங்கப்பூர், இந்தோ னேசியா போன்ற நாடுகளிலும் இரண்டு வருடங்களுக்கு முன் னரே ஹஜ் செய்வதற்கு விண் ணப்பிக்க வேண்டும். சிங்கப்பூ ரிலே 2014ம் ஆண்டுக்கான பதிவு களையும் இப்போதே மேற் கொண்டு விட்டார்கள். அந்த நிலை இலங்கையில் இல்லை.

பல செல்வந்தர்கள் பல தட வைகள் ஹஜ் செய்வதால் முதல் முறை ஹஜ் செய்ய முயற்சிப்ப வர்களுக்கு பாதிப்பு ஏற்படுகின் றது. எனவே முதல் முறை ஹஜ் செய்பவர்களுக்கே முன்னுரிமை வழங்குமாறு முகவர்களை நாம் வேண்டியிருக்கிறோம். ஜம்இய்ய துல் உலமாவும் இதனை வலி யுறுத்தியிருக்கின்றது.



கெலிஒய கலுகமுவ மத்ரஸதுல் இஸ்லாஹ்வின் பட்டமளிப்பு விழா நான்காவது முறையாகவும் கடந்த செப்டம்பர் 25ம் திகதி கலுகமுக முஸ்லிம் மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொண்ட முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் வை.எல்.எம். நவவி, வாமி நிறுவனத்தின் பிரதிப் பணிப்பளர் கலாநிதி எச்.எல்.எம். ஹாரிஸ் ஆகியோர் உரையாற்றுவதையும், மாணவிகள் கஸீதா இசைப்பதையும் படத்தில் காணலாம்.

(படமும் தகவலும் - எம்.டீ.எம். விதாத்)

## சம்மாந்துறையில் சிறுவர் தின நிகழ்வு



சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனை மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் கடந்த 02.10.2011 அன்று சம்மாந்துறை அல்-மர்ஜான் மகளிர் கல்லூரி எம்.எஸ். காரியப்பர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக இவ்வாண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் வலய மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவன் முப்லி அஹமட் கலந்து கொண்டார். மற்றும் விசேட அதிதிகளாக கிழக்கு மாகாண உறுப்பினர் புஷ்பராஜா, சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.கே.எம். மன்ஸூர், சம்மாந்துறைப் பிரதேச சபைத் தவிசாளர் நௌஷாட் ஆகியோர் கலந்து கொண்டனர். பெற்றோர், மாணவர்கள் என பெருமளவானோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(படமும் தகவலும் - எம்.ஆர்.எம். அக்ரம்)

## பூகொடையில் இலவச மருத்துவ முகாம்



MFCD நிறுவனத்தின் அனுசரனையில் குமாரிமுல்லை கல்வி அபிவிருத்தி மற்றும் சமூக சேவை அமைப்பு (KEDSO) நடத்திய இலவச மருத்துவ சிகீச்சை முகாம் கடந்த 2011.09.24ம் திகதி சனிக்கிழமை பூகொடை குமாரிமுல்லை முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டோரையே படத்தில் காண்கின்றீர்கள்

# விஞ்ஞான பாடப் புத்தகம் ஓர் இஸ்லாமிய அணுகல்

**11ம் தரத்தில் உயிரியல் எனும் அத்தியாயத்தில் பக்:335ல் இயற்கைத் தேர்வுக் கொள்கை என்ற உப தலைப்பில் டார்வினின் பரிணாமத் தத்துவம் விளக்கப்பட்டுள்ளது.**

டாவினிஸம் முன்வைக்கப்பட்டு சுமார் ஒரு நூற்றாண்டு கடந்து விட்ட நிலையில் அதற்குப் பின்னர் முன்வைக்கப்பட்ட உயிரியல் கோட்பாடுகள் டாவினிஸத்தை பொய்ப்படுத்தியுள்ளன. விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்க முடியாத இக்கோட்பாட்டை இன்னும் பாடப் புத்தகங்களில் ஏன் இணைக்கின்றனர் என்பது ஆச்சரியமான கேள்வியாகவே உள்ளது.

டாவினிஸம் ஒரு அறிவியல் கண்டுபிடிப்பு என்ற ஒரு நம்பிக்கை இன்னும் பலரிடையே இருப்பதுதான் இதற்கான காரணமாகும். இவற்றை இஸ்லாமியப் பின்னணி இன்றி கற்கும் ஆசிரியர்கள் அரை விசுவாசிகளாகவும் அரை நாஸ்திகர் களாகவும் மாறுகின்றனர்.

டாவினிஸம் கால் பொப்பர், ரிச்சட் மில்டன், மைக்கல் டென்டன், அவ்ரகான் முஹம்மது அலி, ஹாரூன் யஹ்யா போன்ற ஆய்வாளர்களால் பொய்ப்பிக்கப்பட்டுள்ளது. டாவினிஸம் குறித்த இஸ்லாமிய கருத்தை இப்பகுதியில் முன்வைப்பது பொருத்தமாகும்.

உயிர் எவ்வாறு தோன்றியது என்பது தொடர்பாக பல்வேறு கோட்பாடுகள் காணப்படுகின்றன. அவை முடிவிலியாகத் தொடர்கின்றன. உயிர்த் தோற்றம் பற்றிய ஆய்வுகள் இன்றுவரை தொடர்வதிலிருந்து இது புலனாகின்றது. இதுவரை உயிர்த் தோற்றம் குறித்து முன்வைக்கப்பட்ட கோட்பாடுகளை பின்வருமாறு சுருக்கலாம்.


1. சடுதி மாற்றம்/ பிரளயக் கோட்பாடு
2. தன்னிச்சைப் பிறப்புக் கோட்பாடு
3. உயிர்ப் பிறப்புக் கோட்பாடு
4. அண்டவெளிக் கோட்பாடு
5. இயற்கை அறிஞர் கோட்பாடு
6. சிறப்புப் படைப்புக் கோட்பாடு

### சடுதிமாற்றம் அல்லது பிரளயக் கோட்பாடு

சடுதிமாற்றம் அல்லது பிரளயக் கோட்பாடு என்பது உயிரினங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. உள்ளது உள்ளவாறே தொடர்கிறது எனக் கூறுகிறது. இது சமயங்கள் முன்வைக்கும் கோட்பாட்டிற்கு மிக நெருக்கமாக உள்ளது. எனினும், விஞ்ஞான ரீதியில் இதை நிரூபிக்க முடியாது என்று மேற்குலகம் கருதுகின்றது.

### தன்னிச்சை பிறப்புக் கோட்பாடு

தன்னிச்சை பிறப்புக் கோட்பாட்டின்படி உலகிலுள்ள அனைத்து உயிரினங்களும் தன்னிச்சையாகவே தோன்றின. அவை உடலற்ற சடப்பொருட்களிலிருந்து தாமாகவே தோன்றியவை என நம்பப்படுகிறது. ஆரம்ப காலங்களில் இக்கொள்கை ஏற்கப்பட்டிருந்தது. அரிஸ்டோடில், அனெக்சிமாந்தர் போன்றோர் இக்கருத்தைக் கொண்டிருந்தனர். பிரான்



சிஸ்கோ ரெடி எனும் 17ம் நூற்றாண்டைய விஞ்ஞானி இக்கருத்துத் தவறானது என்று கூறினார்.

### உயிர் பிறப்புக் கோட்பாடு

உயிர் பிறப்புக் கோட்பாடு என்பது லூயி பாஸ்டரினால் முன்வைக்கப்பட்டது. எல்லா உயிரினங்களும் முன்னிருந்த உயிரினங்களிலிருந்துதான் தோன்றலாம் எனக் குறிப்பிடுகின்றது. லூயி பாஸ்டர் தன்னிச்சை பிறப்புக் கொள்கையினை பரிசோதனை வாயிலாக தவறு என எடுத்துக் காட்டி, உயிருள்ளவற்றில் இருந்து தான் உயிர் தோன்றியிருக்கும் என்ற கருத்தை முன்வைத்தார்.

### அண்டவெளிக் கோட்பாடு

அண்டவெளிக் கோட்பாடு, அண்டவெளியிலிருந்து உயிர்ப் பொருள் அல்லது நுண்ணுயிர் பூமியில் விழுந்தது. அம்மூல உயிரிலிருந்து ஏனையவை தோன்றின என நம்புகிறது. அண்டவெளியிலிருந்து வைரசு போன்றன வந்தமையினால் உயிர் தோன்றியது என்ற கொள்கையை சந்திரா விக்கிரமசிங்ஹா எனும் இந்திய விஞ்ஞானி வலியுறுத்தினார். ஆயினும், இது நடைமுறைச் சாத்தியமற்றது என்று விமர்சிக்கப்பட்டது.

### இயற்கை அறிஞர் கோட்பாடு

இயற்கை அறிஞர் கோட்பாடு, உயிரின் தோற்றம் பற்றி இன்று நம்பப்படுகின்ற கருத்தாக உள்ளது. ரஷ்யாவைச் சேர்ந்த ஒபரின், ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ஹேல்டன் ஆகியோர் இதனை வலியுறுத்தினர். இரசாயன மூலங்களின் தொடர்ச்சியான இடைத் தாக்கத்தினால் உயிரினங்கள் முதலில் கடலில் தோன்றி வளர்ச்சியும் கூர்ப்பும் அடைந்தது என்பதே இதன் அடிப்படை.

### சிறப்புப் படைப்புக் கோட்பாடு

சிறப்புப் படைப்புக் கோட்பாடு என்பது, இப்பிரபஞ்சமும் அதிலுள்ள உயிரினங்களும் நுணுக்கமான திட்டமிடலோடும் ஓர் உயர்ந்த நோக்கத்தோடும் இறைவனால் படைக்கப்பட்டது எனக் கூறுகின்றது.

இயற்கை அறிஞரின் கோட்பாட்டுப் பின்னணியிலிருந்து உருவாகியது சார்ல்ஸ் டாவினின் பரிணாமத் தத்துவமாகும். டாவினின் கூர்ப்புக் கொள்கை பின்வரும் அடிப்படை அம்சங்களோடு தொடர்புபடுகின்றது.

1. மாறல் (Veriation), விகாரம் (Mutation)
2. மிகை உற்பத்தி (Over Production)
3. வாழ்க்கை போர் (Strugle for life)
4. தக்கன பிழைத்தல் (Survival of the fittest)
5. இயற்கைத் தேர்வு (Natural Selection)

#### 1. மிகை உற்பத்தி

எல்லா விலங்குகளும் அதிக எண்ணிக்கையான சந்ததியை உருவாக்கும். இத்தொகை தேவைப்பட்டதை விட அதிகமாகும். இவை அனைத்தும் தப்பி வாழ்ந்து இனம் பெருக்கினால் அவற்றின் எண்ணிக்கை மிக அதிகரித்துக் காணப்படும். ஆனால், அவ்வாறன்றி ஓர் இனத்தவரின் எண்ணிக்கை பொதுவாக நீண்ட காலத்திற்கு மாறிலியாகவே இருக்கும்

#### 2. மாறல், விகாரம்

ஓர் இனத்தின் எல்லா அங்கத்தவர்களும் ஒன்றை ஒன்று ஒத்திராது. அவற்றின் பல இயல்புகள் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு நிறம், பருமன், வடிவம், பழக்கம் என்பவற்றில் வேறுபடும்.

#### 3. வாழ்க்கை போர்


இயற்கையில் வளங்கள் அரிதாகக் காணப்படும். உணவு, வாழிடம், இனப்பெருக்க இடம் போன்றன மட்டுப்படுத்தப்பட்டவை. இதனால் அதிக எண்ணிக்கையான தனியன்கள் காணப்பட்டால் அவற்றிடையே இவற்றைப் பெறுவதில் ஏற்படும் போர், போட்டி ஓர் இனத்திற்குள்ளும் வெவ்வேறு இனத்தின் அங்கத்தவர்களுக்குள்ளும் காணப்படும் போட்டி காரணமாக மாறாத வாழ்க்கை போர் நீடிக்கும்.

#### 4. தக்கன பிழைத்தல்

வாழ்க்கை போரின்போது சில மாறல்கள் கூடிய உதவியாகக் காணப்படும். இவ்வாறான மாறல்கள் கொண்ட தனியன்கள் தப்புவதற்குக் கூடிய சந்தர்ப்பம் உள்ளன. இவை இனப்பெருக்கத்தில் ஈடுபட்டால் இவ்வாறான மாறல்கள் அடுத்த சந்ததிகளுக்குக் கடத்தப்படும்.

#### 5. இயற்கை தேர்வு

இயற்கை கூடிய தகவுடைய தனியன்களைத் தேர்வுசெய்யும். இதனால் சிறந்த இயல்புகளை இயற்கை பெற்றுக் கொள்ளும். அதன் மூலம் சிறப்பான இயல்புகளைக் கொண்ட தனியன்களின் எண்ணிக்கை சந்ததி சந்ததியாக அதிகரிக்கும். சிறந்த இயல்புகளைக் கொண்டிருக்காத தனியன்கள் காலப் போக்கில் குறையும். இதனால் சிறப்பற்ற இயல்புகளும் குறையும். எனவே விலங்குகள் படிப்படியாக சூழலுக்கு மிகப் பொருந்தியவையாக மாறும். புதிய இனத்தைத் தோற்றுவிக்கும். இவ்வாறு இயற்கை தேர்வினூடாக பரிணாமம் அல்லது கூர்ப்பு அடைவதாக டாவின் விளக்குகிறார். (தொடரும்)




ஆலிப் அனாம்

## உயர்ந்த இடங்களில் உள்ளவர்களின் இஸ்லாம்

சமீபத்தில் முஸ்லிம் தொழின்மையாளர்கள் (Professionals) குறிப்பாக ஆசிரியர்கள், அதிபர்கள், நிருவாகத் துறையில் கடமையாற்றுவோர் பங்குபற்றிய முழுநாள் செயலமர்வொன்றில் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. ''அறபுலகின் சிவில் சமூக எழுச்சியும் இலங்கை சிறுபான்மை முஸ்லிம்களும்'' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற செயலமர்வின் இறுதியில் கலந்துரையாடலொன்று நடந்தது.

கலந்துரையாடலின்போது பங்குபற்றியோர் முன்வைத்த கருத்துகள் இஸ்லாம் மற்றும் இஸ்லாமிய உலகம் குறித்து அவர்கள் கொண்டுள்ள எதிரும் புதிருமான, முரண்பாடு மிக்க சிந்தனையையே பிரதிபலித்தது.

நமது சமூகத்தில் உயர்ந்த இடங்களில், உயர் பதவிகளை வகித்து வருபவர்களில் அநேகமானோர் தமது அலுவலகங்களில் பல தசாப்தங்களைக் கடத்தி, தலை நரைத்துப் போயுள்ளனர். ஆனால், அறிவிலும் தேடலிலும் அவர்கள் போதிய முதிர்ச்சியடையவில்லை என்பதையே அவர்களின் கருத்துகள் காட்டி நின்றன.

நீண்டகாலம் கல்வித் துறையிலும் நிருவாகத் துறையிலும் பணியாற்றி வரும் இவர்கள், இஸ்லாம் பற்றி குறைந்தபட்ச அறிவையோ, இஸ்லாமிய உலகம் குறித்த தெளிவான பின்னணியையோ கொண்டிருக்கவில்லை. ஆனால், பல தசாப்தங்களை அலுவலகங்களில் கடத்தியிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல சமூகத்தை வழிநடாத்தும் இடங்களிலும் அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள் என்பதுதான் ஆச்சரியத்திற்குரியது.

அவர்களுள் பலர் எவ்வித தேடல் உணர்வும் அற்று, நடப்பியல் விவகாரங்கள் குறித்தே எவ்விதப் பார்வையும் அற்றவர்களாக இருந்தமை ஆச்சரியமளித்தது. தம்மைச் சூழவும் உலகிலும் நடப்பவை பற்றி அறியாத ஒருவர் தனது அறியாமையை அல்லது அக்கறையின்மையை ஏற்றுக் கொள்வது ஆரோக்கியமானது. ஆனால், எதையும் ஆழமாக அறியாத நிலையில் எல்லாவற்றையும் குறித்து அறிந்து வைத்திருப்பதாகக் கருதும் மனோ நிலைதான் மிகவும் ஆபத்தானது. அது சிலவேளை, அகம்பாவம், கர்வம் என்பவற்றின் குறியீடாகவே உள்ளது.

முஸ்லிம் சமூகத்தில் இத்தகையோர்களில் சிலர் இன்னும் நாஸ்திகர்களாகவும் மதச்சார்பற்றவர்களாகவும் இருப்பது மிகவும் ஆச்சரியத்திற்குரியது. இஸ்லாம் குறித்த சில தலைப்புகளை அவர்கள் நகைப்புடன் நோக்கினார்கள். சத்தாம் ஹுஸைன், கடாபி போன்றவர்களை முஸ்லிம் சமூகத்தின் வரலாற்று நாயகர்களாக சித்தரித்தார்கள். மாற்றுக் கருத்து எதனையும் ஏற்றுக் கொள்ளும் மனோநிலையில் அவர்கள் இருக்கவில்லை.

இஸ்லாம் ஒரு சம்பூரண வாழ்க்கை முறை எனும் கருத்து சமூகத்தின் பெரும்பான்மை மக்களுக்கு இன்னும் சென்று சேரவில்லை என்பதையே இவற்றின் தொகுப்பாக நாம் விளங்கிக் கொள்கின்றோம். இஸ்லாம் சமநிலையானது என்ற சிந்தனையும் இன்னும் இவர்களுக்கு எத்திவைக்கப்படவில்லை. இது தஃவாவை விரிவுபடுத்துவதில் நாம் எதிர்நோக்கும் மிகப் பாரிய சவாலாக உள்ளது.

இஸ்லாத்தின் இவ்விரு தலைப்புகளையும் மிக விரிவாக சமூகத்திற்கு முன்வைக்க முடியுமானால் எண்ணிலடங்கா பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்பது மட்டுமல்ல, இஸ்லாமிய மயமாக்கல் என்ற வேலைத் திட்டத்தை சமூகத்திலுள்ள அனைத்து நிறுவனங்களை நோக்கியும் கொண்டு செல்லலாம். இது குறித்து சிந்திப்போமா?

கருத்து – மாற்றுக் கருத்து

# இன்றைய மஸ்ஜித்களும் அதன் நிர்வாகிகளும்

## ஓர் விமர்சனப் பார்வை

திக்குவல்லை இனாயாஹ்

இஸ்லாமிய உம்மத்தின் உயிர் நாடி மஸ்ஜித்களாகும். பள்ளிவாசல்களை மையமாக வைத்தே இஸ்லாமிய சமூகம் புனரமைக்கப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. ஒருநாளைக்கு ஐவேளை அதான் கூறி தொழுகைக்கழைத்து முஸ்லிம்களை பள்ளியோடு தொடர்புபடுத்தி, முஸ்லிமாக வாழவைக்கும் வல்லமையை மஸ்ஜித்கள் கொண்டுள்ளன.

பள்ளிவாசல் என்பது ஒரு புனித இல்லமாகும். அவை இறை இல்லங்கள். எனவேதான் பள்ளி வாயல்களைப் பரிபாலிப்பவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதை அல்குர்ஆன் இவ்வாறு தெளிவுபடுத்துகின்றது.

''எவர்கள் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் விசுவாசித்து தொழுகையையும் கடைப்பிடித்து ஸகாத்தும் கொடுத்து வருவதுடன், அல்லாஹ்வையன்றி மற்றெவருக்கும் பயப்படாமலும் இருக்கின்றார்களோ அவர்கள் தான் அல்லாஹ்வுடைய பள்ளியைப் பரிபாலனம் செய்யத் தகுதியானவர்கள். (முஃமினான இத்தகையோர்களே நேர்வழியில் இருப்பவர்கள்.'' (9:18)

இந்தப் பண்புகளைக் கொண்ட நிர்வாகிகளால்தான் அல்லாஹ்வின் கட்டளைக்கும் நபி (ஸல்) அவர்களின் வழிமுறைக்கும் முரண்படாமல் செயல்பட முடியும். இவ்வாறு இல்லாதபோதுதான் பள்ளிவாயல்களில் அடிக்கடி பிரச்சினைகளும் சண்டை சச்சரவுகளும் தலைதூக்கி சமூகம் பல குழுக்களாக பிரிய நேரிடுகின்றது.



''நிச்சயமாக மஸ்ஜித்கள் எல்லாம் அல்லாஹ்வின் வணக்கத்திற்காகவே அமைக்கப்பட்டுள்ளன. எனவே அங்கு அல்லாஹ்வுடன் சேர்த்து மற்றெவரையும் அழைக்காதீர்கள்'' (72:18) என அல்குர்ஆன் கூறுவதை எமது இன்றைய பள்ளிவாயல் நிர்வாகிகள் கருத்தறிந்து படிக்க வேண்டும். குர்ஆன் கூறும் இப்போதனைக்கு மாற்றமான காட்சிகளையே பெரும்பாலான பள்ளிவாசல்களில் நாம் காண்கிறோம்.

இணைவைக்கும் எச்செயலும் மஸ்ஜித்களில் இடம்பெறக் கூடாது. சடங்கு, சம்பிரதாயம், ஊர் வழமை எனக் கூறிக் கொண்டு இஸ்லாம் அங்கீகரிக்காத அல்லாஹ்-ரஸூலுக்கு மாற்றமான ஈமானைப் பழுதுபடுத்தும் இணைவைத்தலுக்குத் துணைபோகும் எத்தனையோ கைங்கரியங்கள் எமது மஸ்ஜித்களில் அரங்கேறுவதை நாம் இன்று காண்கிறோம். இவை களையப்பட்டு, தூய இஸ்லாம் பேணப்பட வேண்டும். அப்படியாயின் அல்குர்ஆன் (9:18) கூறும் பண்புகள் கொண்ட அல்லாஹ்வையன்றி மற்றெவருக்கும் பயப்படாதவர்களே மஸ்ஜித்களின் நிர்வாகிகளாக வர வேண்டும்.

ஹனபி மத்ஹபின் ஸ்தாபகர் இமாம் அபூ ஹனீபா (றஹ்) அவர்களுக்கு பக்தாத் நகர பிரதம நீதிபதிப் பதவி வழங்கப்பட்ட வேளை, அதனை ஏற்க அவர் மறுத்து விடவே, அவரைச் சிறையில் அடைத்து தண்டனை வழங்கியதாக இஸ்லாமிய வரலாறு சான்று பகிர்கின்றது. மார்க்க பக்தியும் பேரறிஞருமாகிய இமாம் அவர்கள் பதவிக்கு அஞ்சி வாழ்ந்தார்கள் எனில், நாம் எம்மாத்திரம்? பதவி என்பது எவ்வளவு பொறுப்பானது. அதனை யார் பெற வேண்டும் என்பது இதிலிருந்து விளங்குகின்றதல்லவா?

ஓர் ஊரின் நிர்வாகிகளுக்கு அவ்வூரில் நடக்கும் சகல குற்றச் செயல்களுக்கும் அல்லாஹ்விடம் பதில் சொல்லும் முழுப் பொறுப்பும் உள்ளது. ஊரைப் பாவச் செயல்களிலிருந்து பாதுகாப்பதும் குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்துவதும் நிர்வாகிகளின் தார்மீகப் பொறுப்பாகும். இதனை இவர்கள் எவ்வளவு தூரம் நிறைவேற்றுகிறார்கள்?

காலையில் பள்ளிவாசலைத் திறந்து தினமும் ஐவேளைத் தொழுகையை நிறைவேற்றிவிட்டு இஷாவுக்குப் பின் பள்ளியை மூடிவிடுவதோடு நிர்வாகிகளின் கடமைமுடிந்து விட்டது என யாரும் நினைக்கக் கூடாது. நிர்வாகிகள் ஊரைச் சுமந்தவர்கள் என்ற உண்மையை இவர்கள் உணர வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் நிர்வாகிகள் தான்தோன்றித் தனமாக செயற்பட இடமளிக்கக் கூடாது. இவர்களைப் பரிபாலிக்கும் பொறுப்பும் கடமையும் முஸ்லிம் கலாச்சாரத் திணைக்களத்தைச் சார்ந்ததாகும். முஸ்லிம்களின் மார்க்க விடயங்களை கவனிக்க முஸ்லிம் கலாச்சார திணைக்களமே உள்ளது. இன்றைய கால கட்டத்தில் எமது வக்பு சபை, முஸ்லிம் கலாச்சார திணைக்களம், ஜம்இய்யதுல் உலமா சபை என்பன ஒன்றிணைந்து ஓர் ஆக்கபூர்வமான செயல் திட்டமொன்றை உருவாக்கி, எமது பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் வழங்கி, மஸ்ஜித்களின் நிர்வாகத்தை சீர்செய்ய முன்வர வேண்டும்.

மாவட்ட ரீதியில் செயலமர்வுகள், கலந்துரையாடல்கள், பயான் நிகழ்ச்சிகள் போன்றவற்றுக்கு ஏற்பாடு செய்து நிர்வாகிகளுக்கு வழிகாட்டுவது மேற்சொன்ன நிறுவனங்களின் பொறுப்பாகும்.

நியமனக் கடிதங்களை வழங்கி, ஜமாஅத்தினரை டிரஸ்டிகளாக நியமித்தால் மாத்திரம் போதாது. இவர்களின் செயற்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். நிர்வாகிகளுடன் இவர்களின் ஆலோசனைகளையும் புத்திமதிகளையும் ஏற்று சிறந்த நிர்வாகிகளாக அல்லாஹ்வின் திருப்தியை மாத்திரம் எதிர்பார்த்து செயற்பட முன்வர வேண்டும். அதன் மூலம் அல்லாஹ்விடமிருந்து தகுந்த சன்மானத்தை இவர்களால் மறுமையில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ■

---

# கலாநிதி முனா அபுல் பழ்ல்

ஹனான் மஹ்ரூப்

கலாநிதி முனா அபுல் பழ்ல் நவீன எகிப்து ஈன்றெடுத்த அரிய அறிவாளுமைகளில் ஒருவர். 1945இல் கெய்ரோவில் பிறந்த இவர், பல்கலைக்கழகப் பேராசிரியராகவும் எழுத்தாளராகவும் ஆய்வாளராகவும் இருந்து, இஸ்லாத்திற்காகவும் முஸ்லிம் சமூகத்திற்காகவும் ஆற்றிய பணிகள் குறிப்பிடத் தக்கவை. லண்டன் பல்கலைக்கழகத்தில் கீழைத்தேய மற்றும் ஆபிரிக்கக் கற்கைகள் கல்லூரியில் (School of Oriental and African Studies) அரசியல் விஞ்ஞானத்தில் கலாநிதிப் பட்டம் பெற்ற இவர், அமெரிக்காவின் வேர்ஜினா மாநிலத்தில் வசித்து வந்தவர்.

1980களில் எகிப்தில் வாழ்ந்த காலகட்டத்திலேயே எழுதுவதற்கும் நூல்களை வெளியிடுவதற்கும் தொடங்கிய அவர், 2008 செப்டம்பரில் மரணமடையும் வரை முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களையும் 500க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். வேர்ஜினியாவிலுள்ள இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் (IIIT) அனுசரணையில் பல்வேறு ஆய்வுகளை அவர் மேற்கொண்டுள்ளார்.

1980களின் இறுதிப் பகுதி முதல் 1990கள் வரையான ஒரு தசாப்தத்தில் இஸ்லாம், மத்திய கிழக்கு அரசியல், மேற்கத்தேய சமூகம் என்பன தொடர்பாக கலாநிதி முனா எழுதியுள்ள நூல்கள் மேற்கத்தேய புலமையாளர்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. அமெரிக்காவிலுள்ள கலந்துரையாடலுக்கும் கலாசாரத்திற்குமான அல் ஹிவார் நிறுவனத்தின் ஆலோசனை சபை அங்கத்தவராக இருந்த அவர், அமெரிக்காவிலுள்ள அறபு முஸ்லிம்களுக்கும் அமெரிக்க சமூகத்திற்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வையும் கலந்துரையாடலையும் வளர்ப்பதற்குப் பெரிதும் உதவியுள்ளார்.

கெய்ரோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய அவர், அமெரிக்காவின் ஒல்டொமினியன் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும், பிரான்ஸிலுள்ள எய்க்ஸ்என் (AIX-EN) மாகாணத்தின் மத்திய தரைக் கடல் சமூகங்களின் ஆய்வுக்கான நிறுவனத்தின் வருகை நிலைப் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

முனா அபுல் பழ்லின் கணவர் சமகால இஸ்லாமிய உலகின் தலைசிறந்த அறிஞர்களுள் ஒருவரான கலாநிதி தாஹா ஜாபிர் அலவானி என்பது குறிப்பிடத்தக்கது. இவர் வேர்ஜினியாவிலுள்ள இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் தலைவராகவும், இஸ்லாமிய சமூக விஞ்ஞானங்கள் கல்லூரியின் (School of Islamic Social Science - SIS) பணிப்பாளராகவும் இருக்கின்றார்.

ஈராக்கை பிறப்பிடமாகக் கொண்ட தாஹா ஜாபிர் அலவானி, சிறுபான்மை முஸ்லிம்களின் இஸ்லாமிய சட்டத்துறையில் ஆழ்ந்த பரிச்சயம் கொண்டவர். இவரும் இவரது மனைவியான முனா அபுல் பழ்லும் இணைந்து மேற்கொண்ட பல ஆய்வு முயற்சிகள் இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.



அரசியல் கோட்பாடு, ஒப்பீட்டு அரசியல், இஸ்லாமும் மத்திய கிழக்கும், அறிவாராய்ச்சியியல் (Epistomology), பெண்ணிலைவாதம் என்பன இவரது அக்கறைக்குரிய ஆய்வுப் புலங்களாக உள்ளன. அவர் எழுதிய நூல்களுள் அரசியல் விஞ்ஞானத்தில் கருத்து நிலைகள், இஸ்லாமும் மத்திய கிழக்கும், அரசியல் விசாரணையின் அழகியல், மாற்று நோக்குகள், உள்ளிருந்தே இஸ்லாம், மேற்கும் கிழக்கும் சந்திக்கும் இடம் என்பவை குறிப்பிடத்தக்கவை.


கெய்ரோ பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞானங்கள் துறையில் கற்பித்த காலப்பகுதியில் அவரது முக்கிய நூல்கள் வெளிவந்தன. இரு பண்பாடுகளுக்கிடையில் வளர்ந்த முனா அபுல் பழ்ல், அவரது வாழ்வின் தொடக்க காலத்தை கெய்ரோவிலும் இறுதிப் பகுதியை அமெரிக்காவிலும் கழித்துள்ளார். லண்டனில் நீண்ட காலம் வசித்துள்ள அவர், லண்டன் பல்கலைக்கழகத்திலேயே கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார்.

லண்டனிலும் வேர்ஜினியாவிலும் வாழ்ந்த முனா, மேற்கத்தேய கலாச்சாரங்களுக்கு மத்தியில் இஸ்லாமிய தனித்துவத்தோடு வாழ்ந்தார் என்பது மட்டுமல்ல, சமநிலையான இஸ்லாத்தின் பிரதிநிதியாக விளங்கினார். 2008 செப்டம்பரில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு அவர் உயிரிழந்தபோது இஸ்லாமிய உலகின் முன்னோடி அறிஞர்கள் பலர் அவரது மரணம் குறித்து தமது அனுதாபத்தைத் தெரிவித்திருந்தனர்.

இஸ்லாமிய உலகின் மிகப் பெரும் இயக்கமான சகோதரத்துவ அமைப்பின் அமெரிக்கப் பிரதிநிதியாக கலாநிதி தாஹா ஜாபிர் அலவானியும் அவரது மனைவி முனா அபுல் பழ்லும் இயங்கி வந்தனர். சகோதரத்துவ அமைப்பு, தலைவர் கலாநிதி முனா அபுல் பழ்லின் மரணம் எதிர்பாராத ஒன்று எனவும் ஈடுகட்ட முடியாதது எனவும் தனது அனுதாபச் செய்தில் குறிப்பிட்டிருந்தது. ■

# வளைகுடா திட்டத்தை ஏற்றுக்கொள்வதே யெமன் நெருக்கடிக்கான தீர்வு

## சவூதி மன்னர் அப்துல்லாஹ் வலியுறுத்து





யெமன் புரட்சியாளர்கள் ஜனாதிபதி ஸாலிஹை உடனடியாகப் பதவி விலகுமாறு மீளவும் கோரியுள்ளனர். தவறும்பட்சத்தில் எதிர்ப்புப் போராட்டங்கள் மீண்டும் புதிது புதிதாகத் தொடங்கப்படும் எனவும் எச்சரித்துள்ளனர். ஜனாதிபதிக்கு விசுவாசமான இராணுவ ஜெனரல் ஒருவரும் 30 படையினரும் கொல்லப்பட்டுள்ளதோடு பலர் பணயக் கைதிகளாகவும் பிடிபட்டுள்ளனர்.

குடியரசுக் காவல் படையின் 63ஆவது படைப்பிரிவின் தலைவர் ஜெனரல் அப்துல்லாஹ் அல் குலைபியே கோத்திரத் தலைவர்களால் கொல்லப்பட்டுள்ளார். நிஹ்ம் எனப்படும் முக்கிய நகரை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துள்ளதாக கோத்திரத் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

யெமனின் இஸ்லாஹ் கட்சியைச் சேர்ந்தவர்களே இப்பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளதாக யெமனின் தேசிய தொலைக்காட்சி அறிவித்துள்ளது. இவர்கள் சுமார் 30 யெமனியப் படையினரைக் கடத்திச் சென்றுள்ளதாகவும் அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது. கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து யெமனில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் மக்கள் எழுச்சிப் போராட்டங்களில் ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் சிகிச்சை பெற்று நாடு திரும்பியுள்ள ஜனாதிபதி அலி அப்துல்லாஹ் ஸாலிஹ், வளைகுடா கூட்டுறவு கவுன்சில் நாடுகள் முன்வைத்த சமாதானத் திட்டத்தில் ஒப்பமிடுவதற்குத் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருகின்றார். தனக்குப் பதிலாக பதில் ஜனாதிபதி அப்து ரப் மன்ஸூர் என்பவரை நியமித்துள்ளதாக ஸாலிஹ் தெரிவித்தார். இது குறித்து அவர் ஆற்றிய உரை நாட்டுக்குப் புதிய செய்தி எதனையும் சொல்லவில்லை என இஸ்லாஹ் கட்சி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இவ்வொப்பந்தத்தில் ஸாலிஹ் கைச்சாத்திடும் பட்சத்தில் அவர் மீதான போர்க் குற்றங்களிலிருந்து விடுதலை செய்யப்படுவார் எனக் கூறப்பட்டுள்ளது. யெமனின் புரட்சிகள் மென்மேலும் கூர்மையடைந்து வருவதையே தற்போதைய நிலைமைகள் காட்டுவதாக வெளிநாட்டு ஊடகங்களும் செய்தியாளர்களும் தெரிவிக்கின்றனர்.

சவூதி மன்னர் அப்துல்லாஹ் வளைகுடா கூட்டுறவு சபையின் சமாதானத் திட்டத்தில் ஒப்பமிடுமாறு யெமன் ஜனாதிபதியைக் கோரியுள்ளார். யெமன் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வர தொடர்ந்தும் உள்ள ஒரே வழி வளைகுடா சமாதானத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதே என மன்னர் தெரிவித்துள்ளார்.

# சிரியா: ஆயுதப் போர் மூளும் அபாயம்



சிரியாவில் அரசுக்கெதிரான எதிர்ப்புப் பேரணிகள் தீவிரமடைந்துள்ளதால் ஹிம்ஸ், ஹலப் போன்ற பிராந்தியங்களுக்கு மேலதிக அரச படைகள் அனுப்பப்பட்டுள்ளதாக டமஸ்கஸ் தெரிவிக்கின்றது. சிரியாவில் கடந்த பல மாதங்களாக நடைபெற்று வரும் அரசாங்கத்திற்கெதிரான மக்கள் புரட்சியை அடக்குவதற்கு அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து தீவிர விமர்சனங்கள் எழுந்துள்ளன.

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் மக்கள் மீது பிரயோகிக்கப்படும் வன்முறைகளால் இதுவரை 2800 பேர் உயிரிழந்துள்ளதாக ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகளுக்கான ஐ.நா.உயர் சபை தெரிவித்துள்ளது. டமஸ்கஸின் வடகிழக்குப் புறமாக உள்ள தூமா எனும் பகுதியில் அரச படையினர் மேற்கொண்ட தாக்குதலின்போது பலர் உயிரிழந்துள்ளதை ஐ.நா. மனித உரிமைப் பேரவை கண்டித்துள்ளது.

ஜனாதிபதி பஷர் அல் அஸத் பதவி விலக வேண்டும் என்று கடந்த மார்ச் 15ம் திகதியிலிருந்து சிரியாவில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அரசாங்கம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றவர்களை பயங்கரவாதிகள் என்று குற்றம் சுமத்தி வருகின்றது. துருக்கி-சிரிய எல்லையிலேயே அரசாங்கத்தின் புதிய படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர். லெபனான் சிரிய. எல்லைப் புறமாக இதுவரை 25000 சிரியர்கள் அகதிகளாக வெளியேறிச் சென்றுள்ளனர். சிரியாவின் நிலைமைகள் கவலையளிப்பதாக சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

# லிபியாவில் 29 டொன் தங்கம் சட்டவிரோதமாக விற்பனை

லிபியாவின் தேசிய வங்கியிலிருந்து 29 டொன் தங்கம் புரட்சி நடைபெற்ற காலப் பகுதியில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக இடைக்கால தேசிய சபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். நாட்டின் அரச ஊழியர்களது சம்பளத்தை அதிகரிப்பதற்கு கடாபி நாட்டின் சொத்துக்களை லிபியாவின் தனிநபர்களுக்கும் அயல் நாடுகளைச் சேர்ந்த செல்வந்தர்களுக்கும் விற்பனை செய்துள்ளதாக இடைக்கால சபை மேலும் தெரிவிக்கின்றது.

ஏப்ரல், மே மாதங்களிலேயே இவ்விற்பனை இடம்பெற்றிருக்க வேண்டும் என ஆவணங்கள் உறுதி செய்வதாக இடைக்கால சபையின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார். ஷாட், அல்ஜீரியா போன்ற அயல்நாடுகளுக்கு இத்தங்கம் எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனவும் அவ்வுயர் அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

# துருக்கி எண்ணெய் அகழ்வில் கவனம்



மத்திய தரைக் கடலின் கிழக்குப் பகுதியில் துருக்கி எண்ணெய் வளம் மற்றும் இயற்கை எரிவாயுவை கண்டு பிடிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக துருக்கியின் எனடோலியா செய்தி நிறுவனம் தெரிவிக்கின்றது. கடந்த வாரத்திலிருந்து இப்பிரதேசத்தில் இருப்பதாக நம்பப்படும் இயற்கை எரிவாயு மற்றும் பெற்றோலிய வளம் குறித்த ஆய்வுகளை துருக்கிய விஞ்ஞானிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

துருக்கிய ஆய்வு நிறுவனத்திற்குச் சொந்தமான கப்பல் இப்பிராந்தியத்தில் தங்கியுள்ளதாக அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது. துருக்கியின் இஸ்மிர் மாகாணத்திலுள்ள தோகுஸ் ஐலூல் பல்கலைக்கழக பெற்றோலிய வளத் துறை ஆய்வாளர்களே இப்பணியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே மத்திய தரைக் கடலின் தெற்குப் பகுதியில் சைப்ரஸ் அரசாங்கம் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. வடக்கு சைப்ரஸ் குடியரசோடு துருக்கி அரசாங்கம் மேற்கொண்ட ஒப்பந்தத்தை அடுத்தே அங்காரா எண்ணெய் வள ஆய்வில் ஈடுபட்டுள்ளதாக துருக்கிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## பிக்ஹுல் குத்ஸ்



அபூ அப்தில் பத்தாஹ்

### பலஸ்தீன விவகாரம் தொடர்பான நிலைப்பாடுகள்

# நலன்களை அடிப்படையாகக் கொண்ட நிலைப்பாடு:

சென்ற நூற்றாண்டின் எழுபது களைத் தொடர்ந்த காலப் பகுதியில் எண்ணெய் வளம் உலக அரங்கில் அதி உன்னத இடத்தைத் தட்டிக் கொள்ளும் அளவுக்கு முக்கியத்துவம் பெறலாயிற்று. எண்ணெய் வள நாடுகள் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்டு முன்னேற்றம் கண்ட மேற்கத்திய நாடுகளின் கவன ஈர்ப்புக்கு உள்ளாகின. சர்வதேச நிகழ்வுகளை நகர்த்தும் உந்து சக்தியாக பெற்றோல் மாறியது. இக்காலப் பகுதியில் முதலாளித்துவ சோசலிஸ அணிகளுக்கிடையிலான பனிப்போர் அதன் உச்சத்தை அடைந்திருந்தது. இப்போரில் நேரடியாக சிக்காது இடைவிலகிச் சென்ற நாடுகள் அணிசேரா அமைப்பாக ஒன்றுதிரண்டன.

இருப்பினும் ஜமால் அப்துல் நாஸர், மார்ஷல் டிட்டோ, பண்டாரநாயக்க போன்ற இதன் ஸ்தாபக சிற்பிகள் குருதி நிற சார்பு சிந்தனை கொண்டோராக விளங்கினர். இதனால் அறபு-இஸ்ரேல் போராட்டத்தில் அமெரிக்கா, இஸ்ரேலை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் இருந்ததால் அணிசேரா முகாமைச் சேர்ந்த பெரும்பான்மை நாடுகள் எண்ணெய் வளம் மிக்க அறபு நாடுகளுடன் இணைந்து பலஸ்தீன சார்புக் கொள்கையைக் கடைப்பிடித்தன.

இக்காலப்பகுதியில் இலங்கைக்கும் அறபு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மிகவும் இறுக்கமாக அமைந்திருந்தன. குறிப்பாக, உலகில் முதலாவது பெண் பிரதமரான சிறிமாவோ பண்டார நாயக்க அம்மையாரின் காலப்பகுதியில் இவ்வுறவு உச்ச கட்டத்தை அடைந்தது.

முஸ்லிம் பெண்களுக்கே ஜனாஸா தொழுகை கடமையில்லாதபோதும், பண்டாரநாயக்க அம்மையார் நாஸரின் ஜனாஸாவில் கலந்து கொண்டார்.


ஜமால் நாஸர் மரணித்த சூடு ஆறுவதற்கு முன்னரே நமது அம்மையார் கெய்ரோ விமான நிலையம் சென்று இறங்குவதற்கு மத்திய கிழக்கின் பெற்றோலியமே அவரைத் தூண்டியது.

அம்மையாரின் ஆட்சிக் காலப் பகுதியில் எரிபொருள் பாவனையைக் குறைத்து, சேமிக்கும் நோக்கில் பாதைகளின் வளைவு நெளிவுகள் நேராக்கப்பட்டன. வாரத்தின் விடுமுறை தினத்தில் அத்தியவசியப் பயணங்களுக்கு மாத்திரம் தனியார் வாகனங்கள் பயணிக்க அனுமதிக்கப்பட்டன.

இத்தகைய கடுமையான நடவடிக்கைகளைக் கையாண்டு தனது 'புதுமையான பசுமைப் புரட்சியை' முன்னெடுத்துச் செல்வதற்கு எரிபொருள் விலை ஏற்றம் அம்மையாருக்குப் பெருந் தலையிடியாக அமைந்தது. உள்நாட்டுப் பொருளாதார நெருக்கடி, ஜனாஸா தொழுத அம்மையாரின் கிப்லாவாக மத்திய கிழக்கு நாடுகளை மாற்றிவிட்டது.

அறபு நாடுகளின் அன்பைப் பெற்று, அவற்றின் அரவணைப்பால் கிட்டும் பொருளாதார நலன்கள் மூலமேஉள்நாட்டில் நிலவும் கோர வறுமையின் பிடியிலிருந்து தேசத்தை மீட்க முடியும் என்ற ஞானம் அம்மையாரின் சிந்தனையில் உதித்தது.

உடனடியாக இலங்கை மண்ணில் இஸ்ரேல் தூதரகம் மூடப்பட்டது. அடுத்த கணமே மத்திய கிழக்கில் இலங்கைப் பெண்களுக்கு தொழில் வாய்ப்புகளுக்கான கதவுகள் திறக்கப்பட்டன.



இலங்கை- பலஸ்தீன் நட்புறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. தாயகத்தில் இராக கதை பேசி காலத்தைக் கழிக்கும் அறபு மக்களின் முதல் தெரிவாக 'ஷாயி ஸைய்லான்' (இலங்கைத் தேயிலை) கொடி கட்டிப் பறக்க ஆரம்பித்தது.

கிட்டிய தசாப்தங்களில் கழிந்து விட்ட காலங்கள் பற்றிய இந்த வரலாற்றுக் கிளர்வு பேரினவாதிகளின் வயிற்றில் புளியைக் கரைத்து விடாதிருக்கட்டும். சூடு தணியாத நேற்றைய நிகழ்வுகளால் பாடம் கற்காத இவர்களா கிட்டிய வரலாற்றால் படிப்பினை பெறுவார்கள்?

எது எப்படி இருப்பினும் இரு தரப்பு நலன்களின் அடிப்படையிலேனும் பலஸ்தீன் நோக்கிய ஒரு நேர் மறையான நிலைப்பாட்டையே நமது அம்மையார் கொண்டிருந்தார். காலச் சக்கரம் சுழன்றது, அறபுலக அரங்கில் கனவுகள் நிஜங்களாக அரங்கேறின. மனித குலத்தை சிருஷ்டித்த அல்லாஹ்வால் சபிக்கப்பட்டவர்களே யூதர்கள். இவர்கள்தான் முஸ்லிம்களின் பரம வைரிகள் என அல்குர்ஆன் குறிப்பிட்டுள்ளது.

இவர்களால் அபகரிக்கப்பட்டு முஸ்லிம் உலகின் இதயத்தில் உருவாக்கப்பட்டதே இஸ்ரேல். இத்தேசத்தை பூகோளப் படத்திலிருந்து நீக்கி விடுவோம் எனக் கங்கணம் கட்டிக் கொண்டு தான் 1967இல் அறபுலகப் படைகள் இஸ்ரேலுக்கு எதிராக யுத்தம் தொடுத்தன. 1980களைத் தொடர்ந்து இதே அறபு நாடுகள் ஒன்றன் பின் ஒன்றாக இஸ்ரேலை ஒரு சட்ட ரீதியான நாடாக அங்கீகரித்தது. அதனுடன் இராஜ தந்திர மட்டத்திலான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள ஆரம்பித்தன.

அத்தோடு சோசலிஸ-முதலாளித்துவ அணிகளுக்கிடையிலான பனிப் போரில் செம்படை முகாமை வழிநடத்திய சோவியத் ஒன்றியம் சரிந்து வீழ்ந்தது. பேர்லின் சுவர் உடைத்து நொறுக்கப்பட்டது. அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவ முகாம் இருபத்தோராம் நூற்றாண்டை இயக்கி நகர்த்தும் ஒற்றை அதிகாரக் கூம்பாக உருவெடுத்தது. இவ்வதிகாரக் கூம்பின் உச்சிப் புள்ளியில் அனைத்து உலக நாடுகளும் சரணாகதி அடைந்து சங்கமமாகி விட்டன.

சர்வதேச அரங்கம் 'புதிய உலக அமைப்பின்' கீழ் கோளமயமாகியது. தேசங்களின் உருவாக்கத்தின் அடிப்படைப் பண்புகளில் ஒன்றாகிய இறைமையை இழந்த வெறும் புவியியல் பிரிகோடுகளாக பூவுலகு காட்சி தந்தது. எஞ்சியுள்ள இந்தப் புவியியல் எல்லைகளையேனும் தக்க வைப்பதற்கான ஒரே ஒரு அனுமதிப் பத்திரமாக இஸ்ரேலை அங்கீகரிப்பது என்பது இருப்பத்தோராம் நூற்றாண்டின் அருணோதயத்தோடு, சர்வதேச அரங்கில் விதிவிலக்கில்லாத ராஜ தந்திர விதியாக மாறிவிட்டது.

அறபுகளால் சூட்டப்பட்ட ஸ்ரண்டீப் நாமம் கொண்ட மண்ணிலிருந்து இஸ்ரேல் தூதரகத்தை அகற்றிய இலங்கையில் புதிய நூற்றாண்டின் பின்வந்த அரசுகளால் இந்தப் புதிய விதிக்கு முன்னால் விதிவிலக்காக நின்று பிடிக்க முடியுமா?

பலஸ்தீனப் பிரச்சினையை விட்டுக் கொடுக்க முடியாத ஒரு ஈமானிய அம்சமாக நோக்க வேண்டுமென இறுதி மார்க்கம் தான் பணிக்கிறது. சித்தார்த்தர் சாத்வீகத்தையே பணித்தார். இனத் துவேச எரிபொருள் ஊற்றி இயக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய இலங்கையின் அரச இயந்திரம் விதிவிலக்கான துணிச்சல் மிகு நிலைப்பாட்டை எடுப்பதால் சிங்களத் தீபத்தில் யாருக்குத் தான் என்ன நலன்! இப்படி இப்படி நூறாயிரம் கேள்விகள்??? தீர்வு...? முடிவு...?

தேசிய பயங்கரவாதத்தை பூண்டோடு அழித்துவிட்ட(?) மதிமயக்கத்தில் மாஜி பிரதமர் சர்வதேச மனித குலப் பயங்கரவாதியாகிய இஸ்ரேலிற்கு 'களுத் துறை போதிக்கும்' மேலால் விமானத்தில் பறந்து சென்று காணிக்கை போட்டு, தடைப்பட்டிருந்த இலங்கை-இஸ்ரேல் உறவை புதுப்பித்து விட்டு வருகிறார். இலங்கை தூதரகமும் சபிக்கப்பட்ட இஸ்ரேல் மண்ணில் திறக்கப்படுகிறது.

பாலைவனத்தின் மத்தியில் அமைந்துள்ள பாலைவனச் சோலையினை இஸ்ரேலிற்கு விவசாயப் பயிற்சிக்காக நமது இளவல்கள் அனுப்பப்படுகிறார்கள். அவர்களுள் பெரும்பாலானோர் 'மி' ஜெனடிக் இனத்தைச் சேர்ந்த சாமியார்களின் புதல்வர்கள் என்பது மூன்றாம் இனத்தின் முக்கிய நபர்கள் மாத்திரம் அறிந்து வைத்துள்ள ஒரு பரம இரகசியம். இப்படியாகப் பல அனுக்கிரகங்கள் தொடர்கின்றன. இரு தரப்பு(?) நலன்கள் பரிமாறப்படுகின்றன.

இருப்பினும் அவ்வப்போது பலஸ்தீனம் சார்பான நிகழ்வுகளையும் இந்த மண் சந்திக்கிறது. பலஸ்தீன ஜனாதிபதி(?) அப்பாஸ் இலங்கைக்கு விஜயம்... செங்கம்பள வரவேற்பு... பலஸ்தீனத் தூதரகத்தின் கண்காட்சிக் கூடத்திற்கு உயர் மட்ட அரச தரப்பு பிரமுகர்கள் விஜயம்... இவற்றால் நீங்கள் பிரமிப்படைய வேண்டாம்.

நலன்களை ஈட்டிக் கொள்வதற்காக இரட்டை வேடத்தில் நடிக்கும் நவீன கலைதான் இன்றைய அரசியல். இதுவன்றி இவற்றையெல்லாம் நம்மவர்களின் ஓட்டுகளைப் பெற்றுக் கொள்வதற்கான பிரச்சார உத்திகள் என பிழையான விளக்கம் கொடுக்க வேண்டாம். ▮

# சவூதி அறேபியாவில் பெண்கள் வாக்களிப்பதற்கும் தேர்தலில் ஈடுபடுவதற்கும் அனுமதி

தேர்தலில் பெண்கள் வாக்களிப்பதற்கும் மன்னருக்கு ஆலோசனை வழங்கும் ஷூறா சபையில் பெண்கள் அங்கத்துவம் வகிக்கவும் சவூதி மன்னர் அப்துல்லாஹ் அனுமதி வழங்கியுள்ளார். கடந்த சில தசாப்தங்களாக சவூதி அரசாங்கம் மீதான சர்வதேச மனித உரிமை நிறுவனங்களின் அழுத்தங்களின் விளைவாகவே இம்முடிவை அவர் மேற்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், கடந்த சில மாதங்களாக அறபு நாடுகளில் நடைபெற்று வரும் மக்கள் எழுச்சிப் போராட்டங்களின் எதிரொலியாகவே மன்னர் அப்துல்லாஹ்வின் இம்முடிவு வெளிவந்துள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதன் மூலம் அறபு நாடுகளில் பெண்களுக்கு



வாக்குரிமை அளிக்காத நாடுகளின் பட்டியலில் இருந்து சவூதி அறேபியா விலகிக் கொள்கின்றது.


2015ம் அண்டு நடை பெறவுள்ள நகராட்சித் தேர்தலில் பெண்களுக்கு வாக்களிக் கும் உரிமையும் தேர்தலில் களமிறங்கும் உரிமையும் வழங்கப்படுகின்றது என மன்னர் அப்துல்லாஹ் கூறினார்.

பெண்கள் மீது கடும் விதிமுறைகளைப் பிரயோகித்து வந்த சவூதி அறேபியாவின் இந்நடவடிக்கையை அனைத்து மனித உரிமைகள் நிறுவனங்களும் வரவேற்றுள்ளன. வாகனங்கள் ஓட்டுவதற்கும் பெண்கள் மீது தடைவிதிக்கப் பட்டிருந்தது. ஆனால், சமீபகாலமாக பெண்கள் இத்தடையை மீறி செயற்பட்டு வந்தனர்.

பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கும் இறுதி நாடாக சவூதி அறேபியா கருதப்படுகின்றது. சவூதிப் பெண்களுக்கு இது மிகவும் உற்சாகமளிக்கும் செயல் என்று அறபு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. எதிர்காலத்தில் கவுன்சிலராகரோ அமைச்சராகவோ பெண்கள் வரக் கூடிய வாய்ப்பு இதன் மூலம் ஏற்பட்டுள்ளது என்று அவதானிகள் கருதுகின்றனர். ▮

# ஒபாமா: சியோனிஸத்தின் புதிய தலைவர்!!

ரவூப் ஸெய்ன்



'மாற்றத்தில் நாம் நம்பிக்கை வைக்கின்றோம்' என்ற அரசியல் கோஷத்தோடு வெள்ளை மாளிகையைக் கைப்பற்றிய கறுப்பினத் தலைவர் ஒபாமா அமெரிக்காவில் ஏற்படுத்தி வரும் மாற்றங்கள் உலக அதிசயங்களின் பட்டியலில் இடம்பிடித்து வருகின்றன. ஒபாமா முஸ்லிம் பூர்வீகத்தைக் கொண்டவர் என்ற பிரச்சாரமே அவரது அரசியலைத் தொடங்கி வைத்த முதல் வரலாற்றுப் புழுகு. அமெரிக்காவில் செயற்படும் சியோனிஸ லொபிகளே தம்மிடமுள்ள ஊடகங்கள் மூலம் இப்பிரச்சாரத்தைக் கொண்டு சென்றன. அதன் மூலம் சியோனிஸத்திற்கு ஆதரவான ஒபாமாவுக்கு முஸ்லிம்களின் வாக்குகளை தாரைவார்ப்பதே அவற்றின் நோக்கமாக இருந்தது.

ஐக்கிய அமெரிக்காவில் சுமார் பத்து மில்லியன் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். வெள்ளை இனத்துவ ஆட்சியின் கீழிருந்த அமெரிக்கர்களுக்கு ஒபாமாவின் வருகை ஓர் புதிய உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்பே ஒபாமாவின் தேர்தல் வெற்றிக்குப் பின்னணியாக இருந்தது. ஏதோ ஒரு மாற்றம் எங்கிருந்தோ தொடங்கலாம் என்ற உலக மக்களின் எதிர்பார்ப்பு இன்று சிறிது சிறிதாய் சரிந்து வருகின்றது.

அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில், அலபாமாவில் வாழும் கறுப்பின மக்களின் வாழ்வில், கலிபோனியா தோட்டத்தில் பணியாற்றும் கடும் உழைப்பாளிகளின் ஊதியத்தில், பலஸ்தீனப் பிரச்சினையில், அறபு நாடுகளுடனான உறவில் இந்த மாற்றங்கள் நிகழலாம் என்ற எதிர்பார்ப்பு இன்று சுக்குநூறாய் உடைகின்றது.

ஐ.நா. பொதுச்சபையில் நடைபெற்று வரும் பலஸ்தீன் சுதந்திர நாட்டு கோரிக்கை மீதான விவாதங்கள் சுத்தமாகவே ஓர் அபத்தம் என்பதை ஒபாமா நிரூபிக்கக் காத்திருக்கின்றார். மாற்றத்தை ஒபாமா நிகழ்த்தவில்லை என்று யாரும் நினைத்துவிடக் கூடாது. ஒபாமாவுக்குப் பிந்திய அமெரிக்காவில் பெரும் பெரும் மாற்றங்கள் -எதிர்பார்க்காத, எல்லைகளைத் தாண்டுகின்ற மாற்றங்கள் நிகழ்ந்தவண்ணமே உள்ளன.

ஆனால் அவை உலகம் எதிர்பார்த்ததற்கு எதிர்த் திசையிலேயே நிகழ்கின்றது அவ்வளவுதான். கெய்ரோ உரையின்போது அறபு முஸ்லிம் நாடுகளுடனான அமெரிக்க உறவை பரஸ்பர புரிந்துணர்வு, பரஸ்பர கௌரவத்தின் மீது மீளக் கட்டியெழுப்புவோம் என்றார் ஒபாமா.

ஆனால் இன்று அப்பாஸின் சுதந்திர தேசத்திற்கு எதிராக ஒபாமா போடவுள்ள வீட்டோ (ரத்து அதிகாரம்) அவரது கூற்றைப் பொய்ப்படுத்தப் போகின்றது. 23,000 சதுர கிலோ. மீற்றர் பரப்பு கொண்ட பலஸ்தீன தேசத்தில் சுமார் 20,000 சதுர கி.மீ. பரப்பை ஆக்கிரமிப்பினூடாக விழுங்கி, சியோனிஸ இஸ்ரேலை பிரகட னப்படுத்தியுள்ள யூதர்களின் புதிய தலைவராக ஒபாமா மாறி வருகின்றார். இத்தனைக்கும் மத்தியில்தான் 1500 ச.கி.மீற்றருக்கும் குறைவான மேற்குக் கரையை சுதந்திர நாடாக ஏற்குமாறு மஹ்மூத் அப்பாஸ் கெஞ்சிக் கேட்கிறார்.

ஒரு தேசம் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு, சிவில் ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட்டு, எல்லா வகை அரச நிறுவனங்களும் பலப்படுத்தப்படும்போது அது தன்னை சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்கின்றது. சமீபத்திய உலக வரலாறு வரைக்கும் இதுவே அரசியல் யதார்த்தம். ஆனால், ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தின் மிகச் சிறிய பகுதியையேனும் சுதந்திர தேசமாகக் கோரும் ஒரு பிச்சை கோரிக்கைக்குக் கூட ஒபாமா எதிர்த்து வாக்களித்து சியோனிஸத்தை காப்பாற்றுகிறார் என்பதன் அர்த்தம் என்ன?

நான்கு மில்லியன் யூத சியோனிஸ்டுகளை திருப்திப்படுத்துவதற்கு 157 கோடி மக்களின் எதிர்ப்பையும் அவர் கிடப்பில் போடுகின்றார். மாற்றம் நிகழ்கின்றது. ஆனால், எதிர்த் திசையில். கிளின்டன் நவீன அமெரிக்க அரசியல் வரலாற்றில் மிகவும் கீழ்த்தரமான சியோனிஸ விசுவாசத்தைக் கையாண்டவர். ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக ஈராக் மீது குண்டுகளை வீசியவர். பல்லாயிரக்கணக்கான ஈராக்கிய சிறுவர்கள் உருக்குலைந்து போவதற்கு காரணமானவர். அவருக்குப் பிந்திய புஷ் இன்றைய முழுமொத்த உலகையே அழிவின் விளிம்பில் கொண்டு வந்து நிறுத்தியவர். ஒபாமா இவர்களின் தொடர்ச்சி மட்டுமல்ல, அவர்கள் தொடங்கி வைத்த அமெரிக்காவின் அழிவை மிகவும் துரிதப்படுத்தி வருகின்றவர்.

இன ஒதுக்கலுக்கு உட்பட்டிருக்கும் அலபாமா போன்ற அமெரிக்க மாநிலங்களில் வாழும் கறுப்பின மக்கள் ஒபாமா ஜனாதிபதியானால் தமது வறுமையும் வேலையில்லாப் பிரச்சினையும் தீர்ந்து விடும் என்று கனவு கண்டார்கள். கனவு நிஜமாகவில்லை. அவர்கள் எதிர்கொண்ட வறுமை புஷ்ஷின் காலத்தை விட பன்மடங்கு அதிகரித்துள்ளது. சுமார் 35 மில்லியன் கறுப்பின மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர். அமெரிக்காவில் வேலையற்ற இளைஞர்களின் வாழ்வில் ஒபாமாவின் வருகை மாற்றத்தை நிகழ்த்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், வேலையற்றோரின் விகிசாதாரம் 6 இலிருந்து 8ஆக அதிகரித்துள்ளது. மாற்றம் நிகழ்கின்றது எதிர்த் திசையில்.

பெனாசிரின் காலத்தில் அவரோடு முரண்பட்ட கிளிண்டன், பாகிஸ்தானுக்கான உதவியை நிறுத்தியதோடு இராணுவ உதவிகளையும் பின்வாங்கிக் கொண்டார். முஷர்ரபின் காலத்தில் பாகிஸ்தானின் இறைமையை கிடப்பில் போட்டு விட்டு அந்நாட்டின் வான் எல்லையிலும் நில எல்லையிலும் புஷ்ஷின் படையினர் விமானத் தாக்குதல்களை நடத்தினர். இன்று ஒபாமாவிற்கும் பிரதமர் யூசுப் ரஸா கிலானிக்கும் பாரிய முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

பாகிஸ்தான் தொடர்பில் இது வரை அமெரிக்கா ஒன்றில் 'மிரட்டும் அரசியலை' அல்லது 'குற்றம் பிடிக்கும் விளையாட்டையே' கையாண்டு வருகின்றது. இந்திய-காஷ்மீர் பூச்சாண்டியை வைத்து அமெரிக்கா இந்த அதிகார விளையாட்டில் இறங்கியுள்ளது. பிராந்தியத்தில் பாகிஸ்தானை தனிமைப்படுத்துவதும் எதிர்காலத்தில் அதன் மீது குறி வைப்பதுமே ஒபாமா நிருவாகத்தின் குறிக்கோள்.

இந்தியாவை ஒருவிதமாகவும் பாகிஸ்தானை இன்னொரு விதமாகவும் கையாண்டு வரும் அமெரிக்காவின் இரட்டை நிலைப்பாடு கிலானியின் அரசுக்கு ஒன்றும் புதிதல்ல. பாகிஸ்தானை தன் கைப்பிடிக்குள் வைத்திருக்கும் அமெரிக்கா அந்நாட்டின் சுதந்திரத்திற்குப் பின்னர் இதே வகையான கொள்கையையே பின்பற்றி வருகின்றது. அமெரிக்காவோடு உறவு வைத்துக் கொள்வது பாகிஸ்தானுக்கு புலி வாலைப் பிடித்த கதையாகவே தொடர்கின்றது.

கிலானி வெளியிடும் சூடான அறிக்கைகள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதை பிரதிபலிக்கின்றது. தெற்காசியாவில் ஒபாமா நிருவாகம் புதியதோர் வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றும் என்ற எதிர்பார்ப்பும் சரிந்து விட்டது. இந்தியா, இஸ்ரேல், அமெரிக்கா என்ற முக்கூட்டு சதித்திட்டத்தின் கீழ் பாகிஸ்தானின் இறைமையும் தன்னாட்சியும் கேலிக் கூத்தாகி விட்டது.

தெற்கு சூடானை தனிநாடாக பிரிப்பதற்கு சூடான் மக்கள் விடுதலை இயக்கத்திற்கு ஆயுதங்களை வழங்கி வந்த அமெரிக்கா, இறுதியில் அதன் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டது. உமர் பஷீரின் வடக்கு சூடானுக்கு எதிராக ஒபாமா நிருவாகம் விதித்திருக்கும் பொருளாதாரத் தடை அறபு முஸ்லிம் நாடுகளோடு கிளிண்டனும் புஷ்ஷும் பின்பற்றிய அதே கொள்கையையே ஒபாமாவும் பின்பற்றி வருகிறார் என்பதற்குத் தெளிந்த உதாரணமாகும்.

இறுதிவரைக்கும் கடாபியோடு ரகசிய பேச்சுவார்த்தைகளையும் உளவு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்த ஒபாமா புரட்சியின் பக்கம் சாய்ந்து கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவளித்து வருவது அமெரிக்காவின் ஏகாதிபத்திய மனோபாவத்தையே புலப்படுத்தியுள்ளது.

ஈராக்கிலுள்ள பெரும்பாலான எண்ணெய் வயல்கள் மீது அமெரிக்கக் கம்பனிகள் கொண்டுள்ள தன்னாதிக்கம், அதன் வெளிநாட்டுக் கொள்கையில் துளி அளவிலேனும் மாற்றம் நிகழவில்லை என்பதற்குச் சான்றாக உள்ளது. முன்பை விட இஸ்ரேலுக்கும் சியோனிஸ லொபிகளுக்கும் கட்டுப்பட்டு நடக்கும் தலைவராக ஒபாமா மாறியுள்ளார்.

மாற்றத்தில் நாம் நம்பிக்கை வைத்திருக்கின்றோம் என்ற அவரது அரசியல் கோஷம் அடுத்த தேர்தலிலும் பிரதிபலிக்கலாம் என்பதில் ஆச்சரியமில்லை. ஆனால், அமெரிக்க மக்களையும் அறபு முஸ்லிம் நாடுகளையும் மென்மேலும் பின்னுக்குத் தள்ளும் அவரது மாற்றங்கள் எதிர்த் திசையிலேயே நிகழ்ந்து கொண்டிருப்பதுதான் ஆச்சரியத்திற்குரியது. அவரது இன்றைய செயற்பாடுகளை தொகுத்துப் பார்த்தால் சியோனிஸத்தின் புதிய தலைவராக அவர் தன்னைப் பிரகடனம் செய்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

மாற்றத்தில் உலக மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை ஒபாமா காப்பாற்றாவிட்டால் உலக நாடுகளின் நெருக்கடிகளை மட்டுமல்ல, அமெரிக்காவின் நெருக்கடிகளையே அவரால் தீர்க்க முடியாமல் போய்விடும். இதற்கு மேலும் உலகத்தை -மாற்றம் எப்படிப் போனாலும்- ஒபாமா ஏமாற்ற முடியாது. வரலாறு ஒரு போதும் பின்னோக்கிப் பாய்வதில்லை. நதிகள் போன்று அது முன்னோக்கியே நகர்கின்றது. ■


## எகிப்திய பாராளுமன்றத் தேர்தல் நவம்பர் 28இல்

எகிப்தில் பாராளுமன்றத் தேர்தல் மூன்று கட்டங்களாக நடைபெறுவதற்கான திகதி குறிக்கப்பட்டுள்ளது. முதற் கட்டம் நவம்பர் 28ல் தொடங்கும் என எகிப்தின் மினா செய்திச் சேவை தெரிவித்துள்ளது. ''எகிப்தின் இடைக்கால இராணுவ உயர் சபை முதற் கட்டத் தேர்தலின் ஆரம்ப திகதியை நவம்பர் 28ஆகக் குறித்துள்ளது'' என மினா செய்திச் சேவை மேலும் தெரிவித்துள்ளது.

இரண்டாம் கட்டத் தேர்தல் டிசம்பர் 14இலும் மூன்றாம் கட்டத் தேர்தல் ஜனவரி மூன்றிலும் ஆரம்பிக்கும் என்று இடைக்கால இராணுவ உயர் சபை தெரிவித்துள்ளது. பாராளுமன்றத்தில் முதல் அமர்வு மார்ச் 17இல் அமையும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்றக் கீழ் சபைக்கான தேர்தலே நவம்பர் 28ல் நடைபெறவுள்ளது. ஷூறா சபை அல்லது மேல் சபைக்கான தேர்தல் ஜனவரி 29இல் ஆரம்பமாகவுள்ளது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் எதிர்பார்க்கப்படும் தேர்தல் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இடைக்கால இராணுவ உயர் சபையின் அமைச்சரவை கூடிய போதே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. எகிப்தில் நடைமுறையிலுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை மிகவும் சிக்கலானது என அங்கிருக்கும் ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.



## கருக்கலைவுற்ற பெண் தொழுகையை நிறைவேற்றல்

அஷ்ஷெய்க் அப்துர் ரஹ்மான் பின் நாஸிர் அல்பர்ராக்

**நான்கு மாதம் பூர்த்தியாவதற்கு முன்னர் கருக்கலைந்து விட்டால் தாய் சுத்தமாகி தொழ வேண்டுமா?**

கருக்கலைந்து வெளியேறியவுடன் அக்கரு தெளிவான மனித உருவில் காணப்பட்டால், மகப்பேற்று இரத்தம் நிற்கும் வரையில் அப்பெண் 'நிபாஸ்' உடையவளாகவே கருதப்படுவாள். எனவே, இந்த நிலை முடிவுறும் வரை தொழ வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், கலைந்த கரு தெளிவான மனித உருவைக் கொண்டிருக்காவிட்டால் அப்பெண் நிபாஸ் உடையவளாக கருதப்படமாட்டாள். எனவே, அப்பெண் சுத்தமாகி உடனே தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

## கலைந்த கருவுக்கு தொழுவித்தல்

**கலைந்த கருவை தொழுவித்து அடக்கம் செய்ய வேண்டுமா?**

நான்கு மாதம் பூர்த்தியடையாத கரு தெளிவான மனித உருவைக் கொண்டிருந்தாலும் அல்லது தெளிவான மனித உருவைக் கொண்டிருக்காவிட்டாலும் தொழுவிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஏனெனில், குறிப்பிட்ட கருவுக்கு இன்னும் ''ரூஹ்'' ஊதப்படவில்லை. 120 நாட்கள் பூர்த்தியடைந்த கருவுக்கே ''ரூஹ்'' ஊதப்படும். அந்நேரத்திலிருந்துதான் முழுமைபெற்ற ஆன்மாவைக் கொண்ட சிசுவாக அது கருதப்படும்.

## அகீகாவை நிறைவேற்றலும் குழந்தைக்கு பெயர் சூட்டலும்

-அஷ்ஷெய்க் அப்துர் ரஹ்மான் அப்துல் காலிக்



அகீகாவின் சட்டம் என்ன? அதற்கு அழைக்கப்பட வேண்டியோர் யார்? எப்போது குழந்தைக்குப் பெயர் சூட்ட வேண்டும்? குழந்தை பிறப்பதற்கு முன்னர் பெயரொன்றைத் தெரிவு செய்து வைத்துக் கொள்ள முடியுமா?

குழந்தை பிறந்த ஏழாவது நாளிலேயே அகீகா நிறைவேற்றப்பட வேண்டும். பெண் குழந்தைக்கு ஒரு ஆடும், ஆண் குழந்தைக்கு இரண்டு ஆடுகள் என அகீகா நிறைவேற்றப்படும். அகீகாவுக்கு ஏனையோரை விருந்துக்கு அழைப்பது ஒரு மேலதிக செயற்பாடாகும். அது சிறப்புக்குரியதல்ல.

மாற்றமாக அகீகாவுக்கென அறுக்கப்பட்ட பிராணியை ஏழைகளுக்கும் வறியோருக்கும் பங்கிட்டுவிட்டு ஏனைய பகுதிகளை நீங்கள் சாப்பிடுவதே மிகவும் விரும்பத்தக்கதாகும். அகீகாவையும் வலீமாவையும் சேர்த்துக் கொடுக்க எண்ணம் கொண்டால், அறுக்கப்படும் பிராணியை முற்றாக திருமண வலீமாவாக கருதிக் கொள்ளக்கூடாது:

மாற்றமாக, அதில் ஒரு பகுதியை வலீமாவாக மாற்றிக் கொண்டு ஏனைய பகுதியை ஏழைகளுக்கும் வறியோருக்கும் அகீகா எனக் கருதி பங்கிட்டு விட வேண்டும்.

குழந்தை பிறப்பதற்கு முன்னர், பெயரைத் தெரிவு செய்துகொள்ள முடியும். எனினும், ஏழாவது நாளிலேயே குழந்தைக்குப் பெயர் சூட்டப்பட வேண்டும்.

''அகீகாவுக்கென அறுக்கப்படும் பிராணியின் எலும்பை துண்டு துண்டாக உடைக்கக் கூடாது. அவ்வாறு துண்டு துண்டாக வெட்டுவதில் பிரச்சினையில்லை. எனினும், இவ்வாறு துண்டு துண்டாக வெட்டாமலிருந்தால் ஏழைகளுக்கும் வறியோருக்கும் சிறு துண்டுகளாக அல்லாமல் பெரிய பெரிய துண்டுகளாக பங்கிட முடியும்'' என அறிஞர்கள் கூறுகின்றனர். இதிலிருந்து நன்கொடையாகவும் வழங்க முடியும்.

## அகீகாவுக்குரிய இறுதி நேரம்



-அஷ்ஷெய்க் ஸுலைமான் அல் மாஜித்

ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அவர்கள் பருவ வயதை அடைவதற்கு முன்னர் அகீகா நிறைவேற்றப்பட வேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர். பருவ வயதை அடைந்து விட்டால் அதற்குரிய நேரம் தவறி விடும். இதற்கான ஆதாரம் பின்வருமாறு காணப்படுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''ஒவ்வொரு சிறுவனுடைய அகீகாவும் அடைகுப் பொருளாகும். எனவே, ஏழாவது நாளில் அது நிறைவேற்றப்பட வேண்டும். அதே நாளிலேயே தலை மயிர்கள் சிரைக்கப்பட்டு பெயர் சூட்டப்பட வேண்டும்.'' (நஸாஈ - இதனை அல்பானி ஸஹீஹ் என்று கூறுகிறார்)

எனவே, ஒருவன் பருவ வயதை அடையும் வரை சிறுவன் என்று அழைக்கப்படுவதால் அந்நேரம் வரை அகீகாவை நிறைவேற்ற முடியும்.

## கலங்கிய நீரில் வுழூச் செய்தல்



அப்துல் அஸீஸ் பின் பாஸ்

**சருகுகளும் சேறும் கலந்த நீரில் வுழூச் செய்ய முடியுமா?**

ஆம், இவ்வாறான நீரில் வுழூச் செய்ய முடியும். இது மட்டுமல்லாமல் குளிக்கவும் பருகவும் முடியும். ஏனெனில், அது தண்ணீர் என்ற பெயரை இன்னும் இழக்கவில்லை. எனவே, அது சுத்தப்படுத்தக் கூடியது. சேறும் சருகுகளும் அதன் சுத்தப்படுத்தும் தன்மையைப் பாதிக்காது.

கருத்து - மாற்றுக் கருத்து

# இனிமேலாவது புரிந்துகொள்வோம்!


மூதூர் முஹம்மத் றாபி

கருத்து - மாற்றுக் கருத்து பகுதியில் வெளிவரும் அபிப்பிராயங்கள் மீள்பார்வையின் கருத்துக்கள் அல்ல. இவை கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களே என்பதைக் கவனத்திற் கொள்க.

(i)

அண்மையில் அனுராதபுரம் பழைய நகர்ப் பகுதியில் ஒட்டுப்பள்ளம் என்ற இடத்திலே அமைந்திருந்த முஸ்லிம்களின் சியாரம் என அழைக்கப்படும் ஒரு கல்லறை விஷமிகள் சிலரால் பகிரங்கமாக உடைத்துத் தரைமட்டமாக்கப்பட்டது. இந்தச் செய்தியை நிச்சயம் அறிந்திருப்பீர்கள். இதை யார் செய்தார்கள் எதற்காகச் செய்தார்கள் என்ற வாதப் பிரதி வாதங்கள் பல நடந்து கொண்டிருக்கையில் இது குறித்து நாம் சில கருத்துக்களை முன் வைக்கலாம்.

ஒரு குறிப்பிட்ட இனம் அல்லது குழுவினரைச் சேர்ந்த மக்களால் புனிதமாகக் கருதப்படும் சின்னங்களை மாற்றுக் குழுவினர் அல்லது விஷமிகள் குழுவினர் திட்டமிட்டு அழிப்பது போன்ற பல்லாயிரக்கணக்கான சம்பவங்கள் மனித வரலாற்றிலே இடம் பெற்றுக் கொண்டுதானிருக்கின்றன.



இப்படியான விஷமத்தனங்கள் மூலம் குறிப்பிட்ட மக்களைச் சீண்டி, கோபப்படுத்தி, அதனை ஒரு பெரிய விவகாரமாக ஊதிப்பெருப்பித்து தங்களது குறுகிய நோக்கங்களை கேவலமான வழியில் அடைந்து கொள்வதுதான் இதற்குக் காரணமானவர்களின் நோக்கமாக இருக்க வேண்டும்.

இவ்வேளையில் இந்தியாவின் அயோத்தி நகரில் 2006 டிசம்பர் மாதம் நிகழ்ந்த பாபர் மசூதி இடிப்புச் சம்பவம் ஏனோ நினைவுக்கு வருகின்றது. மசூதி இடிக்கப்பட்ட விடயம் பல்வேறு பிரிவினராலும் வாதப் பிரதிவாதங்களுக்குள்ளாகிக் கொண்டிருந்த வேளையில் நடிகர் கமல்ஹாசன் மட்டுமே, ''அடப்பாவிகளா, உங்களது இனச்சண்டையில் இந்தியாவின் ஒரு வரலாற்றுச் சின்னத்தை அநியாயமாக உடைத்த விட்டீர்களே!'' என்று ஒரு கருத்தை தனது ஆதங்கமாக வெளிப்படுத்தியிருந்தார்.

உண்மையில் மற்ற எல்லாவற்றையும் தாண்டி இதைத்தான் நாம் நிறைய யோசித்தாக வேண்டும். ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்களின் போற்றுதலுக்குரிய விடயம் என்பதற்காக நமது உலகின், தேசத்தின், மனிதவாழ்வின் கலாசார சின்னங்களை அப்படியே மாற்றி மாற்றி அழித்துக் கொண்டிருந்தால் இறுதியில் நமது எதிர்கால சந்ததிக்காக நாம் விட்டு வைக்கப்போகும் வரலாற்றுச் சின்னங்களும் அடையாளங்களும்தான் எவை?

அனுராதபுரத்தில் சியாரம் அழிக்கப்பட்டாலென்ன, அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டாலென்ன, ஆப்கானிஸ்தானின் பாமியன் புத்தர் சிலை தகர்க்கப்பட்டாலென்ன நஷ்டம் என்னவோ நம் எல்லோருக்கும்தான். தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள்!

(ii)

இதிலே இன்னுமொரு விடயமும் உண்டு.

இது சிறிது சர்ச்சைக்குரியதுதான் என்றாலும் குறிப்பிடாமல் விடுவது எழுத்து நாகரிகத்துக்கு உரியதல்ல.

இலங்கையில் உள்ள முஸ்லிம்களிடம் ஒன்றுக்கொன்று முரண்பட்ட சில கொள்கைகள் இருந்து வருகின்றன. சில குழுவினர் தமது நம்பிக்கை காரணமாக சமயப் பெரியவர்கள் அல்லது மகான்கள் எனக்கருதப்படுவோரின் இறந்த உடல் அடக்கம் செய்யப்பட்ட கல்லறைகளை புனிதமான இடங்களாகக் கருதி அதிலே பிரார்த்தனைகள், நேர்ச்சைகள் வைத்து வருகின்றனர்.

அதேவேளை, இன்னும் சிலர், மேற்குறிப்பிட்ட விடயங்களும் இடங்களும் இஸ்லாமிய மதத்தின் கோட்பாடுகளுக்கு முற்றிலும் மாறானது என்றும் அத்தகைய கல்லறை வழிபாடுகள் புரிவது இறைவனுக்கு இணை வைப்பதை ஒத்தது என்றும் கூறி மறுதலித்தும் வருகின்றனர்.

இந்த இரு பிரிவினருக்கு மிடையில் நீண்டகாலமாகத் தொடரும் பனிப்போரையும், அவ்வப்போது ஆங்காங்கே பதற்ற நிலைமை தலைகாட்டுவதையும் யாரும் மறுப்பதற்கில்லை.

இதன் விளைவாக, ஒரு காலத்திலே நமது நாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக இருந்து வந்த சியாரம்கள் நம்மவர்களாலேயே அழித்தொழிக்கப்பட்டிருக்கின்றன. அந்த சியாரம்கள் இஸ்லாமிய மதத்தின் கோட்பாடுகளுக்கு முரணான அடையாளச் சின்னங்கள் என்று முஸ்லிம்களில் பெரும்பான்மையானோரிடம் அபிப்பிராயம் இருக்கிறது. ஆதலால், அவை அழிக்கப்பட்ட வேளைகளில் யாரும் அதை ஒரு பெரிய விடயமாகவே கருதியிருக்கவில்லை என்பதுதான் உண்மை.

ஆனால், இப்போது அனுராதபுரத்திலே சியாரம் அழிக்கப்பட்டதற்கு முஸ்லிம்கள் அனைவரும் -கொள்கை வேறுபாடுகளையெல்லாம் தாண்டி- ஏதோ ஒரு வகையில் கவலை கொண்டுள்ளதை மறுக்கவும் மறைக்கவும் முடியாது.

இந்த சியாரம்களும் அது போன்ற வேறு சின்னங்களும் சர்ச்சைக்குரிய விடயங்களான போதிலும், இதிலுள்ள சரி, பிழைகளுக்கப்பால் நின்று பார்த்தால் இதுவரை காலமும் அவை தங்களையறியாமலே ஒரு வரலாற்றுப் பணியை செய்து வந்திருக்கின்றன என்று கருதலாம்.

அதாவது பண்டைய காலந்தொட்டு இலங்கைத் தீவில் எங்கெல்லாம் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்திருக்கின்றார்களோ அங்கெல்

(பக்.19)

# பகிரங்க விரோதியின் சதிகள்: எச்சரிக்கை!



றிப்கான் ஆதம்

மனிதனின் பகிரங்க விரோதியே ஷைத்தான். ''நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு பகிரங்கமான விரோதியாக இருக்கின்றான், அவனை விரோதியாகவே எடுத்துக் கொள்ளுங்கள்'' என்பது அல்குர்ஆனின் கூற்றாகும்.

மனிதன் படைக்கப்பட்ட ஆரம்பம் தொடக்கமே ஷைத்தானுடைய எதிர்ப்பும் ஆரம்பித்து விடுகின்றது. மனிதன் களிமண்ணால் படைக்கப்பட்டவன். ஜின்கள் நெருப்பால் படைக்கப்பட்டவர்கள். ஜின் இனத்தில் வழிகெட்ட கூட்டத்தினரே ஷைத்தான்கள். இவர்கள் ஆரம்பத்தில் அல்லாஹ்வுக்கு மிக நெருக்கமாக இருந்தவர்கள். மனிதனைப் படைத்த அல்லாஹ் மலக்குமாரையும் ஷைத்தான்களின் தலைவனான இப்லீஸையும் பார்த்து முதல் மனிதரான ஆதமுக்கு சிரம்பணியுமாறு கட்டளையிட்டான். அப்போது மலக்குகள் அனைவரும் சிரம்பணிந்தனர். ஆனால் மதிகெட்ட இப்லீஸ் தனது அகங்காரத்தால் மனிதனுக்கு சிரம்பணிய மறுத்துவிட்டான். இதனால் அவன் இறையருளிலிருந்து தூரமாக்கப்பட்டான். எனினும் அவன் மனிதனை மறுமை வரை வழிகெடுப்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டான். இதிலிருந்தே அவனுடைய எதிர்ப்பும் ஆரம்பித்து விடுகின்றது. "சப்தம் கேட்கக்கூடிய களிமண்ணால் படைக்கப்பட்ட மனிதனுக்கு நான் சிரம்பணிவதற்கில்லை என்று இப்லீஸ் கூறினான். நீ இங்கிருந்து சென்று விடு! நீ விரட்டியடிக்கப்பட்டவன். மறுமைவரை எனது சாபம் உன்மீது தொடர்ந்திருக்கும் என்று இறைவன் கூற, இப்லீஸ் என் இறைவனே! மறுமை வரை (மனிதர்களை வழிகெடுப்பதற்கு) எனக்கு அவகாசம் தா! என்று கேட்டுக் கொண்டான்" (ஹிஜ்ர் : 33 - 37)

"எவர் ஜாஹிலிய்யத்தை அறிந்து கொள்ளவில்லையோ அவர் இஸ் லாத்தில் இருந்தாலும் தனது மார்க்கத்தை துண்டு துண்டாக சிதைத்து விடுவார்" என்ற உமர் (றழி) அவர்களின் கூற்றுக்கேற்ப, ஒரு முஸ்லிம் இறைநெருக்கத்தைப் பெற்றுத்தரும் இபாதத் பற்றிய அறிவைப் பெற்று நடைமுறைப்படுத்துவதோடு ஷைத்தானின் சதிகளையும் அறிந்து, அதிலிருந்து தூரமாகிக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

எனவே, பகிரங்க விரோதியான ஷைத்தானின் சதிகள் சிலவற்றை அறிந்து கொள்வோம். அதிலிருந்து தூரமாக முயற்சி செய்வோம்.

**01. பொய்யான வாக்குறுதி** மனிதனுக்கு பொய்யான வாக்குறுதிகளையளித்து பின்னர் அவர்களை ஷைத்தான் கைவிட்டுவிடுவான். "நான் உங்களுக்கு பொய்யாக வாக்களித்து ஏமாற்றிவிட்டேன். நீங்கள் என்னை கடிந்து கொள்ளாதீர்கள்! நீங்கள் உங்களையே கடிந்து கொள்ளுங்கள்" (இப்றாஹீம் : 22)

**02. மானக்கேடான விடயங்களை அலங்காரமாகக் காட்டல்.** அல்லாஹ் வெறுக்கின்ற விடயங்களை அழகாகக் காண்பித்து அதில் மனிதனை ஷைத்தான் வீழ்த்திவிடுவான் "பூமியில் அவர்களுக்கு மோசமானவற்றை அழகாகக் காண்பித்து அவர்கள் அனைவரையும் வழிகெடுத்து விடுவேன்" (ஹிஜ்ர் : 38)

**03. வறுமையைக் கொண்டு பயம் காட்டி பாவங்களை செய்யத் தூண்டுதல்.** "ஷைத்தான் உமக்கு வறுமையைக் கொண்டு பயங்காட்டி அருவருக்கத்தக்க விடயங்களைச் செய்யுமாறு தூண்டுவான்" (பகறா : 268)

**04. உள்ளத்தில் ஊசாட்டங்களை ஏற்படுத்தல்.** மனிதனை வழிகெடுப்பதற்கு ஷைத்தான் மோசமான விடயங்களில் முயற்சி செய்வான். அது வெற்றியளிக்காதபோது நல்லமல்களில் 'வஸ்வாஸ்' எனும் ஊசாட்டத்தை ஏற்படுத்தி விடுவான். "அவன் மனிதர்களின் உள்ளங்களில் ஊசாட்டத்தை ஏற்படுத்திவிடுவான்" (நாஸ் - 05)

**05. நேரான பாதையில் செல்லும் போது தடையை ஏற்படுத்தல்.** "அவர்களை நேரான வழியில் செல்லாது தடுத்து விடுவேன். அவர்களுக்கு முன்னாலும் பின்னாலும் வலது புறத்தாலும் இடது புறத்தாலும் வந்து வழிகெடுப்பேன்" (அஃராப் - 16,17)

**06. தன்னுடைய கூச்சலாலும் குதிரைப்படை, காலாட்படைகளாலும் வழிகெடுத்தல்.** "உனக்கு சாத்தியமான அளவு கூச்சல் போட்டும், குதிரைப்படைகளையும் காலாட்படைகளையும் அவர்களுக்கு எதிராக ஏவிவிடு" (இஸ்ரா - 64)

**07. சொத்துக்களிலும் பிள்ளைகளிலும் பங்கெடுத்துக் கொள்ளல்.**

இதற்கு உதாரணமாக, அல்லாஹ்வின் பெயர்கூறி சாப்பிடாவிட்டால் அதில் ஷைத்தான் பங்கெடுக்கின்றான். "அவர்களுடைய பொருளிலும் சந்ததியிலும் நீ கூட்டாக இருந்து பங்கெடுத்துக்கொள்" (இஸ்ரா - 64)

இவ்வாறான பல முறைகளில் ஷைத்தான் தனது சதித்திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றான்.

எனவே, எந்தவொரு செயலை ஆரம்பிக்கும்போதும் ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுவோம். எச்சரிக்கையாக இருப்போம்.

# நிலையான சொத்துகளுக்கான ஸகாத்

**நிலையான சொத்துகளும் அவை மனிதனுக்கு சொந்தமானவை என்பதற்கான காரணிகளும்.**

நிலங்கள் மற்றும் அவற்றின் மீது கட்டப்படும் கட்டிடங்கள் என்பன நிலையான சொத்துக்களாகும். வீடுகள், மாளிகைகள், கட்டிடத் தொகுதிகள், தொடர்மாடிக் குடியிருப்புக்கள், கடைகள், எரிவாயு நிலையங்கள், உல்லாச விடுதிகள் போன்றவை இதற்கான உதாரணங்களாகும். இவற்றைத் தரிசாகவோ அல்லது கொள்வனவு செய்தோ அல்லது அனந்தரமாகவோ அல்லது கொடையாகவோ ஒரு மனிதன் சொந்தமாக்கிக் கொள்ள முடியும்.




மேற்கூறப்பட்ட எவ்வகையில் சொந்தமாக்கினாலும் அவற்றுக்கு ஸகாத் கடமையாகின்றது. ஏனெனில் ஒரு பொருள் ஒருவருக்கு சொந்தமானதாக மாறினால் அதற்கு ஸகாத் கடமையாகும்.

பொருளின் சொந்தக்காரன் பருவ வயதை அடைந்தவனாக, சுய சிந்தனை உள்ளவனாக இருந்தாலும், அல்லது இவ்விரண்டு பண்புகளை கொண்டவனாக இல்லாவிட்டாலும், இவ்வாறே பெற்றோர் உள்ளவனுக்கும் பெற்றோர் இல்லாதவனுக்கும் ஸகாத் கடமையாகும்.

பொருளை முழுமையாகச் சொந்தமாக்கியவனாகவோ அல்லது பொருளின் ஒரு பகுதியைச் சொந்தமாக்கியவனாகவோ இருந்தாலும் ஸகாத் கடமையாகிவிடும். குறிப்பிட்ட எந்தவகையாலோ அல்லது பங்குடைமையாலோ பொருளின் ஒரு பகுதியைச் சொந்தமாக்கிக் கொண்டாலும் கூட அவன் ஸகாத் வழங்கும் கடமையில் இருக்கிறான்.

தன்னுடைய சொந்தப் பொருளில் இருந்து ஸகாத் கொடுப்பதா? அல்லது அதனுடைய இலாபத்தில் இருந்து கொடுப்பதா? என்பதில் தான் உடமையாளனின் எண்ணம் வித்தியாசப்பட்டு அதன்மூலம் கருத்து வேறுபாடு தோன்றுகின்றது. ''செயல்கள் அனைத்தும் எண்ணங்களின் மூலமே'' என்ற நபிமொழியை வைத்து தோன்றியதே இந்த கருத்து வேறுபாடாகும். இதனை ஐந்து பிரிவுகளாக நோக்கலாம்.

**ஸகாத் கடமையாகும் சொத்துக்கள்**

வியாபார நோக்கத்தைக் கொண்ட நிலையான சொத்துக்கள். ஸகாத் கடமையாகக் கூடிய வியாபார பொருட்கள் என்ற பிரிவில் இவை உள்ளடங்கும். ''அவர்களின் செல்வங்களிலிருந்து ஸகாத்தை அறவிடுங்கள். அது அவர்களையும் அவர்களின் சொத்துக்களையும் தூய்மையாக்கி விடும்'' (தவ்பா -103) ''அவர்களின் சொத்துக்களில் கேட்டுவரு வோருக்கும் கேட்டு வராதோருக்கும் பங்கு உள்ளது'' (அத்-தாரியாத்-19) ஆகிய வசனங்கள் இதற்கு ஆதாரங்களாகும்.

''வியாபாரத்திற்கென நாங்கள் கணக்கிட்டு வைத்திருந்த பொருட்களில் ஸகாத் கடமையை நிறைவேற்றிவிடுமாறு நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்'' என ஸம்ரா இப்னு ஜுன்துப் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், (அபூ தாவூத்)

இவ்வாறான பொருட்களில் ஸகாத் கடமையாகும் என்பது அறிஞர்களின் ஏகோபித்த (இஜ்மாவான) கருத்தாகும்.

**நிலையான சொத்துக்கான ஸகாத்தின் அளவு**

ஸகாத் கடமையாகும் நேரத்தில் இவ்வகை சொத்துக்களுக்கு 2.5 வீதம் ஸகாத் நிறைவேற்றப்பட வேண்டும். உதாரணமாக 100 ரூபாய்க்கு 2 ரூபா 50 சதம். 1000 ரூபாய்க்கு 25 ரூபா.

**ஸகாத் கொடுக்கும் முறை**

பொருளைச் சொந்தமாக்கிய அல்லது விற்பனைக்கென முடிவு செய்த நாளில் இருந்து ஒரு வருடம் பூர்த்தியானவுடன், வியாபாரப் பொருட்களுக்கு கடமையாக்கப்பட்ட ஸகாத்தின் அளவே இவ்வகை சொத்துக்களுக்கும் கடமையாகும். ஒரு வருடம் பூர்த்தியடைந்தவுடன் நடைமுறையில் அல்லது சந்தைக் கேள்வியில் பொருளுக்கு இருக்கும் பெறுமதியைக் கணிப்பிட வேண்டும். அப்பெறுமதி அவர் கொள்வனவு செய்த பெறுமதியை விட கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருந்தாலும் அதில் ஸகாத்தின் அளவைக் கணிப்பீடு செய்து நிறைவேற்றி விட வேண்டும்.

குறிப்பிட்ட பொருள் ஸகாத் கடமையாகும் தொகையை அடைந்திருந்தால் அல்லது அப்பொருளை அவருடைய ஏனைய சொத்துக்களான தங்கம், வெள்ளி, வியாபாரப் பொருட்கள் போன்ற பொருட்களுடன் சேர்க்கும்போது, அவை ஸகாத்தின் அளவை அடைந்திருந்தால் அதன் பெறுமதியில் 2.5 வீதத்தை ஸகாத்தாக நிறைவேற்ற வேண்டும். இதனை ஸகாத்தைப் பெற முடியுமான எட்டு கூட்டத்தாரில் ஒருவருக்கு கொடுத்துவிட வேண்டும். "வறியவர்களுக்கும் ஏழைகளுக்கும் ஸகாத்தை வசூலிப்பவர்களுக்கும் இஸ்லாத்தை புதிதாக ஏற்றுக் கொண்டவர்களுக்கும் அடிமைகளை விடுதலை செய்வதற்கும் கடனில் மூழ்கியோருக்கும் அல்லாஹ்வின் பாதையில் போர் செய்வதற்கும் வழிப்போக்கர்களுக்கும் ஸகாத்தை பெற முடியும்'' (தவ்பா - 60)

இக்கடமையை ஒருவர் நிறைவேற்றாவிட்டால் அது அவருக்கு கடனாக மாறிவிடும். அவர் அதனை நிறைவேற்றும்வரை அவருடைய பொறுப்பில் இருக்கும். எனவே, ஒரு முஸ்லிம் தன் மீது கடமையான ஸகாத்தை மறந்து விடாமல் தன்னிடமுள்ள புத்தகம் ஒன்றில் எழுதிவைத்துக் கொள்ள வேண்டும். "ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் வீட்டில் இரண்டு இரவுகள் தங்கி, வஸிய்யத் செய்துவிட்டுச் சென்றால் அவர் அதனை எழுதிவைத்துக் கொண்டு பின்னர் அந்த வஸிய்யத்தை நிறைவேற்ற வேண்டும்" (புகாரி, முஸ்லிம்) என்ற ஹதீஸின் பொதுக் கருத்திற்கேற்ப ஒருவர் மரணிக்க முன்னர் தனது கடமையை நிறைவேற்றாவிட்டாலும் அதனை எழுதிவைப்பதன் மூலம் அவருடைய சந்ததியினர் அக்கடமையை நிறைவேற்ற முடியும்.

எனவே, நிலையான சொத்துக்களில் ஸகாத்தை நிறைவேற்றுவது கடமையாகும். இதனை ஒருவர் நிறைவேற்றும் வரை அது அவருடைய பொறுப்பை விட்டும் நீங்காது.

மூலம் : ஸகாத்துல் இகார்
தமிழில் : எம்.ஏ.அஸ்ஹர்
கெய்ரோ பல்கலைக்கழகம்.

தொடரும்...

# உமரியம்

## உமர் (றழி) குறித்த வாசிப்பு - ii

எம்.எச்.எம். நாளிர்



முஸ்லிமாக இருந்தாலும் சரி, முஸ்லிம் அல்லாதவராக இருந்தாலும் சரி எவரேனும் நபி (ஸல்) அவர்களின் கட்டளையை மீறத் துணிந்துவிட்டால் அவர்களின் கண்ணியத்திற்கு மாசு கற்பித்தால் உமர் (றழி) அவர்கள் சகித்துக் கொள்ள மாட்டார்கள்.

'அல்லாஹ் இஸ்லாத்தின் மூலம் எங்களை கண்ணியப்படுத்தியுள்ளான். அதுதவிர வேறெந்த கண்ணியமும் எமக்குத் தேவையில்லை' என்பது உமர் (றழி) அவர்களின் உறுதியான நம்பிக்கையாகவும் நடைமுறையாகவும் இருந்தது.

முஸ்லிமாக இருந்தாலும் சரி, முஸ்லிம் அல்லாதவராக இருந்தாலும் சரி எவரேனும் நபி (ஸல்) அவர்களின் கட்டளையை மீறத் துணிந்துவிட்டால், அவர்களின் கண்ணியத்திற்கு மாசு கற்பித்தால் உமர் (றழி) அவர்கள் சகித்துக் கொள்ள மாட்டார்கள். தனது வாளை ஓங்கியவராக ''அல்லாஹ்வின் தூதரே உத்தரவு தாருங்கள்'' என்று கேட்டு நிற்பார்கள். இது ஒரு வித்தியாசமான அணுகுமுறையல்லவா? ஆனால் இதில் பல படிப்பினைகள் உள்ளன.

''எவர் கலிமா தையிபாவை மொழிகிறாரோ அவர் சுவனம் நுழைவார்'' என்ற சந்தோஷமான செய்தி நபி (ஸல்) அவர்களின் வாயிலிருந்து உதிர்கின்றது. அபூஹுரைரா (றழி) அவர்கள், உவகை பொங்க இந்தச் செய்தியை சொல்லித் திரிகிறார்கள். இது உமர் (றழி) அவர்களின் காதுகளிலும் எட்டுகின்றது. இதனைப் பகிரங்கப்படுத்த வேண்டாம் என அபூஹுரைரா (றழி) அவர்களைக் கட்டுப்படுத்திவிட்டு நபி (ஸல்) அவர்களிடம் விரைந்து செல்கிறார்கள். ''அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் இவ்வாறு கூறினீர்களா?'' என வினவுகிறார்கள். அவர்கள் 'ஆம்' எனப் பதிலளித்தபோது, ''இவ்வாறு பகிரங்கமாகச் சொல்லிவிட்டால் மக்கள் தவறாக விளங்கிக்கொள்வார்கள்; செயற்படாமல் இருக்க ஆரம்பித்து விடுவார்கள்'' என்று தனது கருத்தை வெளிப்படுத்தினார்கள். இது வித்தியாசமான சிந்தனையல்லவா?

பத்ருப் போர் முடிவடைகிறது. எழுபது கைதிகளோடு முஸ்லிம்கள் மதீனாவுக்கு மீள்கிறார்கள். கைதிகளை எவ்வாறு நடத்துவது என்பது பற்றிய எந்த விதிமுறைகளும் அப்போது கொடுக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, நபி (ஸல்) அவர்கள், ஸஹாபாக்களைக் கூட்டி ஆலோசனை செய்கிறார்கள். ''அவர்கள் எமது உறவினர்கள். ஆகவே, இழப்பீடுகளைப் பெற்றுக் கொண்டு விடுதலை செய்யலாம். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவதற்கு இடமுண்டு'' என அபூபக்கர் (றழி) அவர்கள் ஆலேசர்னை கூறினார்கள். உமர் (றழி) அவர்களிடம் கேட்டபோது, ''இவர்கள் யாவரும் காபிர்களின் தலைவர்கள். கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவரையும் அவரவர்களுடைய நெருங்கிய உறவினர்கள் கொலை செய்ய வேண்டும். அதன் மூலம் முஷ்ரிகீன்கள் மீது எமக்கு எந்தப் பற்றும் இல்லை என்பதை அல்லாஹ் தெரிந்து கொள்வான்'' என்றார்கள். எனினும் அபூபக்கர் (றழி) அவர்களின் ஆலோசனைப்படியே கைதிகள் நடத்தப்பட்டார்கள்.

அடுத்தநாள் உமர் (றழி) அவர்கள், நபி (ஸல்) அவர்களை சந்திக்கச் சென்றார்கள். நபி (ஸல்) அவர்களும் அபூபக்கர் (றழி) அவர்களும் அழுது கொண்டிருப்பதை அவதானிக்கிறார்கள். இதைக் கண்ட உமர் (றழி) அவர்கள், ''நானும் உங்களுடன் சேர்ந்து அழ விரும்புகிறேன். உங்கள் அழுகைக்கான காரணத்தை எனக்கும் தெரிவியுங்கள்'' எனக் கேட்டுக் கொண்டார்கள். ''ஈட்டுத் தொகை வாங்கியதன் காரணமாக உமது தோழர்களுக்கு ஏற்பட்டதை எண்ணி அழுகிறோம்'' என அவர்களுக்கு பதில் கிடைத்தது. அவ்வேளை அருளப்பட்ட அல்குர்ஆன் வசனமும் ஓதிக் காட்டப்பட்டது.

''அல்லாஹ்விடம் (உங்களுக்கு மன்னிப்பு) ஏற்கனவே உறுதி செய்யப்படாமல் இருப்பின் நீங்கள் (பத்ருப் போரில் கைதிகளிடமிருந்து பிணைத் தொகையை) வாங்கியதில் மகத்தானதொரு வேதனை உங்களைப் பீடித்திருக்கும்''. (8 : 68)

உமர் (றழி) அவர்களின் வித்தியாசமான சிந்தனை எத்துணை பொருத்தமானது என்பதை அல்லாஹ்கூட எடுத்துக் காட்டுகிறான் போலும்.

ஹுதைபியா உடன்படிக்கை நிகழ்கிறது. அதன் ஷர்த்துகள் ஸஹாபாக்களின் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனினும், நபி (ஸல்) அவர்களிடம் நேரடியாகச் சென்று விசாரிப்பதற்கு உள்ளம் இடம் கொடுக்கவில்லை. ஆனால் உமர் (றழி) அவர்களோ நேரில் சென்று விசாரிக்கிறார்கள்.

''அல்லாஹ்வின் தூதரே, நாம் சத்தியத்திலும், அவர்கள் அசத்தியத்திலும் இருப்பது உண்மை தானே. எம்மில் கொல்லப்பட்டவர் சுவர்க்கத்திலும் அவர்களில் கொல்லப்பட்டவர் நரகத்திலும் இருப்பர் என்பதும் உறுதியானதுதானே. இப்படியிருக்க நாம் ஏன் அவர்களுக்கு விட்டுக் கொடுத்துப் பணிய வேண்டும். நாம் உம்ரா செய்யாமல் திரும்பிச் செல்வது எவ்வாறு நியாயமாகும்?'' அமைதியாகப் பதிலளித்துக் கொண்டிருந்த நபி (ஸல்) அவர்கள் இறுதியாக, ''நான் அல்லாஹ்வின் தூதர், என்னால் அவனுக்கு மாறாக நடக்க முடியாது. அவன் என்னைக் கைவிடமாட்டான்'' என்று உறுதியாகக் கூறினார்கள். சற்று நேரத்தில், ''நிச்சயமாக நாம் உங்களுக்கு தெளிவான வெற்றியைத் தந்தோம்''. (48:01) என்ற வசனம் இறங்கியது. அதனை உமர் (றழி) அவர்களுக்கு ஓதிக் காண்பித்தார்கள்.

# வாழ்வை ரசித்தல்



வாழ்வின் பெறுமானம் அது கொண்டுள்ள இன்பம் நிறைந்த நிகழ்வுகளால் மட்டிடப்படுகின்றது. வண்ணமயமான எண்ணங்களால் வாழ்வு மெருகூட்டப்படுவதால்தான் 'செயல்கள் அனைத்துமே எண்ணங்களைப் பிரதிபலிக்கும்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். சுபிட்சமான மனித வாழ்வுக்காகத்தான் படைப்பாளன் பிரபஞ்சத்தை அழகாகவும் அற்புதமாகவும் படைத்துள்ளான். செருப்பின் பட்டியை சீர் செய்வதிலும் அழகு தொனிப்பதால் அழகை ரசிப்பது அன்றாட நிகழ்வாய் மாறுகிறது. ''புவிப் பந்திலுள்ள அனைத்தையும் உங்களுக்காகப் படைத்தவன் அவன்தான்''. (அல்குர்ஆன்) வாழ்வு ரசனை கொண்டதாய் அமைதல் மோட்சம் காண வழி செய்யும்.

உண்மையில் வாழ்வில் தோல்வி காண்பவர்கள் ரசனை உணர்வற்ற படைப்புகள்தான். எதையுமே தமக்கு சார்பானதாய் அமைப்பவர்கள் சுமைகளிலும் சுகம் காண்பார்கள். வாழ்வின் அர்த்தம் இப்படியானவர்களால் புரியப்படுவதால் மரணித்தும் வாழ்பவர்களாக மாறி விடுகின்றனர். அழகான ஆடைகள், சுவையான உணவுகள், அப்பழுக்கற்ற தூய எண்ணங்கள் அனைத்துமே வாழ்வை அலங்கரிப்பவைதான், உள்ளத்தில் பரவசத்தை ஏற்படுத்தக் கூடியவைதான். ''பூமியில் உள்ளவற்றிலிருந்து அனுமதித் தவற்றையும் மிகச் சிறந்ததையும் உண்டு மகிழுங்கள்''. (அல்குர்ஆன்) வாழத் தெரியாதவர்கள் வெளிச்சத்தில் மரணிக்கிறார்கள். வாழ்வைப் புரிந்தவர்கள் குருட்டு வெளிச்சத்திலும் சாதனை படைக்கிறார்கள்.

எதுவுமே எமது பார்வையின் வலிமைக்கேற்பவே விளைவைத் தரும். அழகு அசிங்கமாய் மாறுவதும், அசிங்கம் பேரழகாய் தென்படுவதும் இதனால் தான். ''உலகில் எனக்கு விருப்பமான மூன்று விடயங்கள், வாசனை, பெண்கள், கண்குளிர்ச்சியை உண்டாக்கும் தொழுகை என்பனவாகும்''. (ஹதீஸ்)

வாழ்வை ரசிக்கக் கற்றுக் கொண்டால் வாழ்தலில் பற்றுக் கொள்ளலாம். வாழ்க்கைப் பாங்கு ஒரே மாதிரி அமைந்தால் அங்கும் சுவாரஷ்யம் இருக்காது. இதனால்தான் நபி (ஸல்) அவர்களை அவதானித்து தவறான முடிவுகளை எடுக்க முனைந்த நபர்களைப் பார்த்து, ''...எனினும், நான் நோன்பிருக்கிறேன். அதனை தவிர்ந்தும் இருப்பேன். இராத் தொழுகைக்காய் எழுந்திருப்பேன். ஓய்வுக்காய் தளர்ந்தும் இருப்பேன். பெண்களையும் மணம் முடிக்கிறேன்'' என்று வாழ்வின் சுவைமிகுந்த வித்தியாசமான அம்சங்களில் ஈடுபடுமாறு தூண்டினார்கள்.

மகிழ்வும் துயரும் வாழ்வின் வழிகாட்டிகள். இருக்கும்போது இன்பங்களைத் தருவிப்பதோடு இல்லாமையில் துன்பங்களையும் தவிர்க்கலாம். முகக்கண் கலங்கினாலும் அகக்கண் கலங்காமல் வாழ்வை அமைத்துக் கொண்டால் வாழ்தல் நிச்சயம் சுகமாய் மாறும். அரைநொடி இன்பங்களுக்காக வாழ்வின் குறிக்கோளை மறப்பவனால் எதுவுமே செய்ய முடியாது.

எனவே, வாழ்வைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின், அறிவோடு அனுபவமும் உணர்வுகளும் அவசியம். ஆகுமாக்கித் தரப்பட்டவற்றை அளவோடும் அழகாயும் அனுபவிக்கும்போது அங்கும் நன்மைகள் பதியப்படும். வீண்விரயம், ஆடம்பரம், பெருமை தவிர்க்கப்படும். ''விரும்பியதை உண். விரும்பியதை அணி. பெருமையையும் ஆடம்பரத்தையும் தவிர்ந்து கொள்''. (ஹதீஸ்) உலகை அனுபவிக்கையில் எல்லைக் கோட்டை தாண்டாமலும் மறுமை வாழ்வின் நிதர்சனங்களை மறக்காமலும் வாழ்ந்தால் எங்குமே வெற்றிதான்.

உலகப் பண்டங்களுக்காய் நாயாய் அலைபவனுக்கு பள்ளத்தாக்கு நிறைய தங்கக் குவியல்கள் கிடைப்பினும் இன்னொன்றுக்காய் ஏக்கப் பெரு மூச்சுவிட்டு தவியாய்த் தவிப்பான். அவனது வாயினுள் இடப்படும் மண்பிடியால்தான் அவனின் ஆசைகளை நிரப்பலாம்.

பண்டங்களை சேமிப்பதில் இன்பம் இல்லை. வாழ்வின் உண்மை நிலையை புரியவும், புரிய வைக்கவும் அதிகம் கஷ்டங்களை தாங்க வேண்டியுள்ளது. ஆயுள் நீடிப்பு என்பது வருடங்கள் அதிகரிப்பதல்ல. ''சிறந்தவர் யாரெனில், எவனது ஆயுள் நீடித்து அதற்கேற்ப செயற்பாடுகள் சிறப்பாய் அமையப்பெறுமோ அவர்தான் சிறப்பானவர்''. (ஹதீஸ்)

நிகழ்வுகளின் பரிமாற்றம் தான் வாழ்வு. எதுவும் நிரந்தரமில்லை. ''மக்களுக்கிடையே அப்படிப்பட்ட நாட்களை மாறி மாறிக் கொடுப்போம்''. (அல்குர்ஆன்) பிரபஞ்ச விதியை யாராலும் மீற முடியாது. ரசித்தலின் அழகை உணர்ந்து கொண்டால் வாழ்வையும் ரசிக்கலாம். மரணத்திற்கு முன் வாழ்வைப் பயன்படுத்தச் சொன்னது இந்த அர்த்தத்தில்தான். மீளப் பெற முடியாத அரும்பெரும் பொக்கிஷம்தான் இந்த வாழ்வு. வாழ்வை ரசிக்கவும் ருசிக்கவும் கற்றுக்கொள்வோம். வாழ்வியல் தத்துவங்களால் மீண்டும் வாழ்வைப் புனரமைப்போம். சுவாரஷ்யமான வாழ்வுக்காய் தயாராவோம்.

**பிஸ்தாமி, மள்வானை.**

# திருமணத்திற்குத் தயாராகும் தோழிக்கு ஒரு மடல்

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்...

அன்பின் தோழியே, உனது திருமண அழைப்பிதழ் கண்டேன். அளவிலா மகிழ்ச்சியடைந்தேன். அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ் உனக்கு நல்ல உறுதியான ஈமானையும் இறையச்சத்தையும் தர வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

அன்பின் தோழியே, இஸ்லாமியப் பார்வையில் திருமணம் என்பது ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படுகின்ற அருள் நிறைந்த ஓர் உடன்படிக்கையாகும். இந்த உடன்படிக்கையின் மூலமாகவே இருவரில் ஒருவர் மற்றவருக்கு ஆகுமாகிறார். இதன் வழியாகத்தான் ஒரு நீண்ட பயணத்திற்கு இருவரும் தயாராகின்றனர். இந்தப் பயணத்தின் இடையே இருவரும் தங்களுக்குள் நேசம் கொண்டவர்களாகவும் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வு, ஒத்தாசை கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

ஆணின் வாழ்க்கையில் பெண்தான் இன்பத்தை வழங்க முடியும். உண்மையில் பெண்ணால் மட்டுமே ஓர் ஆணுக்கு மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை வழங்க முடியும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ''உலகம் அனைத்துமே செல்வமாகும். அந்த செல்வத்திலேயே மிகச் சிறந்த செல்வம் நல்லொழுக்கம் உள்ள ஒரு பெண்ணாவாள்.'' (ஸஹீஹ் முஸ்லிம்)

இறையச்சம் உள்ள நல்ல பெண்ணே ஒரு முஸ்லிம் குடும்பத்தின் உறுதியான தூணாக விளங்குகின்றாள். அந்தவகையில், ஓர் ஆணுக்கு வாழ்க்கையில் ஏற்படுகின்ற கஷ்டங்களையும், சிரமங்களையும் ஒரு பெண்ணின் மூலமாக நிவர்த்தி செய்யக் கூடிய ஒரு வழிமுறையாக திருமணத்தை அல்லாஹுதஆலா ஆக்கியுள்ளான்.



தோழியே, ஒரு பிரசித்தி பெற்ற அறபுத் தலைவரின் மனைவியான உமாமா பின்த் ஹாரிஸ் தன் மகள் உம்மு இயாஸ் அலங்கரிக்கப்பட்டு கணவரின் வீட்டுக்கு வழி அனுப்பப்பட்ட போது கூறிய அறிவுரைகள் உனக்கும் பிரயோசனமளிக்கும் என்ற நம்பிக்கையில் தொகுத்து வழங்குகின்றேன்.

என் அருமை மகளே! ஒழுக்கத்தில் சிறந்தவருக்கும், உயர்ந்த பரம்பரையைச் சேர்ந்தவருக்கும் அறிவுரை தேவையில்லை என்றால் உனக்கும் அது தேவையில்லைதான். இருப்பினும் அறிவுரை என்பது மறதியுள்ளவர்களுக்கு ஒரு நினைவூட்டல். அறிவுள்ளவர்களுக்கு ஓர் உதவி.

என் அருமை மகளே! தந்தையின் செல்வம், அன்பு, நெருக்கம் ஒரு பெண்ணுக்குப் போதுமானது என்றால் அவை உனக்கும் போதுமானதுதான். இருப்பினும் பெண் ஆணுக்காக படைக்கப்பட்டவள். ஆண் பெண்ணுக்காக படைக்கப்பட்டவன்.

என் அருமை மகளே! எந்தச் சூழலில் நீ இதுவரை வளர்ந்து வந்தாயோ அந்தச் சூழலிலிருந்து இனிப் பிரியப் போகிறாய். எந்தக் கூட்டிற்குள் நீ வளர்ந்து வந்தாயோ அந்தக் கூட்டைவிட்டு வெளியேறி இதுவரை அறியாத ஒரு கூட்டிற்குச் செல்லப் போகிறாய்.

என் அருமை மகளே! நீ பழகாத ஒரு நண்பனிடம் செல்லப் போகிறாய். அந்த நண்பன் உன்மீது உரிமை பெற்றுள்ளதால் அவன் உனக்கு அரசனாகின்றான். நீ அவனுக்கு அடிமையாக இருந்தால் அவனும் உனக்கு அடிமையாக மாறிவிடுவான்.

என் அருமைத் தோழியே! எனது வாழ்க்கை அனுபவத்திலிருந்தும் உனக்கு சில விடயங்களைக் கூறுகிறேன்.

1. உன் கணவரிடம் போதும் என்ற தன்மையுடன் நடந்துகொள். அந்தப் பண்பின் மூலம் தான் மனதிற்கு அமைதி கிடைக்கிறது.
2. கணவரின் சொல்லை செவிதாழ்த்திக் கேள். கட்டுப்பட்டு நடந்து கொள். அதில்தான் அல்லாஹ்வின் திருப்தி இருக்கிறது.
3. உன் கணவரின் விருப்பம் எது என்பதைத் தெரிந்து கொள். அதன்படியே நடந்து கொள்.
4. எப்போதும் சுத்தமாகவும் நறுமணத்தோடும் இருந்து கொள்.
5. அவர் தூங்கும்போது அமைதியாக இரு. தூக்கத்தைக் கெடுப்பது எரிச்சலூட்டக் கூடிய விடயமாகும்.
6. கணவரின் உறவினர் மற்றும் குடும்பத்தினரோடு சிறந்த முறையில் நடந்து கொள். அதன் மூலம்தான் குடும்பத்தை அழகிய முறையில் நிர்வகிக்க முடியும்.
7. கணவரின் செல்வத்தைப் பாதுகாத்துக் கொள். அதன் மூலம்தான் குடும்பத்தை அழகிய முறையில் வழிநடத்த முடியும்.
8. கணவரின் இரகசியங்களைப் பாதுகாத்துக் கொள்.
9. கணவர் துயரத்திலிருக்கும்போது நீ மகிழ்ச்சியாக இருப்பதை தவிர்த்துக் கொள். இது ஒழுக்கமின்மையாகும். கணவர் மகிழ்ச்சியாக இருக்கும்போது நீ கவலையில் இருப்பதையும் தவிர்த்துக் கொள்.
10. கணவரை எந்தளவுக்கு கண்ணியப்படுத்தி, மதித்து வாழ முடியுமோ அந்தளவிற்கு நடந்துகொள். அவரும் அதேபோன்று உன்னை மதித்து நடப்பார்.

மனித வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு கட்டம் தான் திருமண வாழ்வாகும். நபி (ஸல்) அவர்கள்; சுவர்க்கத்தில் உங்களுடன் இருக்கும் மனைவியரைப் பற்றி அறிவிக்கட்டுமா? என்று ஸஹாபாக்களிடம் கேட்டார்கள். அதற்கவர்கள், 'ஆம்' யா றஸூலல்லாஹ் அறிவியுங்கள் என்று கூறினார்கள். அதிகமாக குழந்தைகளைப் பெற்றெடுக்கக் கூடியவள். அதிகமாக நேசிக்கக் கூடியவள். அவளுக்குக் கோபம் ஏற்பட்டாலோ, தீங்கு விளைவிக்கப்பட்டாலோ அவளின் கணவர் கோபித்துக் கொண்டாலோ, அவள் கணவரை நெருங்கிச் சென்று இதோ என் கைகளை உங்கள் கைகளுடன் சேர்த்துக் கொண்டேன். உங்களை விட்டுப் பிரியமாட்டேன். நீங்கள் என்னைக் கொண்டு திருப்தியடையும் வரை நான் தூங்க மாட்டேன் என்று கூறும் பெண்ணாகும். (தபரானி)

எனவே, அன்பின் தோழியே, உனது திருமண வாழ்க்கை சிறந்ததாக அமைய மீண்டும் ஒரு முறை வாழ்த்தி, பிரார்த்தித்து விடை பெறுகிறேன்.

உம்மு ஹுபைப்- கெலிஓயா

# உளவளத்துணை ஆலோசனை

## வித்தியாசமான திறன்களைக் கொண்ட எனது குழந்தையை எப்படி வளர்க்கலாம்?



**எனது மகளுக்கு நான்கு வயதாகின்றது. அவளது அறிவையும் புத்திக்கூர்மையையும் அவதானிக்கின்றபோது அல்லாஹ் எனக்களித்த அன்பளிப்பாகவே அவளை நான் காண்கின்றேன். அவளிடம் எதையும் வேகமாக கிரகித்துக் கொள்ளும் ஆற்றலும், சிறந்த ஞாபக சக்தியும் இருக்கின்றது. இத்தகைய ஒரு குழந்தையை எவ்வாறு மிகச் சிறந்த முறையில் வளர்க்கலாம் என்பதே எனது கேள்வியாகும்.**

நீங்கள் இந்தக் கேள்வியை என்னிடம் கேட்டமைக்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ் உங்களுக்கு விஷேட திறன்களைக் கொண்ட ஒரு குழந்தையை வழங்கியிருக்கின்றான். உண்மையில் அவள் புத்திக் கூர்மைமிக்க ஒருவராக இருக்கலாம். ஆனால், அவள் ஒரு சிறுமி என்பதை மறந்துவிட வேண்டாம். இது பெற்றோர்களைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான விடயமாகும்.

குழந்தைகளை அவர்களுடைய சாதாரண நிலைகளுக்கேற்பவே வளரவிட வேண்டும். மாற்றமாக வயதிற்கு மீறிய வகையில் அவர்களை வளர்ப்பதற்கு முயற்சிக்கக் கூடாது. ஏனெனில், அவ்வாறு வளர்க்கப்படும் குழந்தைகள் சமூக ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இவ்வகையான பிள்ளைகள் மனஅழுத்தம், தனிமை, நண்பர்களைச் சேர்த்துக் கொள்ள முடியாமை போன்ற பல விடயங்களால் பாதிக்கப்பட்டிருப்பதை நான் கண்டிருக்கிறேன்.

எனவே, எனது கருத்து அந்தக் குழந்தையை சிறந்த முறையில் வளர்ப்பதற்காக மேலதிகமாக எந்தவொரு விடயத்தையும் மேற்கொள்ள வேண்டியதில்லை. அவளை சாதாரணமாக வளர விடுங்கள். அவளுக்கு அவளது வயதை ஒத்த நண்பர்களோடு சேர்ந்து பழகுவதற்கு சந்தர்ப்பம் அளியுங்கள்.

இதன் கருத்து அந்தப் பிள்ளைக்கு மேலதிகமாக விஷேட சந்தர்ப்பங்கள் எதையும் ஏற்படுத்திக் கொடுக்கக் கூடாது என்பதல்ல. ஆனால், அதனை அவளுக்கு சுமையாக்கிவிடக் கூடாது.

இந்த பதில் உங்களுக்கு பிரயோசனம் அளிக்கும் என்று நம்புகின்றேன்.

கலாநிதி முஹம்மத் ஸாதிக்

# முன்னேற்றத்தின் ஏணி தொடர்பாடல்

மனிதன் ஒரு சமூகப்பிராணி. ஒரு குழந்தை பிறக்கும்போது சமூகப் பண்புகளுடன் பிறப்பதில்லை. மற்றவர்களோடு தொடர்ந்து தொடர்பு கொள்வதன் மூலமே நற்பண்புகளைப் பெற்றுக்கொள்கின்றது. குழந்தையின் படிப்படியான வளர்ச்சியில் நற்பண்புகள் வளர்க்கப்பட வேண்டுமாயின் சுமுகமான தொடர்பாடல் அவசியமாகும்.

சமூகத் தொடர்பாடலில் முதிர்ச்சி ஏற்படும்போது தனிநலன்களில் மாற்றம், புதிய நண்பர்களைத் தேடுதல், புதிய சூழ்நிலைகளில் மற்றவர் குணங்களைப் புரிந்து கொள்ளுதல், சவால்களை எதிர்கொள்ளுதல் ஆகிய திறன்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. தொடர்புகள் பல வகையில் ஏற்படுத்தப்படலாம்.

1. பெற்றோர் - பிள்ளைகள் தொடர்பு
2. ஆசிரியர் - மாணவர் தொடர்பு
3. சகபாடிகள் தொடர்பு
4. பெரியவர்கள் தொடர்பு
5. கற்றவர்கள் தொடர்பு.

இவர்களுடனான தொடர்புகள் சமூக விருத்திக்கும் தனியாள் ஆளுமை விருத்திக்கும் அவசியமானதாகும்..

பிள்ளைகள் முதலில் பெற்றோரிடத்தில் அன்பை எதிர்பார்க்கின்றனர். அவர்களிடமிருந்து நல்ல கண்காணிப்பும் அன்பும் பிள்ளைகளுக்கு கிடைக்குமாயின் அவர்களுக்கிடையிலான உறவு ஆரோக்கியமானதாக அமையும்.

முதலில் தொடர்புகள் ஏற்படுத்தப்படும் இடம் குடும்பமாகும். குடும்பத்தில் பெற்றோர் பிள்ளைகள் தொடர்பு சீரானதாகவும், மகிழ்ச்சியானதாகவும் அமைதல் அவசியம். பெற்றோர்- பிள்ளைகளுக்கிடையில் அத்தகைய தொடர்புகள் ஏற்படாது விட்டால் பிள்ளைகளுக்கு மன முறிவு ஏற்பட ஏதுவாகின்றது. பிள்ளைகள் பற்றிய அக்கறை ஒவ்வொரு பெற்றோரிடமும் இருத்தல் அவசியம்.

பிள்ளைகள் முதலில் பெற்றோரிடத்தில் அன்பை எதிர்பார்க்கின்றனர். அவர்களிடமிருந்து நல்ல கண்காணிப்பும் அன்பும் பிள்ளைகளுக்குகிடைக்குமாயின் அவர்களுக்கிடையிலான உறவு ஆரோக்கியமானதாக அமையும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றும் போது, ஆலோசனைகளை, வழிகாட்டல்களை மேற்கொள்ளும் போது, அவர்களுக்கு பாராட்டுக்கள், கவனிப்புக்கள் வழங்கும்போது பெற்றோர்-பிள்ளைகள் தொடர்பு அதிகரிக்கின்றது.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. சிறுவயதில் நற்பண்புகளைப் பழகாது விட்டால் வளர்ந்தும் கூட அவற்றைப் பெற முடியாது. ஆதலால் பிள்ளைகள் சிறுவயதிலேயே கல்வி ஒழுக்கம், சமூக விழுமியங்களைக் கடைப்பிடிப்பதில் ஆர்வமும் அக்கறையும் கொள்ள வேண்டுமாயின் பெற்றோர்-பிள்ளைகள் தொடர்பு சீரானதாக அமைதல் அவசியம்.

(தொடரும்...)

# ஐக்கிய நாடுகள் சபை

உலக சமாதானம், பாதுகாப்பு மற்றும் அரசியல் , பொருளாதார, சமூக நிலையில் ஒத்துழைப்பு ஆகியவற்றுக்காக உலக நாடுகள் தமக்குள் ஏற்படுத்திக் கொண்ட அமைப்பான ஐக்கிய நாடுகள் சபை, 1945 ஒக்டோபர் 24 முதல் செயல்படத் தொடங்கியது.

ஐ.நா. தனது 18 சுதந்திர சிறப்புக் கழகங்கள், 14 பெரிய திட்டங்கள் மற்றும் நிதியமைப்பு என்பவற்றுடன் செயற்பட்டு வருகிறது. ஆண்டு தோறும் ஒக்டோபர் 24 ஐ.நா. தினமாகக் கொண்டாடப்படுகிறது.

- ஐ.நா சபையின் அலுவலக மொழிகள்: சீனம், அறபு, ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யன் மற்றும் ஸ்பெனிஷ்.



- சின்னம்: இளம் நீலத்தின் நடுவே அமைந்த வெள்ளை வட்டம்.
- உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை: 192

**தலைமையகம்:**

- ஐ.நா. சபையின் ஐந்து உள்ளமைப்புக்கள்: பொதுச் சபை, பாதுகாப்புச் சபை, பொருளாதார சமூக சபை, பொருப்பான்மைக்குழு, பன்னாட்டு நீதிமன்றம் மற்றும் செயலகம்.

**பொதுச்சபை**

ஐ.நா.உறுப்பு நாடுகள் அனைத்தின் பிரதிநிதிகளையும் கொண்டது: உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் தலா ஐந்து பிரதிநிதிகளை இச்சபைக்கு அனுப்பி வருகின்றன. என்றாலும், ஒரு வாக்குரிமையே உண்டு. முக்கிய பிரச்சினைகளில் தீர்மானம் நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வேண்டும். இச்சபை குறைந்தது வருடத்திற்கு ஒரு முறை கூடும்.

ஐ.நா.வின் ஆண்டு வரவு-செலவு திட்டத்தைக் கணக்கிடுவது, பாதுகாப்புச் சபையின் தற்காலிக உறுப்பினர்களையும் தேர்ந்தெடுப்பது, பாதுகாப்புச் சபையோடு சேர்ந்து பன்னாட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளைத் தேர்ந்தெடுப்பது போன்றவை இதன் பணிகளில் சிலவாகும்.


**பாதுகாப்புச் சபை**

இது 15 அங்கத்தினர்களைக் கொண்டது. ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு உண்டு. ஐந்து நிரந்தர உறுப்பினர்களும் இரண்டு ஆண்டுகளுக்கான பத்து தற்காலிக உறுப்பினர்களும் அடங்கியது. ஐந்து நிரந்தர உறுப்பினர்கள் எந்த தீர்மானத்தையும் நிராகரிக்கும் அதிகாரத்தைப் (Veto) பெற்றுள்ளனர்.

**நிரந்தர உறுப்பினர்கள்:**

சீனா, பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா.


# சர்வதேச ஆசிரியர் தினம்





ஒக்டோபர் 06 ஆம் திகதி சர்வதேச ஆசிரியர் தினம் உலகெங்கும் அனுஷ்டிக்கப்படுகின்றது. 1994 ஆம் ஆண்டு முதல் யுனெஸ்கோ (UNESCO) அமைப்பினால் இத்தினம் சர்வதேச ஆசிரியர் தினமாக பிரகடனப் படுத்தப்பட்டு, அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. சில நாடுகள் தமது நாடுகளின் வசதிக்கேற்ப ஆசிரியர் தினத்தை வெவ்வேறு தினங்களில் கொண்டாடினாலும், ஒக்டோபர் 06 ம் திகதியே ஒரு சர்வதேச அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட தினமாக இன்று உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது.

இந்த ஒரு தினத்தை மாத்திரம் ஆசிரியர்களை கண்ணியப்படுத்த, கௌரவப்படுத்த ஒதுக்கிக் கொள்வது மாணவர்களது பண்பாக இருக்க முடியாது. மாற்றமாக, வாழ்க்கை பூராகவும் அவர்கள் கண்ணியப்படுத்தப்பட வேண்டும். இங்கு அலி (றழி) அவர்களது கருத்தை நினைவிற் கொள்ளவேண்டும்.

''எனக்கு யார் ஓர் எழுத்தை கற்றுத் தந்தாரோ,
அவருக்கு நான் அடிமையாக மாறிவிட்டேன்.''




# பிடிவாதம்



தூரத்தில் தெரிந்த வெளிச்சத்தைத் தொடத் துணிந்த விட்டில் பூச்சியிடம் வண்ணத்துப்பூச்சி கேட்டது. ''இறப்பு வருமென்று தெரிந்தும் நெருப்பை தொடுகிறாயே ஏன்?'' விட்டில் சொன்னது, ''வழி தெரிவதற்காகவே வெளிச்சம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். வெளிச்சத்தை சென்று சேர்வதற்கே வழிகள் இருப்பதாக நாங்கள் நினைக்கிறோம்'' என்று.

வண்ணத்துப் பூச்சி சொன்னது, ''உங்கள் இனத்தை எரிப்பது நெருப்பென்று நினைத்தேன். இல்லை. நீங்கள் உங்கள் பிடிவாதத்தாலும் வீண் வாதத்தாலும்தான் எரிக்கப்படுகிறீர்கள்.'' வெளிச்சத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள் எரிந்து போவது இயற்கை.

# உரிமைக்கு முன் கடமை

குளத்தில் விழுந்து மிதந்த மலரொன்று அதிலிருந்த மீனிடம் கேட்டது. ''சுதந்திரத்துடன் இந்தக் குளத்தில் சுற்றிச் சுற்றி நீந்துகிறாயே, உனக்கு இந்தக் குளம் நிறைய உரிமை கொடுத்திருக்கிறதா?'' மீன் சொன்னது: ''இந்தக் குளத்திலிருக்கும் அழுக்குகளையெல்லாம் நான் சுத்தம் செய்கிறேன்.

அந்த வகையில் இந்தக் குளத்தில் எனக்கு நிறைய கடமை உண்டு. கடமையை செய்பவர்களுக்கே உரிமை அதிகம் என்றது மீன்.

சுதந்திரமாய் இயங்க சரியான வழி கடமையைச் செய்வதுதான்.

# www.gatherpage.com

மாணவர்களுக்கு பயனளிக்கும் பல்வேறு இணையத் தளங்களை கடந்த இதழ்களில் அறிமுகப்படுத்தியிருந்தோம். அந்த வகையில் க.பொ.த (சா/த) மற்றும் உயர்தர பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு பிரயோசனமளிக்கும் ஒரு தளம் தான் www.gatherpage.com என்ற இணைத்தளமாகும். இத்தளமானது முக்கியமான பாடங்களுக்கான குறிப்புகள், கடந்த கால பரீட்சை தாள்கள், மாதிரி வினாத் தாள்கள் என பல அம்சங்களை கொண்டிருக்கின்றது. மாணவர்கள் மாத்திரமன்றி ஆசிரியர்களும் இத்தளத்தை பயன்படுத்தி பயன் பெறுவார்கள் என்று நம்புகின்றோம்.

# உங்கள் ஆளுமையை வளர்த்துக் கொள்ளுங்கள்!

மனித வாழ்வில் உங்கள் ஆளுமையை தீர்மானிப்பதில் உங்களுக்கும் ஏனையோருக்கும் இடையிலான தொடர்புகள் முக்கிய இடம் வகிக்கின்றன. உங்களை சூழவுள்ளவர்கள் உங்களை வடிவமைப்பார்கள்.

எனவே, உங்களை சுற்றியிருப்பவர்களில் எப்போதும் அவதானமாக இருங்கள். அவர்கள் உங்களை சிகரத்திற்கும் அழைத்துச் செல்லலாம். அதல பாதாளத்திற்கும் இட்டுச் செல்லலாம்.

வாழ்க்கையில் சாதிக்க நினைக்கும் உங்களுக்கு பிறரின் சகவாசம் இன்றியமையாததாகும். இக்குறிப்புகள் உங்களது ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கான சில வழிகாட்டல்களை வழங்க முயற்சிக்கின்றது.

உங்களுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையிலான தொடர்பினை சீர்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்கும் ஏனையோருக்கும் இடையிலான தொடர்பினை அல்லாஹ் சீர்படுத்திவிடுவான்.

ஏனையவர்களுக்கு ஸலாம் சொல்வதிலும் வாழ்த்துச் சொல்வதிலும் முந்திக் கொள்ளுங்கள். ஸலாத்தின் மூலமாகவும் வாழ்த்துக்கள் மூலமாகவும் ஏனையோர் எம்மை நெருங்குகின்றனர்.

புன்னகை செய்யுங்கள். அதன் செயற்பாடு ஆச்சரியமானது. அது உள்ளத்தை கவர்கிறது.

ஏனையோர் மீது நீங்கள் கொண்டுள்ள கரிசனையையும் மதிப்பையும் வெளிப்படுத்துங்கள். மக்கள் உங்களோடு எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்களோ அவ்வாறே அவர்களுடன் நடந்து கொள்ளுங்கள்.

நன்றாக செவிமெடுங்கள், பேசுபவர் தன்னைப் பற்றி அதிகம் பேச சந்தர்ப்பமளியுங்கள்.

ஏனையோருக்கு நன்றி செலுத்துங்கள். மக்களின் சுக துக்கங்களில் பங்குபற்றுங்கள்.

ஏனையோரின் தேவைகளை நிறைவேற்றுங்கள். ஏனெனில், தேவைகளை நிறைவேற்றும் போது உள்ளங்கள் ஈர்க்கப்படுகின்றன.

நீங்கள் தவறுகளை மன்னிக்க வேண்டும். பொறுமையான மனநிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

அன்பளிப்புகளை வழங்குவதற்கு கஞ்சத்தனம் கொள்ள வேண்டாம், அவை பெறுமதியில் குறைவாக இருப்பினும் கூட. அதன் பெறுமதி பொருளை விடவும் அதிகமானது.

அன்பை வெளிப்படுத்துங்கள். அதனை தெளிவாக சொல்லுங்கள். அன்பு நிறைந்த வார்த்தைகள் உள்ளங்களை ஈர்த்தெடுக்கும்.

அழகிய உபதேசங்களை முன்வைப்பதற்கு முயற்சியுங்கள். அதனை அலங்கோலமாக்கிவிட வேண்டாம்.

ஒவ்வொருவரிடமும் அவருக்கு முக்கியமான விடயத்தை பேசுங்கள். மனிதர்கள் தமக்கு விருப்பமானவற்றை பேசும்போது அத்தகையவர்கள் பக்கம் கவரப்படுவார்கள்.

எப்போதும் நேர்மறை சிந்தனையுள்ளவராகவும் நல்லவற்றை எதிர்பார்ப்பவராகவும் இருங்கள்.

ஏனையவர்கள் ஏதேனும் நல்ல விடயங்களை செய்தால் அவர்களைப் பாராட்டுங்கள். பாராட்டுதல்களுக்கும் புகழ்தல்களுக்கும் உள்ளத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் வல்லமை உள்ளது. எனினும், அளவை மீறிவிட வேண்டாம்.

உங்களது தரத்திற்கு ஏற்ப பேசுவதற்கான வார்த்தைகளை தெரிவு செய்யுங்கள். அழகான வார்த்தைகள் உள்ளங்களை கவர்வதற்கான மிகச் சிறந்த வழிமுறையாகும்.

எப்போதும் பணிவுடன் நடந்துகொள்ளுங்கள். தம்மைப் பற்றிய உயர்வெண்ணம் கொண்டோரை மக்கள் நெருங்க மாட்டார்கள். மாற்றமாக, விரண்டோடுவார்கள்.

மற்றவர்களின் குறைகளைத் தேடுவதில் ஈடுபடாதீர்கள். உங்கள் குறைகளை சீர்திருத்திக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.

அமைதியாக கற்றுக் கொள்ளுங்கள். மக்கள் நன்கு செவிமெடுப்பவர்களை விரும்புவார்கள்.

உங்களை அறிந்தவர்களை அதிகமாக்கிக் கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் புதியதொரு நண்பனை சம்பாதித்துக் கொள்ளுங்கள்.

யாருக்கேனும் நீங்கள் நன்மை செய்தால் அவரிடமிருந்து எதனையும் எதிர்பார்க்காதீர்கள்.

ஒருவரின் மனதை நோகடிக்காது எப்படி இருவருக்கிடையிலான பிரச்சினையைத் தீர்க்கலாம் என்பதை கற்றுக் கொள்ளுங்கள். அத்திறனை ஏனையவர்களுக்கும் கற்றுக் கொடுங்கள்.


இறுதியாக இரண்டு விடயங்கள்:

**ஒன்று,** நாம் ஒவ்வொருவரும் பிறக்கும்போது விருப்பத்திற்குரியவர்களாகவோ, வெறுப்புக்குரியவர்களாகவோ பிறக்கவில்லை. நாம்தான் மக்களை எமது நடத்தைகள் மூலம் எம்மை விரும்புவர்களாகவோ, வெறுப்பவர்களாகவோ மக்களை மாற்றி விடுகிறோம்.

**இரண்டு,** நாம் அடுத்தவர்களுடன் பழகும் போதே அதிகமான தவறுகள் ஏற்படுகின்றன. எம்மில் அதிகமானோர் ஏனையவர்களுடனான சிறந்த தொடர்பினை ஏற்படுத்துவதில் தோல்வியடையக் காரணம், தாம் அடுத்தவர்கள் எமது விருப்பிற்கு ஏற்ப நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகும். ஆனால், நாம் ஏனையவர்களின் விருப்பிற்கு ஏற்ப நடந்து கொள்வதில்லை.

# இஸ்லாமிய பின்புலத்தில் நின்று எழுச்சியைக் கட்டியெழுப்புவோம்

கைரத் ஷாதிர்



**இஃவானுல் முஸ்லிமூன் அமைப்பைப் புனரமைக்கும் பணி உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எழுச்சித் திட்டத்துடன் அதற்குத் தொடர்பிருக்கிறதா?**

எழுச்சித் திட்டம் என்பது நாம் பேசுகின்ற பொது எல்லை. புனரமைப்புப் பணி என்பது இஃவான்களின் செயல்வேகத்தை அதிகரிக்கும் விவகாரம். இது நாம் திட்டமிட்டுள்ள மூலோபாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சக்தியை வழங்கும். அம்மூலோபாயத் திட்டத்தில் முதலாவது, எழுச்சியைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்பது. இதற்காக நாம் ''எகிப்திய மறுமலர்ச்சிக் கூட்டணி'' எனும் நிறுவனத்தை ஏற்படுத்தி அதில் 100/100 எனும் திட்டத்தை உருவாக்கியுள்ளோம். அதற்காக இஃவான்கள் சார்பாக 100 பேரையும் ஏனைய தரப்பிலிருந்து 100 பேரையும் தெரிவு செய்திருக்கிறோம். முதற்கட்டமாக அவர்களுக்கு நிறுவனங்களை மேற்பார்வை செய்வது தொடர்பிலான செறிவான பயிற்சி நெறிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**ஜமாஅத்திலே மாறாத் தன்மை கொண்ட அம்சங்கள் இருக்கும்போது புனரமைப்புப் பணி என்பதன் மூலம் எது நாடப்படுகிறது? நிர்வாக ரீதியான மாற்றமா? அல்லது யாப்பு மாற்றமா?**

புனரமைப்புப் பணி என்பதில் பொதுச் சிந்தனையாக எதிரிடையான அம்சங்களுக்குத் தீர்வுகாணல், புதிய தேவைகளை நிறைவேற்றுவதற்காக வழமையாக பின்பற்றி வரும் நடைமுறை வடிவங்களை பலப்படுத்துதல் போன்றவை உள்ளடக்கப்படும். அவ்வாறே ஜமாஅத்துக்குள் நிலவும் கலாசாரம் புனரமைக்கப்பட வேண்டும். சில சிந்தனா ரீதியான நிலைப்பாடுகள் வரையறுக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட காலம் ஒன்றில் ஜமாஅத் ஏற்படுத்திய மூலோபாயத் திட்டங்கள் மீளாய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். இந்நிலைமை தொடர்வது சரியில்லை. அவ்வாறே தர்பியா முறைமைகள், வழிமுறைகள், சாதனங்கள், பிரதான செயற்களங்கள் என்பனவும் மீளாய்வுக்குட்படுத்தப்பட வேண்டியுள்ளது.

**புனரமைக்கப்பட வேண்டிய பல துறைகள் பற்றிப் பேசினீர்கள். அதை ஒழுங்குபடுத்திச் சொல்ல முடியுமா?**

புனரமைப்புப் பணி எனும்போது அதற்குப் பல கோணங்கள் உண்டு. பிரச்சினைகளுக்கும் எதிரிடையான அம்சங்களுக்கும் செயற்திறனிலுள்ள குறைபாடுகளுக்கும் தீர்வு சொல்வதுடன் தொடர்பானது ஒரு கோணம். ஜமாஅத் கடுமையான அடக்குமுறைக்குட்பட்டதால் ஏற்பட்ட விளைவே இது. கடந்த 20 வருட காலத்தில் 30,000 க்கும் அதிகமானவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். அவர்களில் அதிகமானோர் ஒரு தடைவைக்கு அதிமாக சிறைவாசம் பெறுவோர். இவை தவிர ஜமாஅத்தை வேறுவகையான அடக்கு முறைகளும் பாதித்தன. சமூகத்திற்குள்ளே இஃவான்களுக்கு நெருக்கடிகள் கொடுக்கப்பட்டன. ஜமாஅத் மீது போலிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. மக்கள் மத்தியில் அதற்கெதிராக பெரும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இவற்றின் விளைவாக ஜமாஅத்துக்குள்ளே ஒரு தொகுதி எதிர்மறையான அம்சங்கள் தோன்றின. அவை ஜமாஅத்திற்குள் நிலவும் கலாசாரத்திலும் செயற்படுதல் தொடர்பான இஃவான்களது பார்வையிலும் தாக்கம் செலுத்தின. மட்டுமல்ல ஜமாஅத்தின் யாப்பு, கட்டமைப்பு, தொடர்பாடல் அமைப்பின் எல்லை, கிறிஸ்தவர்கள், கட்சிகள், ஏனையவர்களுடனான தொடர்புகள் என்பவற்றிலும் தாக்கம் செலுத்தின. இவை மாற்றத்திற்குட்பட வேண்டிய அம்சங்கள். ஜமாஅத்தின் யாப்பு விதிகளும் அதன் செயற்பாடுகளும் பாதுகாப்பு விவகாரத்துடன் சம்பந்தப்பட்டே அமைந்திருந்தன. இப்பொழுது நிலைமை மாறியிருப்பதால் முடியுமான அளவு அவற்றில் மாற்றம் கொண்டு வரவேண்டி இருக்கிறது.

**ஜமாஅத்தில் புதிய பிரிவுகளை உருவாக்கும் திட்டம் ஏதுமிருக்கிறதா?**

சமூகப் பணியை அல்லது மக்கள் பணியை ஒருங்கிணைக்க வேண்டியுள்ளது. நாங்கள் சமூக சேவை, நஷ்ருத் தஃவா, மாணவ செயற்பாடுகள் என்றவாறே பொதுப்பணியில் பழக்கப்பட்டிருக்கிறோம். எனினும் தற்போது வேறு பல முக்கியமான பணிகளுக்காக கூட்டணி அமைக்க வேண்டியுள்ளது. பாதுகாப்பு வெற்றிடம், சுகாதாரம், காடு வளர்ப்பு என்பவை உள்ளன. அவற்றுடன் யார் உறவாடுவது?. கடைசியாக இஃவான்களின் தரப்பிலிருந்து புதிய கருத்தொன்று வந்திருக்கிறது. இஃவான்களின் ஒவ்வொரு ஷுஃபாவும் ஒரு திட்டத்தை அல்லது பல திட்டங்களைப் பொறுப்பெடுத்து தமது பிராந்தியத்திலுள்ள ஏனைய அமைப்புக்களுடன் சேர்ந்து அது தொடர்பில் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். அது போன்றே சமூகப் பணிக்கான தனியொரு பிரிவை உருவாக்க வேண்டும் என்ற கருத்தும் உள்ளது. அதனோடு தகவல் தொழில்நுட்பத்திற்கான தனியான பிரிவொன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. அதனை சக்தி வாய்ந்த அமைப்பில் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

**ஓரிடத்தில் இலக்குகளும் நிகழ்ச்சிகளும் மீளாய்வுக்குட்பட வேண்டும் என்று கூறினீர்கள். இலக்குகள் மாறாத் தன்மை வாய்ந்தவை இல்லையா?**

நான் அடிப்படை இலக்குகளை அதன் மூலம் நாடவில்லை. புனரமைத்தல் எனும்போது மூன்று பிரதான விடயங்களை முன்வைத்திருக்கிறேன். அதில் ஒன்று, இஃவான்களது முறைமையில் மாறும், மாறாத் தன்மை வாய்ந்த விடயங்கள். மாறாத் தன்மை வாய்ந்த அம்சங்கள் பற்றிப் பேசும்போது எமது ஒட்டு மொத்தப் பணியைக் குறிப்பிடலாம். அது இஸ்லாமியப் பின்புலத்தில் நின்று எழுச்சியைக் கட்டியெழுப்புவது. இது ஆறு கட்டங்களைக் கொண்டது. இஸ்லாமியப் பின்புலத்தில் தனிநபர் வாழ்வு, வீடு, சமூகம் என்பவற்றை ஏற்படுத்துவது, மக்கள் விவகாரங்களை நிர்வகிக்கும் இஸ்லாமியப் பின்புலம் சார்ந்த அரசை அமைத்தல். உலகளாவிய முஸ்லிம் அமைப்பு, அனைவருக்குமான முஸ்லிம் அமைப்பு.

ஆட்சியைப் பற்றிப் பேசும்போது நாம் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். ஆட்சியை நாம் எங்களுக்குக் கேட்கவில்லை. எனினும் இஸ்லாமியப் பின்புலத்துடன் அரசாங்கம் அமைவது முக்கியம். இலக்குகள் என்பது இங்கு மாறும் தன்மைவாய்ந்த அம்சங்களுடன் தொடர்பானது.

**கலாசாரம் பற்றிச் சொன்னீர்கள். அது மாறாத் தன்மை வாய்ந்ததா? மாறும் தன்மை கொண்டதா?**

சிலர் சிந்தனையையும் கலாசாரத்தையும் மாறாத் தன்மை கொண்டதாக கருதுகிறார்கள், இது சரியானதல்ல. நாங்கள் தற்போதைய கலாசாரத்தை எடுத்துக் கொண்டால் அது மூடுண்டதாக இருக்கின்றது. இது மாறாத் தன்மை வாய்ந்த அம்சமல்ல. தஃவாவில் பெண்களுக்கு ஊழியர் அந்தஸ்தை வழங்குவதில்லை எனும் புரிதல் இருந்தால் அது மாற்றத்திற்குட்பட வேண்டிய ஓர் அம்சம். அதேபோன்றுதான் சில சிந்தனைசார் நிலைப்பாடுகளும் ஸ்த்திரமான நிலைக்கு வரவேண்டும். உதாரணமாக கிறிஸ்தவர்கள் தொடர்பான நிலைப்பாடு. பொதுவாகவே இஃவான்களிடத்திலே இதுபற்றித் தெளிவில்லையென்றெ நான் கருதுகிறேன். ஏனைய முரண்பட்ட சிந்தனைசார் முகாம்களுடனான நிலைப்பாடும் அப்படியே. இவை இஃவான்களின் கலாசாரத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமாயின் இந்த சிந்தனை நிலைப்பாடுகள் வரையறுக்கப்பட்டு தெளிவுபடுத்தப்படல் வேண்டும்.



**அப்படியானால் எது மாறாத் தன்மை வாய்ந்த அம்சங்கள்?**

அடிப்படை இலக்குகளைப் பொறுத்தவரை ஜமாஅத் என்பது அடிப்படை இலக்குகளை நிறைவேற்றுவதற்கான ஒரு சாதனம். ஜமாஅத் மூன்று வழிகளில் பயணிக்கிறது. அறிமுகப்படுத்தல், உருவாக்கம், அமுலாக்கம் என்பனவே அவை. இவை மாறாத் தன்மை வாய்ந்தவை என்பதன் பொது எல்லை. இதிலிருந்து தோன்றும் விரிவான அம்சங்கள் எல்லாம் மாறும் தன்மை கொண்டவை. அது ஜமாஅத்துக்குள் நிலவும் கலாசாரமாக இருக்கலாம், நிகழ்வுகள் குறித்த எமது நிலைப்பாடாக இருக்கலாம், வேலைத் தளங்கள், எமது நிகழ்ச்சித் திட்டங்கள், எமது திட்டங்கள், எமது தர்பியா முறைமைகள், வழி முறைகள், தர்பியா சாதனங்கள்... போன்றவை குறித்து எமது நிலைப்பாடுகளாக இருக்கலாம். அவை மாறாத் தன்மை வாய்ந்தவையல்ல.

**புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நான்கு மாதங்கள் கடந்த நிலையில் தற்போதைய நிலைமை எப்படி இருக்கிறது?**

ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து இப்பணி ஆரம்பிக்கப்பட்டது. ஜமாஅத்துக்குள்ளே மாற்றத்திற்கான தெளிவான மூலோபாயத் திட்டத்தை வடிவமைக்க 4 - 6 மாத காலம் வரை செல்லலாம் என்று வரையறுத்திருக்கிறோம். சில அம்சங்கள் புனரமைப்புப் பணியுடன் முடியுறும் என்று எதிர்பார்க்க முடியாது. அவசரமாக செய்து முடிக்க வேண்டியவைகளை அடையாளப்படுத்தி அவற்றுக்குப் பயிற்சிப்பட்டறை நடத்தி பல கொள்கைசார் முடிவுகளை எடுத்திருக்கிறோம். அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**இவ்வேலைத் திட்டத்தைக் கொண்டு செல்லும் அணி யாது?**


மக்தபுல் இர்ஷாதின் 6 - 8 வரையான அங்கத்தவர்களைக் கொண்ட அணி ஜமாஅத்தின் புனரமைப்புத் திட்டத்தைக் கொண்டு செல்லும். அவற்றுடன் துறை சார்ந்த, அனுபவமிக்க தொழில்நுட்பக் குழுவும் நிர்வாகம், கருத்துக் கணிப்பீடு, புள்ளிவிபரம் தொடர்பில் புலமைத்துவம் கொண்ட அணியும் இணையும். நாங்கள் எமது அங்கத்தவர்களுக்கு புனரமைப்புப் பணி பற்றியும் அதன் ஆழ, அகலம் பற்றியும் விளங்கப்படுத்துகிறோம். பின்பு அது தொடர்பான கருத்துக்களை அவர்களிடம் எதிர்பார்க்கிறோம்.

எங்களிடம் பல கேள்விக் கொத்துகள் உள்ளன. குறிப்பாக கலாசாரம், சிந்தனை நிலைப்பாடுகள், நிகழ்ச்சிகள், பார்வைகள், தர்பிய்யா முறைமைகள், வேலைத் தளங்கள், திட்டங்கள், நிகழ்ச்சி நிரல்கள், கட்டமைப்புக்கள், வழிமுறைகள் தொடர்பிலான கருத்துக்களைப்பெற திறந்த கேள்விக் கொத்தொன்றைத் தயாரித்திருக்கிறோம். பின்னர் பெறப்படும் அக்கருத்துக்களை தலைப்பு வாரியாக பிரித்து ஒவ்வொரு துறையுடன் தொடர்பான கருத்துக்கள் வகைப்படுத்தப்படும். அது தொடர்பில் ஆராய துறை சார்ந்த அணியும், கள அனுபவமிக்க அணியும் பின்பு ஜமாஅத்துக்குள்ளே பணிகளுக்குப் பொறுப்பான அணியும் ஈடுபடுத்தப்படும். கருத்துக்கள் பெறப்பட்ட பின்பு அவை இரு பிரதான பிரிவுகளாக்கப்படும். அவ்விரு பிரிவுகளுக்கும் தனியான வேலைத் திட்டங்கள் காணப்படுகின்றன. பிறகு புனரமைப்புப் பணியில் ஈடுபட்ட அணியை உள்ளடக்கிய ''திட்டமிடலுக்கும் அபிவிருத்திக்குமான சபை'' என்ற பெயரில் சிறிய பிரிவொன்று இயங்கும். புனரமைப்பு வேலைத் திட்டங்கள் தொடர்பான அம்சங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் போய்விடக் கூடாது என்ற அச்சத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்தும் பணியையும் அதைக் கண்காணிக்கும் பணியையும் இச்சபை மேற்கொள்ளும்.

வாலிபம் கலைந்து வனப்பும் குலைந்து
மூப்பினை எய்தியே முதியோர் இல்லத்தில்
பார்த்திடும் தாதியர் பரிவினை வேண்டிய
மூத்தவர் எழுதிய முத்தான வார்த்தைகள்.
*(ஆங்கில அனாமதேயக் கவிதையின் தழுவல்)*

நிழல் வெளி
கவிதைகளுக்கான பக்கம்


# எரிச்சலூட்டும் தடுமாற்ற முதியவன்



*எதைப் பார்க்கிறாய் தாதியே? எனை நீ பார்க்கும்போது*
*எதை எண்ணுகின்றாய்? எரிச்சலூட்டும் தடுமாற்ற முதியவன்,*
*மிகுந்த ஞானமற்றவன், நடையில் நிலையற்றவன், கலக்கமுற்ற கண்கள்,*
*கரங்கள் சிந்திய உணவு, பதில் வழங்காத உதடுகள்.*
*நீ செய்வதே எனக்கு விருப்பம்! உரத்த குரலில் உனது அதட்டல்.*
*நீ செய்யும் செயல்களை கவனிக்க முடியாத கண்கள்*
*காலணியோ வேறெதுவோ எப்போதுமே இழப்பு...*
*உன் விருப்பின் வழியே செயல்கள்...*
*எதிர்க்க முடியாத இயலாமை...*
*உணவுண்ணல் நீராடல் என்பன நீண்ட நாளொன்றின் நிறைவு.*
*நீ என்னைப் பார்ப்பதில்லை, தாதியே! உன் கண்களைத் திற.*
*நான் யாரென்று உனக்கு கூறுவேன். அசைவற்று இங்கிருப்பது போல்*
*உன் கட்டளையின் காலடியில் நான்.*
*உன் விருப்பத்தின் படியே என் உணவு.*
*அகவை பத்தான சிறுவனாக அன்னையோடும் தந்தையோடும்*
*தம்பிகளோடும் தங்கைகளோடும் ஒருவரின் மீது ஒருவர்*
*அன்பு செலுத்திய படி என் நாட்கள் நகர்ந்தன.*
*பதினாறு வயதான வாலிபனாக இளமை பொருந்திய இறக்கைகளோடு*
*கனவுகளை இதயத்தில் சுமந்து இன்புறும் காதலை நாடியபடி...*
*இருபது வயதில் மணமகனாக இதயத்தில் இன்பங்கள் சுரக்க*
*மணவாழ்வின் மகிழ்ச்சி, உடன்பாடு பற்றிய உணர்ச்சியோடு...*
*இப்போது வயது இருபத்தைந்து, மடியிலே என் மைந்தன்*
*அன்பையும் ஆதரவையும் தேடி மகிழ்வான இல்லத்தை நாடி...*
*எனக்கு முப்பது வயதாகையில் என் மகன் விரைவாய் வளர்கிறான்.*
*நாற்பது வயதில் என் மைந்தர்கள் தமக்கான வாழ்வினைத் தேடி*
*எங்கோ போய்விட்டார்கள்.*
*ஆயினும், என் மனைவி என்னருகிலிருந்தாள்*
*நான் அழக்கூடாது எனும் ஆர்வத்தில்.*
*ஐம்பது வயது, மீண்டுமொரு முறை என் பாதங்கள் தத்தும் மழலைகளாயின.*
*இருள் சூழ்ந்த நாட்கள் எனைச் சூழ்ந்தது.*
*எனதான துணையும் மண்ணகம் சென்றது.*
*எதிர்கால ஏக்கத்தில் நான் பயத்துடனும் பலவீனத்துடனும்...*
*என் மைந்தர்கள் வளர்கிறார்கள், அவர்களின் புதல்வர்களும் கூடவே.*
*இன்று நான் மூப்பின் மூலையில் முடங்கிக் கிடக்கிறேன்.*
*மூப்பினைப் பார்த்து எல்லோருக்கும் நகைப்பு*
*இயலாதோன் என்ற இகழ்ச்சி, கூனுற்ற மேனி, குழி விழுந்த கண்கள்*
*வீரமும் வேட்கையும் விலகியே சென்றிட கல்லொன்று இருக்கிறது இங்கே.*
*முன்பு அங்கேதான் என் இதயமும் இருந்தது.*
*மூப்பெய்தி முடிந்த உடலினுள் இன்னுமோர் இளைஞனின் நடமாட்டம்.*
*இன்று மீண்டும் மீண்டும் இடிந்த என் இதயத்தில் இன்பம்.*
*இன்பங்களையும் துன்பங்களையும் எண்ணிப் பார்க்கிறேன்.*
*அன்பாய் இருந்தேன், அகமகிழ்ந்தேன்,*
*முற்றுப் பெறும் வாழ்வு இன்று. காலங்களை எண்ணிப் பார்க்கிறேன்*
*அனைத்தும் மிகவும் சொற்பம். எத்தனை வேகமாய் சென்றிற்று.*
*அழியா உண்மையை அறிந்து கொண்டேன் - வாழ்வில் ஏதும் நிலைப்பதில்லை.*
*இனிமேலேனும் கண்களைத் திறந்து பார் மானிடமே!*

அ. றொபின்சன்

# வாப்பாவின் காலம்




நோனா மகன்

இரண்டு வருட பிரிவிற்குப் பின்னான
என் பார்வையில்
யாவும் புதிது புதிதாக
குசலம் விசாரித்துக் கொண்டிருந்தன.
நான் வாப்பாவை விழித்தபடி நின்றேன்.
மனிதர் எப்படி மாறிப் போய் விட்டார்.
மூப்பும் மரணமும்
காலங்களை வென்றபடி
சுவாசம் செய்து கொண்டிருப்பதை
என்னால் உணர முடிந்தது.
வாப்பாவுக்கு மூப்பும்
புதிது புதிதாக நரையும்
மேவிக் கிடப்பதைப் பார்க்கும்போது
இலட்சம் பொழுதுகளுக்குள்
எனக்கான அச்சம் மனசில்
ஊறிப் பரவுகின்றது.
வாப்பாவை முதுமை மரணத்திற்காக
ஒழுங்கு செய்து கொண்டிருப்பதை
நான் ஏற்றுக் கொண்டேன்.
வாப்பாவின் மிருதுவான முகத்தில்
சுருக்கங்கள் விழுந்திருந்தன.
கருகருவென்ற தாடியும்
வெண்மை சுமந்து காற்றிலாடி
அசைந்து கொண்டது.
என் வெளிநாட்டுப் பயணத்தின் பின்
நான் கண்ட உண்மை,
மூன்றாம் உறவின் துணையுடன்
வாப்பாவின் காலம் கடந்து செல்கிறது.

# கொந்தளிப்பு

**(குறுங்காவியம்)**

ஆசிரியர் - பாலமுனை பாறூக்
பக்கங்கள் - 96
வெளியீடு -
நல்லுறவு வெளியீடகம்,
சாய்ந்தமருது
தொடர்புகளுக்கு - 0718 035305



தென்கிழக்கு முஸ்லிம்களின் வாழ்வியலைப் பேசும், புலப்படுத்தும் படைப்பே கவிஞர் பாலமுனை பாறூக்கின் ‘கொந்தளிப்பு’ எனும் குறுங்காவியம்.

ஒரு படைப்பாளனின் படைப்பு எப்போதுமே தமது மண்ணோடும் வாழ்வியலோடும் இணைந்ததாகவே இருக்கும். அதுதான் இயல்பும்கூட. அத்தகைய படைப்புகள்தான் எதிர்கால சந்ததியினருக்கான வரலாற்று ஆவணமாகவும் நிலைத்து நிற்கின்றன.

இங்கு கவிஞர் பாறூக்கின் குறுங்காவியம் அத்தகையதொரு பணியைத்தான் செய்கிறது. இலக்கியம் என்ற வரையறைக் கப்பால் அது ஒரு வரலாற்று ஆவணம். தனதான மண்ணின் சுயம் பற்றிய பதிவு என்றும் குறிப்பிடலாம். இலக்கியங்கள் மூலமாக தமது பிரதேச மக்களின் அரசியல், மொழி, பண்பாடு, கலாச்சாரம், வரலாறு என்பவற்றைப் பேச முடியும் என்பதற்கு இது சிறந்ததொரு எடுத்துக் காட்டு.

இந்தக் குறுங்காவியத்தில் ஆதம் காக்கா எனப்படும் ஏழை விவசாயிதான் பிரதான பாத்திரம். அவரின் அன்றாட வாழ்வோடு தொடர்புபட்டதாகவே இக்காவியம் நீள்கிறது. அவரின் மனக் கொந்தளிப்பு சுனாமி பேரவலத்தின் பின்னணியோடு தொடர்புபட்டதாக எழுகிறது.

அணிந்துரையில் கவிஞர் மு.சடாட்சரன் குறிப்பிடும் போது; இதில் ஏழை விவசாயியான ஆதம் காக்காவின் மனக் கொந்தளிப்புக்கள் பல்வேறு காட்சிகளில் துலாம்பரமாக பளிச்சிடுகின்றன. படிப்பவர் தமது மனக்கண்ணிலே அவற்றைத் தெளிவாகக் கண்டு ரசிக்கக் கூடியதாக இக்காவியம் அமைந்திருப்பது மெச்சத்தக்கது.

தென்கிழக்கு முஸ்லிம் சமூகத்தின் முப்பது வருடங்களுக்கு முந்திய ஒட்டுறவுள்ள சீரான வாழ்க்கை; சுனாமி அடித்ததாலும் துறைமுகம் அமைத்ததாலும் வேளாண்மை வெட்டும் மெசின் வந்து வட்டைக்குள் இறங்கியதாலும் முற்று முழுதாக சிதைந்து போனதை எண்ணி ஆதம் காக்காவின் மனம் கொந்தளிப்பது இயல்பானதாகக் காட்டப்படுகின்றது என்று தொடர்ந்து செல்கிறார்.

இந்தக் காவியத்திலுள்ள இன்னுமொரு சிறப்பம்சம்; குறித்த பிரதேச வழக்காற்றுச் சொற்களை கையாண்டிருப்பது. குறித்ததொரு பிரதேசத்தின் வாழ்வியலில் அந்தப் பிரதேச மொழிக்கென்று தனித்துவம் இருக்கிறது. அதனை கவிஞர் இக்குறுங்காவியத்தில் கையாண்டிருப்பது தொகுதியை மேலும் கனதிப்படுத்துகிறது.

சுனாமியின் கோரத் தாண்டவம் இலங்கையின் பல பிரதேசங்களை அழித்தது நாம் அறிந்ததே. அதிலும் குறிப்பாக கிழக்கில் பலரது வாழ்வியலைக் கிழித்துப் போட்டதும் நமக்குத் தெரிந்த விடயம்தான். அதையே அட்டைப் படமாக அமைத்திருக்கிறார் கவிஞர்.

உடைந்து போன தனது வீட்டின் இடிபாடுகளுக்கிடையே சிறுமியொருத்தி மட்டும் அழுது கொண்டிருக்கிறாள். அவளின் அருகில் அவளைப் போலவே ஒற்றைத் தென்னை மரமும் தனித்து நிற்கிறது. பின்னணியில் கிழக்கின் வாழ்வியலோடு பின்னிய விவசாயத்தைப் புலப்படுத்தும் கதிர்களுடன் காட்சியளிக்கும் நெல்வயல் இருக்கிறது. நேர்த்தியான அட்டைப்படம்.

கவிஞர் பாலமுனை பாறூக் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக கவிதைகள் எழுதி வருபவர். ஏற்கனவே பதம், சந்தனப் பொய்கை ஆகிய கவிதை நூல்களைத் தந்தவர். அவர் தனது குறிப்பில் பேசும் போது; தென்கிழக்கு முஸ்லிம் பிரதேசத்தாரின் கலாச்சார, பாரம்பரிய, வாழ்வியல் கூறுகளைப் படம் பிடிப்பதாகவும் காட்சிப்படுத்துவதாகவும் அவர்களின் அரசியல், பொருளாதாரம், தொழில், இருப்பு என்பன தொடர்பாகப் பேசுவதாகவும் இக்குறுங்காவியம் அமைந்து வந்திருப்பதானது எனக்குத் திருப்தியைத் தருகிறது என்கிறார்.

இக்குறுங்காவியத்தின் முடிவில் இரண்டு ரசனைக் குறிப்புகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒன்று கவிஞர் முல்லை வீரக்குட்டியினுடையது. அடுத்தது நா.செல்வநாதனுடையது.

அணிந்துரையில் றமீஸ் அப்துல்லாஹ் குறிப்பிடுவது போல, தென்கிழக்குப் பிரதேச முஸ்லிம்களின் வாழ்வினைப் புலப்படுத்தும் குறிப்பிடத்தக்கதொரு படைப்பாக கவிஞர் பாறூக்கின் கொந்தளிப்பு அமைந்துள்ளது. இலக்கியத்தின் ஒட்டுமொத்தப் பணியினை தன் படைப்பின் மூலம் அவர் வெளிப்படுத்தியுள்ளார். அவரின் பணி தொடர வாழ்த்துக்கள்.

நாஸிக் மஜீத்

# ஹஜ் காலத்தில் நிறைவேற்றப்படும் குர்பான் கடமை தொடர்பில் அச்சம்

## -வை.எம்.எம்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கை

இஸ்லாத்தின் இறுதிக் கடமையான ஹஜ் காலத்தில் நிறைவேற்றப்படும் குர்பான் கடமை தொடர்பில் அச்சம் ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை தெரிவித்துள்ளது.

இது குறித்து அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.யின் தேசிய பொதுச் செயலாளர் பைஸல் ஜிப்ரி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கையில் தொன்று தொட்டு முஸ்லிம்கள் ஏனைய சமூகங்களோடு ஐக்கியமாகவும், சமாதானமாகவும் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன், முஸ்லிம் சமூகம் இந்நாட்டின் சுதந்திரத்துக்கும், அபிவிருத்திக்கும் பல வழிகளிலும் அளப்பரிய பங்களிப்பை வழங்கி வந்துள்ளது.

முஸ்லிம் சமூகம் தனது சமயக் கடமைகளை எவ்விதமான இடையூறுகள், தடைகள் இல்லாமல் சுதந்திரமாக நிறைவேற்றுவதற்கு அவ்வப்போது நாட்டை ஆட்சி செய்து வந்த ஆட்சியாளர்கள், அரசாங்கங்களிடமிருந்து பூரண பாதுகாப்பையும், அனுசரணையையும் பெற்று வந்துள்ளது.

இருப்பினும், அண்மைக் காலமாக முஸ்லிம்கள் தமது சமய கடமைகளை நிறைவேற்றுதில் பல்வேறு தடைகளையும் இடையூறுகளையும் எதிர் நோக்குகின்றனர். இது குறித்து அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவை மிகுந்த கவலையடைகின்றது.

குறிப்பாக இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் இறுதியான ஹஜ் கடமையை நிறைவேற்றும் காலத்தில் முஸ்லிம்களின் சமய கடமையாகிய குர்பானை நிறைவேற்றுவதில் பல தடைகளையும், அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

அக்கடமையை சுதந்திரமாக நிறைவேற்றுவதற்கு மக்கள் சேவையில் உள்ள சிலர் எதிர்காலத்தில் தடைகளை விதிக்கலாம் எனவும் அச்சமடைகின்றது. உலகளாவிய முஸ்லிம் உம்மாவுடன் இணைந்து, இலங்கை வாழ் முஸ்லிம்களும் ஏனைய சமயங்களை பின்பற்றும் மக்களின் சமய உணர்வுகளைப் புண்படுத்தாத விதத்தில் மிகுந்த ஒழுக்கத்துடன் குர்பான் கடமையை கடந்த காலங்களில் நிறைவேற்றி வந்துள்ளார்கள்.

**எனினும், அண்மை காலத்தில் வெளியிடப்பட்டுள்ள சிலரின் அறிக்கைகள் முஸ்லிம்கள்** ஹஜ் காலத்தில் நிறைவேற்றுகின்ற குர்பானி போன்ற கடமைகளை இம்முறை நிறைவேற்றுவதை மிகவும் பாதிப்படையச் செய்யலாமென கருதுகின்றனர்.

இது முஸ்லிம்கள் மத்தியில் விரும்பத்தகாத பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இந்நாட்டில் தற்போது நிலவுகின்ற சமாதான, அமைதி வாழ்வுக்கும் குந்தகம் விளைந்திடுமோ என்ற அச்சம் மேலிட்டுள்ளது.

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பு, இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரஜையும் தனது சமயக் கடமைகளை எவ்வித இடையூறுகளுமின்றி நிறைவேற்றுவதற்குரிய உத்தரவாதத்தை வழங்கியிருப்பதை இவ்விடத்தில் நாம் வலியுறுத்த விரும்புகின்றோம்.

எனவே, முஸ்லிம்கள் எதிர்வரும் ஹஜ் காலத்திலும், இதற்குப் பின்னரும் குர்பான் உட்பட ஹஜ் தொடர்பான கடமைகளை சுதந்திரமாக நிறைவேற்றுவதை உறுதிப்படுத்தவும் அரச அதிகாரிகள் மற்றும் அரசியல் சார்ந்தவர்களுக்கும் இது விடயத்தில் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆவன செய்ய வேண்டும் என அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவை இந்நாட்டு முஸ்லிம்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றது.

## இலங்கை முஸ்லிம்களின்... (03ம் பக்கத் தொடர்)



மிகவும் அதிகரித்திருக்கிறது. மொழியை ஒரு ஃபெஷன் என்பதற்கு அப்பால் சிந்திக்கும் பண்பு நம்மில் ஏற்படவேண்டும்.

பலருக்கு தமிழைப் பேச முடிந்தாலும், அதனை எழுத வாசிக்கத் தெரியாத நிலை பொதுவாகக் காணப்படுகிறது. இன்னும் சிலர் அரைகுறைத் தமிழில் பேசுகின்றனர். இது பேச்சு வழக்குத் தமிழ் அல்ல. மாறாக, வேறு மொழியை முதல் மொழியாகக் கொண்டவர்கள் அங்கொன்று இங்கொன்றாக தமிழ்ச் சொற்களை இணைத்துப் பேசும் நிலை. ஒருவகையில் கொச்சைத் தமிழ் என்றும் சொல்லலாம்.

வீட்டில் ஒரு மொழி, வெளியில் ஒரு மொழி, பாடசாலையில் ஒரு மொழி, பள்ளிவாசலில் ஒரு மொழி என்ற நிலை எவ்வளவு தூரம் ஆரோக்கியமானது என்பதை நாம் விவாதத்திற்கு உட்படுத்த வேண்டும். பொதுவாக ஒரு மொழிப் பண்புள்ள பிரதேசங்களில் (வடக்கு கிழக்கில்) இது அவ்வளவு பிரச்சினைக்குரிய விடயமல்ல. ஆனால், இரு மொழி அல்லது மும்மொழிப் பண்புள்ள பிரதேசங்களில் இது பாரிய பிரச்சினையாக எதிர்காலத்தில் உருவெடுக்கும். முஸ்லிம்கள் இரு மொழித் திறன் வாய்ந்தவர்கள், மும்மொழித் திறன் வாய்ந்தவர்கள் என்ற நிலை படிப்படியாக மாறி வருகிறது.

இந்நிலையை நாம் இப்போதே உணர்ந்து போதிய முன் தயாரிப்புகளைச் செய்ய வேண்டும். ஒரு சமூகத்தின் மொழித் தெரிவை வெளியிலிருந்து தீர்மானிப்பது மிகவும் கடினம்.

இலங்கை முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை சிறுபான்மையாக உள்ள நாம், நமது மொழி பற்றி கூடுதல் பிரக்ஞையுடன் செயற்பட வேண்டும். பல்வேறு மொழிகளைப் பேசுவதால் நமக்கிடையே கருத்துக்களைப் பகிர முடியாத இடைவெளிகள் ஏற்பட்டு விடவும் கூடும். இந்த இடைவெளி அதிகரிப்பது பல வகையில் ஆபத்தானது. ஆதலால், நமது முதல் மொழி எது, நமது இரண்டாம் மொழி எது என்ற விடயத்தில் நாம் திறந்த விவாதத்திற்குத் தயாராக வேண்டும். அதன்மூலம் ஆரோக்கியமான தீர்வுகளை நோக்கி நகர வேண்டும்.

## ஹரீஸ், பைஸல் காஸிம் ... (01ம் பக்கத் தொடர்)

கல்முனையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் தனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் ஹரீஸ் செயற்பட்டதாக பைஸல் காஸிம் குற்றம் சுமத்தியுள்ளார். அத்தோடு கல்முனை மாநகர சபைத் தேர்தலில் மு.கா. தனித்துப் போட்டியிட எடுத்த தீர்மானம் தவறானது எனவும் ஐ.ம.சு.மு.உடன் இணைந்தே போட்டியிட்டிருக்க வேண்டும் எனவும் ஹரீஸ் கூறியுள்ளதாகவும் பைஸல் காஸிம் மேலும் தெரிவித்துள்ளார்.

இது கட்சிக் கட்டுப்பாட்டை மீறும் செயல். தலைமைத்துவத்தையும் கட்சி உயர் பீடத் தீர்மானத்தையும் பகிரங்கமாக விமர்சித்துள்ளதால் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கூறும் கடிதமொன்றை கட்சித் தலைவர் றவூப் ஹக்கீமுக்கு பைஸல் காஸிம் அனுப்பியுள்ளார். தன்னிடம் ஹரீஸ் ஆற்றிய உரையின் ஒலிப்பதிவு ஆதாரமாக உள்ளதாகவும், அவசியமாயின் அதனைச் சமர்ப்பிக்க முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, மு.கா.வின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அரசு பக்கம் தாவக் கூடும் என்ற பேச்சுக்கள் அடிபடுகின்றன.

## தேர்தல் செலவுக்கு... (04ம் பக்கத் தொடர்)

பத்தில் ஒரு வேட்பாளர் கூறியிருந்தார். வேட்பாளர் ஒருவரை நியமிப்பதற்கு அவர் தனது கட்சிக்கு நிதிப் பங்களிப்புச் செய்வது ஒரு முக்கியமான அளவுகோலாக மாறியுள்ளது. கொழும்பு மாநகர சபைக்கான ஐ.ம.சு.மு. வேட்பாளர் முஹம்மத் மஹ்ரூப், கடந்த காலத்தில் நடந்த இரண்டு தேர்தல் பிரச்சாரங்களுக்கு தான் 1000 மில்லியன் ரூபாவை ஐ.தே.க. தலைவருக்கு வழங்கியதாக சமீபத்தில் கூறியிருந்தார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களமோ, லஞ்ச ஊழல் ஆணைக்குழுவோ முஹம்மத் மஹ்ரூப் எவ்வாறு இவ்வளவு பெரிய தொகைப் பணத்தைப் பெற்றுக்கொண்டார் என்ற விசாரணை எதையும் தொடங்கவில்லை என்பதுதான் முரண் நகை. இவ்வாறான கூற்றை எதிர்க்கட்சி அரசியல்வாதி ஒருவர் கூறியிருந்தால் அவை உடன் செயலில் இறங்கியிருக்கும்.

மூன்றாவதாக, 1978 அரசியலமைப்பு மிகையாக மையப்படுத்தப்பட்ட மத்திய முறையொன்றையே எமக்குத் தந்துள்ளது. இதன் பிரகாரம் உள்ளூராட்சி மற்றும் மாகாண மட்ட பிரதிநிதிகள், நிர்வாகிகள் ஆகியோர் மத்திய அரசிற்கு அடிபணிந்தோராகவே இருக்கின்றனர். இந்த மிகையான மையப்படுத்தப்பட்ட மத்திய முறையை மாற்றியமைப்பதற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை முக்கிய தடையாக உள்ளது. இந்த அரசியல் சட்டகம் இதை சாத்தியமற்ற ஒன்றாகவே ஆக்கியுள்ளது. கடைசியில் எல்லாம் அலரி மாளிகையில் இருந்துதான் வரும் என்று வாக்காளர்கள் எண்ணுவது இதனால்தான்.

இந்த மூன்று காரணிகளும் இலங்கையின் தேர்தல் அமைப்பை முழுமையாக மாற்றியமைத்துள்ளன. இதனால், ஜனாதிபதித் தேர்தல் மட்டுமே முக்கியத்துவம் வாய்ந்த ஒரேயொரு தேர்தலாக உள்ளது. அத்தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதன் பின்னர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியொருவர் தெரிவுசெய்யப்பட்டு விடுவார்.

சக்தி வாய்ந்த கொழுத்த பண முதலைகள் தேர்தலுக்குப் பின்னர் லாபம் சம்பாதிப்பதற்காக தேர்தலுக்கு முன்னே பெரும் தொகை பணத்தை வீசுகின்றனர். ஆதலால் இந்த முறையை ஒட்டு மொத்தமாக மாற்றியமைக்க வேண்டுமே தவிர, கட்டம் கட்டமான சீர்திருத்தங்களால் குறிப்பிடத்தக்க, நீண்ட கால விளைவுகளை உருவாக்க முடியாது.

## இனிமேலாவது... (12ம் பக்கத் தொடர்)

லாம் அங்கனம் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்ததற்கான அடையாளங்களாகவும் மறுக்கவே முடியாத வரலாற்றுச் சின்னங்களாகவும் இந்த சியாரம்கள் இருந்து வந்திருக்கின்றன. இந்த யதார்த்தத்தை எம்மால் மறுக்க முடியாது.

ஆனால், மறுபுறத்தில் இவை அழிக்கப்பட்டபோது அது தங்களது முன்னோர்களின் ஆதாரங்களை தாமே அழித்துத் தீர்த்து விட்ட செயலாகவும் மாறி விட்டது.

அன்று தமது கொள்கைக்காக முஸ்லிம்களே சியாரம்களை மூர்க்கமாக உடைத்துத் தரை மட்டமாக்கியபோது ஆதரித்தும் ஆமோதித்தும் நின்றவர்கள், இன்று அதே செயலை அந்நியர்கள் அதிகார வெறியுடன் புரியும்போது... எந்தவிதமான உணர்ச்சியை வெளிப்படுத்துவது என்று தெரியாமல் திகைத்து நிற்கின்றனர்.


மீள்பார்வை

**உள்நாட்டு - வெளிநாட்டு சந்தா விபரம்**

மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 30.00
ஆறு மாத சந்தா - ரூபா 450.00
ஒரு வருட சந்தா - ரூபா 900.00

இந்தியா
தனிப் பிரதி - ரூபா 75.00
ஒரு வருடம் - ரூபா 2000.00

மத்திய கிழக்கு நாடுகள், மலேசியா
தனிப் பிரதி - ரூபா 90.00
ஒரு வருடம் - ரூபா 2500.00

ஐரோப்பிய நாடுகள், ஜப்பான், தென்கொரியா
தனிப் பிரதி - ரூபா 120.00
ஒரு வருடம் - ரூபா 3000.00

காசுக் கட்டளை அனுப்ப விரும்புபவர்கள், காசுக்கட்டளை பெறுவோர்: Meelparvai Publishers எனவும், தபால் நிலையம்: Grandpass எனவும் குறிப்பிட்டு அனுப்புமாறு வேண்டுகிறோம். முகவரி: MMC, 2A, Hill Castle Place, Bandaranayake Mawatha, Colombo 12.

MMC

மீள்பார்வை

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/101/NEWS/2011 - ISSN 2012-5038

www.meelparvai.net

தினமும் புத்தம் புதிய
செய்திகளுடன்...

பேசவும் பகிரவுமாய்...

அய்யாஷ் ஃபாராபி

# புரட்சிக்குப் பிந்திய இஸ்லாமிய அரசு பற்றிய விவாதம்



**தூனீசியாவிலும் எகிப்திலும் தேர்தல் காலம் நெருங்கி வருகிறது. எதிர்கால இஸ்லாமிய அரசு எவ்வாறு அமையும் என்ற பலமுனை விவாதங்கள் அறபுலகெங்கும் இடம்பெற்று வருகின்றன. பல பத்தாண்டுகளாக அடக்குமுறையும் ஒடுக்குமுறையும் சர்வாதிகாரமும் நிறைந்திருந்த மதச்சார்பற்ற அரசுகளுக்கு மாற்றீடாக புதிய முறைகள் உருவாகுமா என்ற எதிர்பார்ப்புகள் உலகெங்கும் எழுந்துள்ளன.**

''அதுதான் எதிர்காலத்தின் போராட்டமாக அமையும்'' என்கிறார் தூனீசிய இஸ்லாமிய அரசியல் சிந்தனையாளரான ராஷித் அல் கனூஷியின் சுயசரிதையை எழுதியவரும் இஸ்லாமிய அரசியல் துறை அறிஞருமான கலாநிதி அஸாம் தமீமி. புரட்சிக்குப் பிந்திய நாடுகளில் அரசியல் போட்டி ஏற்படப் போவது இஸ்லாமியவாதக் கட்சிகளுக்கும் மதச் சார்பற்ற சக்திகளுக்கும் இடையில் அல்ல. மாறாக, வெவ்வேறு போக்குடைய இஸ்லாமிய செயற்பாட்டாளர்கள் மத்தியிலேயே இது ஏற்படும் என தமீமி மேலும் கூறுகிறார்.

''மார்க்க ஈடுபாடுள்ள மக்களது எதிர்பார்ப்புகளை ஈடுசெய்யும் வல்லமை யாரிடம் உள்ளது என்பதே எதிர்காலத்திற்கான உண்மையான போட்டியாக அமையப் போகிறது'' என அவர் மேலும் தெரிவிக்கிறார்.

''மதச்சார்பற்றவரா அல்லது இஸ்லாமியவாதியா என்ற போட்டியை விடுத்து, யார் இஸ்லாமியவாதி அல்லது யார் அதிகளவு இஸ்லாமியவாதி என்பதாகவே இனி போட்டி அமையும்.''

தூனீசியாவிலும் எகிப்திலும் தேர்தலுக்கான நாட்கள் குறிக்கப்பட்டு விட்டன. எகிப்தில் இஹ்வான்கள் பெருமளவு வாக்குகளைப் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. தூனீசியாவிலும் அந்நஹ்ழா இயக்கம் செல்வாக்கு மிக்கதாக அமையும் எனவும் நம்பப்படுகிறது.

ஆனால் லிபியாவிலும் சிரியாவிலும் நிலமை வேறுபட்டதாகவே உள்ளது. முற்று முழுதாக சிதைந்து போன லிபியாவில் அரசைக் கட்டியெழுப்புவது சவால் மிகுந்த பணியாகவே அமையும். சிரியாவின் சர்வாதிகாரத்தை மாற்றியமைப்பதும் எளிதான காரியமல்ல.

திட்டவட்டமான தேவைகளை எதிர்பார்த்து நிற்கும் மிகவும் திறந்த சமூகத்தையே இஸ்லாமியவாதிகள் எதிர் நோக்கியுள்ளனர். உடனடியாக எழுந்துள்ள புதிய கேள்விகளுக்கு பதில் தேட வேண்டிய கடப்பாட்டில் அவர்கள் உள்ளனர். இது ஒரு திருப்பு முனை என்கிறார் கெய்ரோவிலுள்ள இஸ்லாமிய சட்ட மற்றும் அரசியல் துறை அறிஞர் இமாத் ஷாஹின். இப்போது அறபுலகெங்கும் துருக்கிய மாதிரி குறித்தும் பரவலாக விவாதிக்கப்படுகிறது.



நன்கு அறியப்பட்ட அறிஞரும் இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் பிரதித் தலைவருமான கலாநிதி அஹ்மத் டோட்ன்ஜி கொழும்பில் முன்னணி இஸ்லாமிய செயற்பாட்டாளர்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார். ஈராக்கை பிறப்பிடமாகக் கொண்ட இவர் தற்போது அமெரிக்காவில் வசித்து வருகிறார். இதனை இலங்கை ஜமாஅதே இஸ்லாமி ஏற்பாடு செய்திருந்தது. இதற்கு டொக்டர் நாஜிம் தலைமை தாங்கினார். கலாநிதி அவர்கள் பற்றிய அறிமுகத்தை The Trend சஞ்சிகை ஆசிரியர் ஆஸிம் அலவி வழங்கினார்.







Published by Meelparvai Media Centre, 2A, Hill Castle Place, Bandaranayaka Mawatha, Colombo 12. Printed at A.J. Prints, Station Road, Dehiwala.